DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

IMMIGRATION MATTERS?
OUR SERVICE ARE:
Immigration and Refugee
Landlord and Tenants
Small Claims Matters
Provincial Offences
416-334-9464

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

27ம் ஆண்டில்...
27 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எதிர்க்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit

உதயம் 1506 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 14, 2025

# டொனால்ட் டிரம்பின் பொருளாதாரப் போரிற்கு எதிராகப் போராடுகையில், கனடா ‘எந்த அளவிலான பாதிப்புக்களையும் ஏற்றுக்கொள்ள தயாராக இருக்க வேண்டும்’

## முன்னாள் கனடியப் பிரதமர்களில் ஒருவரான ஸ்டீபன் ஹார்பர் தேசிய ஊடகங்களுக்குத் தெரிவிப்பு



கடந்த 11ம் திகதி செவ்வாயக்கிழமை ஒட்டாவாவில் தனது சமீபத்திய அரசியல் வரலாற்றுப் புத்தகமான ”கனடாவின் கொடிகள்” வெளியீட்டு விழாவில் பேசிய முன்னாள் பிரதமர்களில் ஒருவரான ஸ்டீபன் ஹார்பர் அவர்கள் தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உட்பட கனேடிய தேசியவாதத்தில் ஏற்பட்ட எழுச்சியையும் போராட்ட உணர்வையும் வரவேற்றுப் பேசினார்.
அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் அச்சுறுத்தல்களை எந்த விலையைக் கொடுத்து என்றாலும் இந்த நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க உறுதியுடன் எதிர்கொள்ள வேண்டும் என்று முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் கூறினார்.
(தொடர்ச்சி 12ம் பக்கம்)



# வடக்கின் ஆளுநர் அற்ப பதவிக்காக தமிழ் மக்களை அடகு வைக்க வேண்டாம் என பொது மக்கள் கோரிக்கை



சட்டவிரோத தையிட்டி விகாரையை வட மாகாண ஆளுநர் தனது அற்ப பதவிக்காக தமிழ் மக்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் அடகு வைக்க வேண்டாம் என தமிழ் தேசிய மக்கள் கட்சியின் ஆதரவாளர்கள் தையிட்டியில் கூடிநின்ற போது தெரிவித்துள்ளனர்..
இன்று புதன்கிழமை வலி வடக்கு தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ விகாரையை அகற்றுமாறு இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்
அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வட மாகாண ஆளுநர் தனது பதவியை தக்க வைப்பதற்கும் எதிர்காலத்தில் பதவிகளை எதிர்பார்ப்பதற்கும் தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்றக்கூடாது என்பதில் அக்கறையாக உள்ளார்.
அதேபோல் அரசியல் கோமாளி ஒருவரும் தையிட்டி விகாரையை அகற்றக்கூடாது என கூறி வருவது திட்டமிட்ட அரச முகவர்களாக இவர்கள் செயற்படுகிறார்கள்.
தையிட்டி சட்டவிரோத விகாரை போராட்டத்தை கொச்சைப்படுத்தியவர்கள் 12ம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற மக்கள் போராட்டத்தை பார்த்திருப்பார்கள் மக்களின் உணர்வுகளை அறிந்திருப்பார்கள். (தொடர்ச்சி 4ம் பக்கம்)

SHIYARA FINANCIAL SERVICES
(An Agency for the Real Estate, Mortgage & the Finance)
வீடு-வியாபார நிலையங்கள் வாங்க, விற்க
Mortgages - Refinancing
Equity Line of Credit
Personal - Business Loans
Line of Credits - Credit Cards
Debt Consolidation
கிருஷ்ணா - KRISHNA
(647) 308-6069
shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள்**
**ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய காத்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca

11/24




## காப்புறுதி மற்றும் நிதி சம்பந்தமான சேவைகளுக்கு இலவசமாக ஆலோசனை வழங்கப்படும்

**416.892.3249**

"JOIN OUR TEAM HIRING NEW ADVISORS! TRAINING PROVIDED!"

**GTS Life Insurance & Investments Inc.**

- Life Insurance
- Mortgage Insurance
- Critical Illness Insurance
- Disability Insurance
- Health Insurance
- Travel Insurance
- Retirement & Estate Planning
- Tax Sheltered Savings & Investments
- RRSP, RESP, RIF and LIF
- Segregated Funds
- Business Protection
- Long Term Care



**குரு தேவராஜன்**
B.Sc.(B.E), M.Sc (Arch)

**GURU Thevarajan**
Insurance Advisor B.Sc.(B.E), M.Sc (Arch)

**416.892.3249**

Email: **tnkuru@hotmail.com**

313 - 2100 Ellesmere Road, Scarborough, ON M1H 3B7
Tel: 416.754.9492 & 416.754.7251 Email: gtslife123@gmail.com
www.gtslifeinsurance.ca

## NISSAN | VILLAGE NISSAN

**தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்**

2025 **KICKS PLAY S**

LEASE FROM $298 MONTHLY WITH $1,299 DOWN.

THAT'S LIKE PAYING

**$69** WEEKLY | AT | **4.99%** APR FOR 39 MONTHS O.A.C.

PLUS, QUALIFYING NISSAN OWNERS MAY RECEIVE UP TO

**$500** IN LOYALTY BONUS

OFFER ENDS JANUARY 2ND, 2025.

NISSAN



**WINTER READY** EVENT



**Sajanthan Vijayakumar**
SALES CONSULTANT

905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN

25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com



Canada

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் உதயன் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# தையிட்டி விகாரை தொடக்கம் கிழக்கில் இடம்பெறும் தமிழர் நிலம் பறிப்பு வரை எந்த அரசு வந்தாலும் தொடரத்தான் வேண்டுமா?

யாழ்ப்பாணம் கைதடி விகாரை எத்தனையோ வருடங்களாக இரகசியமாக கட்டப்பெற்று இன்று வெளிச்சத்திற்கு வந்த விடயமாக பேசப்படுகின்றது. இத்தனை ஆண்டுகள் எமக்கான மக்கள் பிரதிநிதிகள் வடக்கிலும் கிழக்கிலும் அனைத்து சலுகைகளையும் பெற்றுக் கொண்டு பாராளுமன்றத்திலும் எழுந்து நின்று பேச்சுகளை எறிந்து எதனையும் சாதிக்கவில்லை.

உதாரணமாக தையிட்டி விகாரையிலிருந்து மிக அண்மையில் தனது மாளிகை போன்ற வீட்டில் வாழ்ந்தவர் தான் எமது தலைவர்களில் ஒருவராக விளங்கிய அமரர் மாவை சேனாதிராஜா அவர்கள். அவரது பாராளுமன்ற உறுப்பினராக விளங்கிய காலத்தில் சம்பந்தன் ஐயா அவர்களின் “அன்பு“ வேண்டுகோளுக்கு இணங்க அனைத்தையும் அடக்கி வாசித்தவர். இதைப்போன்றே கிழக்கில் சாணக்கியன் பாராளுமன்ற உறுப்பினராக இருந்து பாராளுமன்றத்திலன் அனல் பறக்கும் பேச்சுக்களை அவ்வப்போது மக்களைக் கவர்ந்தாலும் கிழக்கில் எரியும் பிரச்ச்னைகளாக விளங்கிய மட்டக்களப்பு மாதவனை மயிலத்தமடு மேச்சல்தரை பிரச்சனை போன்ற வற்றை கவனிக்காதவர்கள் போல ஆட்சியாளர்களிடம் சமரசம் செய்த வண்ணம் தங்கள் பாராளுமன்றப் பயணத்தை மகிழ்ச்சியோடு பூர்த்தி செய்து மீண்டு அடுத்த அமர்வுகளிலும் அவ்வாறு பேசிப் பேசி காலத்தைக் கடத்தலாம் என்ற நிலையில் அடுத்து வந்த தேர்தலிலும் ரணில் விக்கிரமசிங்க வழங்கிய கோடிககணக்கான ரூபாய்கள் பணத்தைத் துணையாகக் கொண்டு மீண்டும் வெற்றிவாகை சூடினார். ஆனால் அநுரவின் ஆட்சி அமைந்ததனால் “அடக்கி வாசிப்பவராய்“ அனைத்து சலுகைகளையும் அனுபவித்து வருகின்றார். இவ்வாறு தான் ஏனைய தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்கள் பாராளுமன்றப் பயணத்தை “தந்திரமாக“ நகர்த்திக் கொண்டு போகின்றார்கள். அவர்கள் ஜனாதிபதி அநுர மற்றும் பிரதமர் போன்றவர்களையும் சந்திக்கின்றார்கள். மறு ப க்கத்தில் அநுர குமார திசநாயக்காவின் அரசாங்கத்திற்கு “குழி பறிக்க“ திட்டமிடும் “குள்ள நரிகள்“ கூட்டத்தோடும் சகவாசம் வைத்து மக்களிடம் “நல்ல் பெயரை சம்பாதித்து விடலாம் என்று கனவு காண்கின்றார்கள்

ஆனால். வுடக்கிலும் கிழக்கிலும் கடந்த அரசாங்க காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பெற்ற திட்டமிட்ட சிங்கள குடியேற்றத் திட்டங்கள் மற்றும் தமிழர் நிலங்களை தங்கள் அதிகாரங்களைக் கொண்டு பறித்தெடுத்து தமிழர்களின் பரம்பலைக் குறைத்தும் பெரும்பான்மை இனத்தவரை தமிழர் தாயக நிலங்களில் குடியேற்றியும் காரியங்கள் கச்சிதமாக இடம்பெற்று வருகின்றதை நாம் செய்திகள் வாயிலாக அறிகின்றோம்.

இவ்வாறான வடக்கின் தையிட்டி பௌத்த மகா விகாரையும் பிரகாசமாக எழுந்து நின்று பௌத்த கோசத்தையும் சிங்கன இனவாதத்தையும் ஒலிக்கச் செய்யும் அரசு சார்ந்த வைபவங்கள் நடந்தேற அதைக் கவனிக்க வேண்டிய மக்கள் பிரதிநிதிகளோ, இத்தனை ஆண்டுகள் தங்கள் “வேலைகளை“ மாத்திரம் கவனித்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மாத்திரம் இந்த தையிட்டி மஹா விகாரை தொடர்பாக எதிர்ப்புக்களை காட்டும் வகையில் எத்தனையோ வருடங்கள் போராடிப் பார்த்தார்கள். ஆனால் அவர்கள் போராடிக் கொண்டிருக்கும் காலப்பகுதியில் மிகவும் இரகசியமாக பௌத்த விகாரை விகாரமான தோற்றத்துடன் தமிழர் மண்ணில் அதுவும். தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளில் பிரித் ஓதுதலுடன் பௌத்தத்தின் தாக்கம் அந்த பிரதேசத்தில் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாகத் உள்ளது.

யாழ் தையிட்டி விகாரைகள் விவகாரத்தில் எல்லா அரசியல் கட்சிகளும் ஒன்றினைந்து எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் இதன் போது விகாரைக்கு ஊடகவியலாளர்கள் செல்வத்கு பொலிசார் அனுமதியளிக்காது வீதியில் தடுத்து நிறுத்தினர்

ஆனால் தமிழர்களின் நிலங்களில் சட்டவிரோதமான சிங்கள குடியேற்றங்களை தடுக்க நடவடிக்கை எடுக்காமல் அரசாங்கமோ அன்றி அரச சார்பான அரசியல்வாதிகளோ செயற்பட்டால் அவர்களது பதவிகளால் எவ்வித பயனும் இல்லை என்பதையே நாம் இவ்வாரக் கதிரோட்டத்தில் குறிப்பிட விரும்புகின்றோம்.







## பத்திரிகை விநியோகம் செய்ய ஆட்கள் தேவை

வாரம் ஒரு தடவை வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைப் பிரதிகளை ஒவ்வொரு வெள்ளிக்கிழமையையும் ஸ்காபுறோ, மார்க்கம், ரொறன்ரொ ஆகிய நகரங்களில் உள்ள தமிழர் கடைகள் மற்றும் ஆலயங்கள் ஆகியவற்றுக்கு விநியோகம் செய்ய ஒருவர் தேவை. சொந்தமாக வாகனம் வைத்திருப்பது விரும்பத்தக்கது. தகுந்த ஊதியம் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 647 762 9512

## Telemarketers Wanted

தமிழிலும் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடிய Telemarketers உடனடியாகத் தேவை.
தொடர்புகளுக்கு:-
416 754 9492 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

## COOKS, KITCHEN HELPER ஆகியோர் தேவை

மார்க்கம் நகரத்தில் உள்ள **Chauhan's India grill house and Banquet** உணவகத்திற்கு **Looking Line cook/ Breakfast and Lunch Line cook, delivery service Part time.**
**Kitchen helper and dishwasher P/T** ஆகியோர் உடனடியாகத் தேவை.
416 988 9518 என்னும் இலக்கத்தை அழைக்கவும்

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# இரா.சாணக்கியனுக்கு ஒதுக்கிய 400 மில்லியனில் இல்லாத விளையாட்டு மைதானத்துக்கு 50 இலச்சம் ரூபா ஒதுக்கி நிதி மோசடி

## சிஜடியிடம் முறையிட போகும். ஈபி.டி.பி அமைப்பாளர் கி. வதனகுமார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு ஒதுக்கப்பட்ட 400 மில்லியன் ரூபாவில் இல்லாத விளையாட்டு மைதானம் ஒன்றிற்கு 50 இலச்சம் ரூபா பணம் ஒதுக்கப்ட்டுள்ளதுடன் குளத்தின் நடுவே உள்ள மைதானத்துக்கு இரண்டு தடவை நிதி ஒதுக்கப்பட்டு பாரிய மோசடி இடம்பெற்றுள்ளது தொடர்பாக சிஜடியிடம் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் பட்டிருப்பு தொகுதி அமைப்பாளர் கிருஸ்ணபிள்ளை வதனகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மத்தியவீதியிலுள்ள ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் காரியாலயத்தில் 7ம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடக மாநட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கா நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுக்கு ஒதுக்கப்பட்ட 400 மில்லியன் ரூபாவில் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளது அதன் அடிப்படையில் களுவாஞ்சிக்குடி எருவில் கிழக்கில் மைதானம் ஒன்றிற்கு 50 இலச்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என தகவல் அறியும் சட்டம் ஊடாக தகவலை பெற்றோம் இருந்தபோதும் அவ்வாறு இல்லாத மைதானத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை கண்டறிந்தோம்.

இதன் பின்னர் இது தொடர்பாக பிரதேச செயலகத்தில் தகவல் அறியும் சட்டமூலம் தகவலை பெற்ற போது எருவில் தெற்கு பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தனர். இதில் முதலில் கிழக்கிலுள்ள மைதானத்துக்கு எனவும் பின்னர் இரண்டாவது முறை எருவில் தெற்கு மைதானத்துக்கு என எழுத்து மூலமாக தகவல்தந்தனர். இவ்வாறு முன்னுக்கு பின் முரணான தகவல்தரப்பட்டுள்ளது.

அதேவேளை இராசமாணிக்கம் ஞாபகார்த்த மண்டபத்துக்கு இரண்டு கோடிரூபா ஒதுக்கப்பட்டதாக மாவட்ட செயலகம் தகவல் அறியும் சட்ட மூலமாக தெரிவித்திருந்தது அது தொடர்பான மேலதிக தகவலை கேட்டிருந்தபோது பிரதேச செயலாளர் அந்த நிதி நிறுத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தினார்.

இருந்தும் கடந்த 3ம் திகதி பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட தகவலின்படி மாவட்ட அரசாங்க அதிபரால் சில மாற்றங்கள் செய்துள்ளதாக தகவலை வழங்கியுள்ளனர் அதன்படி இராசமணிக்கம் ஞாபகாத்த மண்டபம் என இருந்ததை அந்த மண்டபம் ஊடாக பிள்ளையர் ஆலைய பரிபாலனசபைக்கு அந்த 2 கோடி ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாக தகவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரச அதிகாரிகள் முன்னுக்கு பின் முரணான தகவல்களை வழங்கி கொண்டிருப்பதன் காரணத்தினால் பாரிய சந்தேகம் ஏற்படுகின்றது மாவட்ட செயலகத்தில் இருந்து வருகின்ற ஒரு தகவல் அதேபோன்று பிரதேச செயலகத்தில் முதற்கட்டமாக ஒரு தகவல் பிறகு இல்லை எனவும் பின்னர் அமுல்படுத்தப்பட்டுள்ளது என வருகின்றது இவ்வாறு தகவல் அறியும் சட்டத்தில் கேட்கப்படுகின்ற விடையங்கள் சரியானமுறையில் தகவலாக வழங்கப்படவில்லை.

அதேபோன்று 400 மில்லியன் ரூபா நிதியில் எவ்வளவு பயன்படுத்தப்பட்டுள்ளது எவ்வளவு நிதி திருப்பி அனுப்பபட்டுள்ளது என்ற தகவலை கேட்டபோது மாவட்ட உதவி அரசாங்க அதிபர் இந்த சட்டத்தின் சரத்தின் 5 கீழ் இந்த தகவலை வழங்கமுடியாது என கடிதம் வழங்கியுள்ளார் எனவே இது தனிநபர் சார்ந்த விடையம் அல்ல சட்டத்தின் பிரகாரம் தகவல் வழங்கவேண்டும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.



சத்தியசாஜிபாபா சமுத்தி மற்றும் சக்தி இல்லத்துக்கு நிதி ஒதுக்கியுள்ளனர் இதில் சத்தியசாஜிபாபா சமுத்தி என்பது பாரிய நிதிவசதியை கொண்டது அவர்கள் இலவச மருத்துவம் உட்பட பல வேலைகளை செய்துவருகின்றனர் அதேவேளை சக்தி இல்லம் ஒரு தனியாரது இதுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளது இவ்வாறு அவசர அவசரமாக வாக்குகளை பெறவேண்டும் என்பதற்காக சரியான திட்டமிடல் இன்றி இந்த நிதியினை மோசடி செய்துள்ளனர்.

அவ்வாறே எருவில் தெற்கில் அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்திற்கு இரண்டுதடவை நிதி ஒதுக்கப்பட்டு பாரியளவு நிதி மோசடி இடம்பெற்றுள்ளதுடன் தற்போது ஒதுக்கப்பட்ட 50 இலச்சம் ரூபா நிதியில் கிட்டத்தட்ட 27 இலச்சம் ரூபா நிதி மோசடி இடம்பெற்றுள்ளதாக அதே தமிழரசு கட்சியினுடைய முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் காண்டீபன் பிரதேச செயலகம், மற்றும் மாகாண உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திற்கு முறைப்பாடுகள் செய்துள்ளார்.

இவ்வாறு மிக மோசமான முறையில் நிதிகள் ஒதுக்கப்பட்டு அவர்களுடைய ஆதரவாளர்கள் மூலம் அந்த நிதி சுரண்டப்பட்டு பிரச்சார வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் முறையான அபிவிருத்தி இடம்பெறவில்லை மக்களுடைய வரிப்பணம் மிக மோசமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

எனவே இவ்வாறுனவர்களை மக்கள் தெரிவு செய்வதனால் எமது பிரதேசத்தில் இன்றும் மக்கள் ஏழைகளாகவும் அடிமைகளாகவும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் இதனை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரச அதிகாரிகளும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதுடன் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் பெறப்பட்ட தகவல் அடங்கிய ஆவனங்களை இலஞ்ச ஊில் ஆணைக்குழு, இலங்கை கணக்காய்வாளர்கள் திணைக்களம், மனித உரிமை ஆணைக்குழுவிற்கு அனுப்பியுள்ளதுடன் இந்த மோசடி தொடர்பாக குற்றப்புலனாய்வு பிரிவுக்கு முறைப்பாடு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றோம் என்றார்.

# மட்டக்களப்பு ஏறாவூரில் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர் முகமது சாலி நளீம் மீது ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆதரவாளர் ஒருவர் தாக்குல்



ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மீது 8ம் திகதி சனிக்கிழமை காலையில் ஏறாவூர் பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆதரவாள் ஒருவர் தாக்குதல் மேற்கொண்டதையடுத்து அவர் கய நினைவு அற்ற நிலையில் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக காயமடைந்த நாடாளுமன்ற உறுப்பினர் முகமட் சாலி நளீம் தெரிவிக்கையில் -

அரசியல் பிரச்சனை காரணமாக பள்ளிவாசல் ஒன்றின் முன்னாள் எனது தந்தைக்கும் சகோதரர் மீது 8ம் திகதி அதிகாலை 6.00 மணியளவில் கலீல் என்பர் தாக்குதல் மேற்கொண்டுள்ளார் இதனால் காயமடைந்த சகோதரன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதையடுத்து காலையில் கொழும்பில் இருந்து வந்த நான் வைத்தியசாலைக்கு சென்ற நிலையில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சி ஆதரவாளர் காதர் என்பவர் வைத்தியசாலையில் வைத்து என்னை தரக்குறைவான வார்தைகளால் பேசினார்.

இதனையடுத்து நான் பொலிஸ் நிலையத்துக்கு சென்று வாகனத்தைவிட்டு இறங்கி உள் சென்ற போது பின்னால் வந்த காதர் என்மீது மோட்டார் சைக்கிள் தலைக்கவசத்தால் தாக்கியுள்ளதுடன் பொலிஸ் நிலையத்துக்குள்ளும் தாக்க முற்பட்டபோது பொலிசார் வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர் என்றர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆளுநர் அற்ப பதவிக்காக தமிழ் மக்களை அடகு வைக்க வேண்டாம் என பொது மக்கள் கோரிக்கை

இலங்கை செய்திகள் Sri Lanka News



சட்டவிரோத தையிட்டி விகாரையை வட மாகாண ஆளுநர் தனது அற்ப பதவிக்காக தமிழ் மக்களின் உணர்வுகளையும் உரிமைகளையும் அடகு வைக்க வேண்டாம் என தமிழ் தேசிய மக்கள் கட்சியின் ஆதரவாளர்கள் தையிட்டியில் கூடிநின்ற போது தெரிவித்துள்ளனர்.

புதன்கிழமை வலி வடக்கு தையிட்டியில் அமைந்துள்ள சட்டவிரோத திஸ விகாரையை அகற்றுமாறு இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வட மாகாண ஆளுநர் தனது பதவியை தக்க வைப்பதற்கும் எதிர்காலத்தில் பதவிகளை எதிர்பார்ப்பதற்கும் தையிட்டி சட்டவிரோத விகாரையை அகற்றக்கூடாது என்பதில் அக்கறையாக உள்ளார்.

அதேபோல் அரசியல் கோமாளி ஒருவரும் தையிட்டி விகாரையை அகற்றக்கூடாது என கூறி வருவது திட்டமிட்ட அரச முகவர்களாக இவர்கள் செயற்படுகிறார்கள்.

தையிட்டி சட்டவிரோத விகாரை போராட்டத்தை கொச்சைப்படுத்தியவர்கள் 12ம் திகதி புதன்கிழமை இடம்பெற்ற மக்கள் போராட்டத்தை பார்த்திருப்பார்கள் மக்களின் உணர்வுகளை அறிந்திருப்பார்கள்.

தையிட்டியில் தனியார் காணியில் சட்டவிரோதமாக இராணுவத்தின் அணுசரணையுடன் கட்டப்பட்ட தையிட்டி விகாரைக் காணி மக்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மக்கள் தமது கொள்கையில் உறுதியாக இருக்கிறார்கள் மக்களின் காணிகள் மக்களுக்கே வேண்டும் மாற்றுக் காணிகளை ஏற்க மாட்டோம்.

ஆகவே சட்ட விரோதமாக கட்டப்பட்ட தையிட்டி விகாரை உடைக்கப்பட வேண்டும் பதவிகளுக்காக தமிழ் மக்களை காட்டி கொடுப்பதை அரசின் முகவர்கள் நிறுத்த வேண்டுமென கட்சியின் ஆதரவாளர்களும் அங்கு கூடிய பொது மக்களும் தெரிவித்தனர்.

# மன்னார் நீதிமன்றத்தின் முன் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் — கைது செய்யப்பட்ட 7 சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

- எஸ்.ஆர்.லெம்பேட் (29-01-2025)



மன்னார் நீதிமன்றத்திற்கு முன் கடந்த ஜனவரி மாதம் 16 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துடன் தொடர்புடையதாக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் 10ம் திகதி திங்கட்கிழமை உத்தரவிட்டார்.

7 சந்தேக நபர்களில் ஏற்கனவே 5 சந்தேக நபர்கள் அடையாள அணி வகுப்பிற்கு முற்படுத்தப்பட்டனர்.

ஏனைய இரு சந்தேக நபர்களுக்கு ஆள் அடையாள அணிவகுப்பு கள் அன்றையதினம் இடம்பெற இருந்த நிலையில் அடையாளத்தை காண்பிப்பதற்காக வருகை தர இருந்த இருவரும் மன்றில் முன்னிலையாக வில்லை.

இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் குறித்த 7 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

குறித்த கொலை தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றத்தடுப்பு பிரிவினர் மற்றும் பொலிஸ் புலனாய்வுத்துறை முன்னெடுத்து வருவதாக மன்றில் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் நீதிமன்றத்தில் கடந்த 16 ஆம் திகதி வழக்கு விசாரணை ஒன்றிற்காக வருகை தந்தவர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் இருவர் உயிரிழந்ததோடு பெண் ஒருவர் உள்ளடங்களாக இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வந்த தேடுதல் நடவடிக்கையின் போது பிரதான சந்தேக நபர்கள் உள்ளடங்களாக 7 பேரை மன்னார் பொலிஸார் கைது செய்தனர். அவர்களில் இராணுவத்துடன் தொடர்புடைய மூன்று பேர் அடங்குகின்றனர்.

குறித்த 7 பேரும் விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் 10ம் திகதி அ ன்றைய தினம் மீண்டும் மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு அழைத்து வரப்பட்டனர். இதன் போது விசாரணைகளை மேற்கொண்ட நீதவான் குறித்த 7 சந்தேக நபர்களையும் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# மன்னார் புகையிரத நிலைய பிரதான வீதியை சீரற்ற முறையில் "திருத்தம்" செய்யும் மன்னார் வீதி அபிவிருத்தி அதிகார சபை — மக்கள் விசனம்



- எஸ்.ஆர்.லெம்பேட் (07-02-2025)

மன்னார் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான சௌதார் புகையிரத நிலைய பிரதான வீதி பல வருடங்களாக உரிய முறையில் பராமரிப்பின்றி சேதமடைந்து காணப்பட்டு வருகின்றமை தொடர்பில் மக்கள் பல்வேறு குற்ற சாட்டுக்களை தொடர்ந்து முன்வைத்து வருகின்றனர்.

முன்னதாக குறித்த வீதியை புனரமைப்பு செய்வதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட போதிலும் பல்வேறு காரணங்களால் வீதி அபிவிருத்தி பணிகள் இடம் பெறாத நிலையில் ஒதுக்கப்பட்ட நிதியும் திரும்பி சென்றது.

இந்த நிலையில் புகையிரத பயணங்களுக்குக்காக செல்லும் பொதுமக்கள் உட்பட சாந்திபுரம், சௌத்பார் உள்ளிட்ட பல கிராமங்களை சேர்ந்த மக்கள் இந்த வீதியை ஒழுங்கான முறையில் பயன்படுத்த முடியாத நிலையில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான பின்னணியில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் செய்யப்படும் சீராக்கும் பணிகளும் ஒழுங்கான முறையில் மேற் கொள்ளப்படுவதில்லை என பொதுமக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறிப்பாக வீதிகளில் பள்ளங்களை நிரப்பும் பணிகள் கூட ஏனோ தானோ என இடம்பெறுவதாகவும் அவையும் குறுகிய காலப்பகுதியில் சேதமடைவதாகவும் சாந்திபுரம் கிராம மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

இவ்வாறான நிலையில் பயன்படுத்த முடியாத வீதியை சீராக்கல் என்ற பெயரில் வீதி அபிவிருத்தி அதிகார சபை அரச பணத்தை வீணாக்குவரை விடுத்து வீதியை முழுமையாக புணரமைத்து தருமாறு அப்பகுதியை சேர்ந்த கிராம மக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# தையிட்டி விகாரை விவகாரத்தில் உரிமையாளர்களுக்கு மாற்றுக் காணி என்ற பேச்சுக்கே இடமில்லை — பௌர்ணமி நாளன்று போராட்டம்




## பூர்வீக நிலத்தின் உரிமையாளர்கள் அழைப்பு!

மாற்றுக் காணி என்ற பேச்சுக்கே இடமில்லை - பூர்வீக நிலத்தின் உரிமையாளர்களாகிய நாம் உரிமங்களுடன் இருக்க தையிட்டி விகாரை நிர்மாணிக்கப்பட்ட நிலப்பரப்பும், அதனை அண்டிய மக்களின் காணி நிலங்களும் விகாரைக்குரியதென்று கூறுவதை ஏற்க முடியாது என கூறியுள்ள தையிட்டி காணி உரிமையாளர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் பௌர்ணமி நாளன்று போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் 8ம் திகதி சனிக்கிழமை அன்றையதினம் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை முன்னெடுத்திருந்த குறித்த காணி நிலங்களின் உரிமையாளர்கள் இவ்வாறு தெரிவித்திருந்தனர்.

குறித்த சந்திப்பில் கலந்துகொண்டு க.ஜெயகுமார்,பா.பா'கரன், சுகுமாரி சாருஜன் ஆகியோர் மேலும் கூறுகையில்,

மக்களது காணி நிலங்கள் மக்களுக்கே சொந்தம். அவை மக்களுக்கு வழங்கப்படும் என ஜனாதிபதி அனுர அண்மையில் யாழ் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் தெரிவித்திருந்தார். ஆனால் அவர் கூறிய கருத்துக்கு முரணாக தையிடி விவகாரம் இருக்கின்றது.

அகில இலங்கை பௌத்த மகாசபை ஒருபடி மேல் சென்று விகாரை கட்டப்பட்ட காணி நிலம் மட்டுமல்ல, அயலில் உள்ள காணி நிலங்களும் சுவீகரிக்கப்படும் என இறுமாப்புடன் கூறியுள்ளது.

அதேநேரம் தேர்தல் கலங்களில் தேசிய மக்கள் சக்தியின் இன்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களின் மூவரும் எம்முடன் இவ்விடையம் தொடர்பில் பேசி, கடந்த கால யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றல்லாது, கடந்த அரசுகள் போலல்லாது தாம் ஆட்சிக்கு வந்ததும் இவ்விடையம் தீர்க்கப்படும் என எமக்கு வாக்குறுதியும் யழங்கியிருந்தனர்.

ஆனால் இன்று இம் மூவரும் பொம்மைகள் போன்று வாய்பேசாதுள்ளனர். நாம் எமது பூர்வீக நிலங்களையே கேட்கின்றோம்.

ஆளுநர் கூட எம்முடன் பேசிய விடையத்தை வேறு திசை நோக்கி கொண்டு செல்ல முயற்சித்து தவறான அர்த்தப்பட ஜனாதிபதிக்கு கூறியிருந்தார்.

ஆனாலும் அன்று கஜேந்திரகுமார் எம்.பி எமது பிரச்சினையை எடுத்திருந்தாலும் அவருக்கு பலமாக ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கைக்கொடுத்திருக்கவில்லை. இது வாக்களித்த எமக்கு ஏமாற்றத்தையே கொடுத்தது.

இந்நிலையில் எதிர்வரும் 11 ஆம்திகதி மாலை 4 மணியிலிருந்து மறு நாள் மாலை 6 மணிவரை எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நாம் முன்னெடுக்கவுள்ளோம்.

காணி உரிமையாளர்களாகிய எமது போராட்டத்துக்கு பாரபட்சமற்ற வகையில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள், போக்குவரத்து மற்றும் சிற்றூர்தி, முச்சக்கர வண்டி சங்கம் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் ஆதரவை வழங்கி வலுச்சேர்க்குமாறு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# தையிட்டி சர்வாதிகார விகாரை இடிக்கப்பட வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் வலியுறுத்து!

மக்களின் விருப்புக்கு மாறாக சட்டவிரோதமாக தையிட்டியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சர்வாதிகார விகாரை இடிக்கப்பட வேண்டும். இது இனவாதக் கருத்தல்ல என சுட்டிக்காட்டியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் அனைவருக்கும் சட்டம் சமனானது எனக் கூறும் இன்றைய அரசு தனது நிலைப்பட்டில் இருந்து படிப்படியாக மாறி தனது சுய நிலைக்கு வருகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் தொடர்பில் யாழ் ஊடக அமையத்தில் 8ம் திகதி சனிக்கிழமை அன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

தையிட்டி விகாரை விவகாரம் இன்று தமிழ் மக்களின் இருப்புக்கு சவாலாக மாறியுள்ளது. மக்களின் காணி அவர்களுக்கே உரியது. ஆனால் இன்று அது மறுக்கப்படுவதாக தெரிகின்றது.

நீண்டகாலமாக இராணுவத்தினரது பிடிக்குள் இருந்த எமது மக்களின் காணிகளில் அவர்களுக்கு தெரியாமலேயே இந்த விகாரை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரசினதும் பௌத்த கட்டமைப்பினதும் இந்த அதிகார இறுமாப்பு எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றல்ல.

அதனால் குறித்த காணி நிலங்களின் உரிமையாளர்கள் தமக்கான நியாயம் கேட்டு நீண்டகாலமாக போராடி வருகின்றனர்.

ஆனாலும் அது இதுவரை நிறைவேறாத நிலையில் அண்மையில் யாழ்ப்பாணம் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஜனாதிபதி முன்னிலையில் பல முரணான கருத்துக்கள் கூறப்பட்டு திசைதிருப்பும் முயற்சியொன்று உருவாக்கப்பட்ட நிலையில் அதற்கு கடும் எதிர்ப்பும் காட்டப்பட்டது.

அதேநேரம் இலங்கையின் வேறு சில பகுதிகளில் இந்துக் கோயில்கள் சில இன முரண்பாட்டை உருவாக்கும் என்ற தோரணையில் இடிக்கப்பட்டும் இருக்கின்றது.

அதனால் நாட்டில் வாழும் அனைத்து தரப்பினருக்கும் ஒரே சட்டம் என்று கூறும் இந்த அரசு இந்த விகாரையையும் இன முரண்பாட்டை உருவாக்கும் ஒன்றாக கருதி இடிக்கப்படுவது அவசியம்.

அத்தோடு விகாரையின் சுற்றுப்புறத்திலுள்ள வேறு சில மக்களின் காணி நிலங்களும் சட்டவிரோதமாக பறிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இன்னிலையில் அந்த பகுதி மக்கள் எதிர்வரும் 12 ஆம் திகதியற்று பெரும் எதிர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்க பல்சார் தரப்பினரிடமும் ஆதரவை கோரியுள்ளனர்.

அந்த வகையில் மக்களின் உணர்வுகளுக்கு வலுச்சேர்க்க குறித்த போராட்டத்திற்கு எமது ஆதரவை நாம் வழங்கவுள்ளோம் எனவும் சிவஞானம் சிறிதரன் எம்பி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு!



யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு பாடசாலை மைதானத்தில் 7ம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

வித்தியாலய முதல்வர் சுதாமதி தயாபரன் தலைமையில் இடம்பெற்ற





இல்ல மெய்வல்லுநர் திறனாய்வில், தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் க.ஸ்ரீகணேசன், சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத் தரும், பழைய மாணவர் சங்க செயலாளருமான க.ரஜனிகாந்தன், கிராம அலுவலர் அகல்யா வருண்ராஜ், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கார்த்திகா அகிலன், சமுர்த்தி உத்தியோகத்தர் வை.கிருஷ்ணாசா, சுவிஸ் பழைய மாணவி ஜெ.கிறேஸ்பெல்சியா ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது அணிநடை, கயிறு இழுத்தல் மற்றும் கலப்பு அஞ்சல் போட்டிகள் சபையோரைக் கவர்ந்தன.

# எல்லை தாண்டி மீன் பிடித்த ராமேஸ்வரம் மீனவர்கள் 14 பேர் இரண்டு மீன்பிடி விசைப்படகு டன் கைது — இலங்கை கடற்படை நடவடிக்கை



(9-02-2025)

ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன்பிடிக்க சென்று இலங்கை வடக்கு மன்னார் கடற்பரப்பில் மீன் பிடித்து கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்த இரண்டு மீன் பிடி விசைப் படகையும் அதிலிருந்த 14 மீனவர்களையும் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்து இரணைதீவு கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.



மீனவர்களிடம் முதற்கட்ட விசாரணை முடித்துக் கொண்டு மீனவர்கள் 14 பேரும் விசைப்படகுடன் கிளிநொச்சி மீன் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார் கள் என இலங்கை கடற்படை செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பருத்தித்துறை நீதிமன்றத்தில் இருபது லட்சம் ரூபாய்க்கு ஏலத்தில் விற்கப்பட்ட இந்திய மீன்பிடி படகும் வலைகளும்!



## இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாக எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் பறிமுதல் செய்யப்பட்டவையே இவ்வாறு ஏலத்தில் விற்கப்பட்டன

இலங்கை கடற்பரப்பிற்குள் சட்டவிரோதமாக எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் பறிமுதல் செய்யப்பட்ட மீன்பிடி படகு மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் கடந்த 8ம் திகதி சனிக்கிழமை காலை பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை கடற்பரப்பில் வைத்து கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் திகதி நான்கு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிசாரால் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வழக்கு விசாராணை மேற்கொள்ளப்பட்டு மீன்பிடி படகு மற்றும் மீன்பிடி உபகரணங்கள் அரசுடமையாக்கப்பட்டிருந்தன.

இவ்வாறு அரசுடமையாக்கப்பட்ட லம்பாடி ரக மீன்பிடி படகு இரண்டு இலட்சத்து பன்னிரண்டாயிரம் ரூபாவிற்கும், மீன்பிடி வலைகள் ஒரு இலட்சத்து எண்பத்தோராயிரம் ரூபாவிற்கும், இரண்டு வெளியிணைப்பு இயந்திரங்கள் அறுபத்து நான்காயிரம் ரூபாவிற்கும், குளிரூட்டல் பெட்டி ஐம்பத்தையாயிரம் ரூபாவிற்கும், இரண்டு ஜிபி எஸ் கருவிகள் நாற்பத்தாறாயிரத்து நூறு ரூபாவிற்கும், நங்கூரம் எட்டாயிரம் ரூபாவிற்குமாக ஐந்து இலட்சத்து அறுபத்தாறாயிரத்து நூறு ரூபாவிற்கு ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் இன்றைய தினம் இடம்பெற்ற பகிரங்க ஏலத்தில் இந்திய மீன்பிடி படகு மற்றும் மீன்பிடி உபகரணங்கள் உள்ளிட்டவை இருபது இலட்சத்து நாற்பத்து இரண்டாயிரத்து முன்நூற்றைம்பது ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லம்பாடி - 212000/-
வலை - 181,000/-
வெளி இணைப்பு இயந்திரம் - 36,000/- + 28,000/-
நங்கூரம் - 8,000/-
குளிரூட்டல் பெட்டி - 55,000/-
ஜிபிஎஸ் - 5100/- + 41,000/-
566100/-
வழக்கு இலக்கம் - 39/23
1327 இலக்க படகு
2022 ஆம் ஆண்டு 12/29
4 பேர்
மொத்தம் 20,42,350/- ரூபாய்கள்



# தையிட்டி மக்களின் போராட்டத்திற்கு ஈ.பி.டி.பி. ஆதரவு வழங்குவதாக டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



தையிட்டி திஸ்ஸ விகாரை தொடர்பில் காணி உரிமையாளர்களினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள அமைதி வழிப் போராட்டத்திற்கு ஆதரவினை வழங்குவதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

"தையிட்டிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரை என்பது சட்ட ரீதியான அனுமதிகள் எவையும் பெற்றுக் கொள்ளப்படாமல், எமது மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் பூர்வீக நிலங்களை இழந்துள்ள மக்கள் தங்களுடைய காணிகளை மீட்பதற்கு தொடர் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்பார்ப்பினை நிறைவற்றுவதற்கான முயற்சிகள் எம்மால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

எந்தவொரு விடயத்தினையும் நடைமுறைச் சாத்தியமான வழியில் அணுகுகின்றவர்கள் என்ற அடிப்படையில், குறித்த விகாரை அமைந்துள்ள பகுதியை அளவீடு செய்து, முதற்கட்டமாக, அப்போது விகாரை கட்டுமானங்கள் அமைந்திருந்த சிறு பகுதியை தவிர ஏனைய பகுதிகளை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளை முன்னடுத்திருந்தோம்.

அதற்கு, பாதுகாப்பு அமைச்சு, படைத் தரப்பு மற்றும் சம்மந்தப்பட்ட விகாராதிபதி போன்றோர் சம்மதமும் தெரிவித்திருந்தனர்.

எனினும், அளவீட்டு பணிகளை மேற்கொள்வதற்கு சில தரப்புக்கள் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், அளவீட்டு பணிகள் பல தடவைகள் இடைநிறுத்தப் பட்டிருந்தன.

அக்காலப் பகுதியில் தேர்தல் அறிவிப்புக்கள் வெளியாகி, ஆட்சி மாற்றங்கள் இடம்பெற்றமையினால், துரதிஸ்டவசமாக எம்மால் அந்தப் பணிகளை நிறைவேற்ற முடியவில்லை.

எனினும், மக்களுடைய காணிகள் மக்களுக்கே சொந்தம் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

திஸ்ஸ விகாரை அமைந்துள்ள பகுதி மாத்திரமன்றி, வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், பாதுகாப்பு தரப்பு போன்றவற்றினால் கையகப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும் என்பதே எமது திடமான நிலைப்பாடாக இருக்கின்றது.

அந்த அடிப்படையில், காணி உரிமையாளர்களினால் முன்னெடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ள அமைதி வழிப் போராட்டத்திற்கு பூரண ஆதரவினை வழங்கவுள்ளோம்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

YOU MAY BE SURPRISED TO KNOW

THERE ARE JUST A FEW CONDITIONS THAT ARE COVERED UNDER

CANCER
HEART DISEASE
DIABETES

THANA INSURANCE

ONLINE 24/7

100% TAX FREE MONEY

COVERAGE WILL START WITHIN 48 HOURS

PREMIUM NEVER INCREASE
COVERAGE UNTIL LIFE

NON MEDICAL LIFE INSURANCE

| AGE | 25000 | | 50000 | |
|---|---|---|---|---|
| | M | F | M | F |
| 60 | $79 | $69 | $154 | $132 |
| 65 | $103 | $89 | $202 | $173 |
| 70 | $141 | $116 | $276 | $227 |



Thana Manickavasagar
Insurance Broker

ASK THANA Cell : 416. 728. 5772 | Office: 416.519.3896

Address : 80 Nashdene Road, unit D218, Scarborough, ON, M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

புு. கஜிந்தன்

# யாழ்ப்பாணத்தில் மீனவ அமைப்பை சந்தித்த இலங்கைக்கான சீன உதவித் தூதுவர்!



யாழ். மாவட்ட மீனவ அமைப்பின் பிரதிநிதிகளை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் உதவித் தூதுவர் சந்தித்தார்.

குறித்த சந்திப்பில் சீனா அரசாங்கத்தினால் வடமாகாண மீனவர்களுக்கு வழங்கப்பட்ட வலைகள் மற்றும் உணவுப் பொதிகளுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டதுடன் தொடர்ந்தும் வடக்கு மீனவ சமூகத்துக்கு சீனாவின் உதவிகள் கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் மீனவர்கள் சங்கத்தினர் முன்வைத்தனர்.



# இலங்கை ஊடகவியலாளர் இ.பாரதியின் மறைவுக்கு யாழ்ப்பாணத்திலுள்ள. இந்திய துணை தூதரகம் இரங்கல்!

யாழ்ப்பாணத்தின் மூத்த தமிழ் பத்திரிகையாளர் திரு. இராசநாயகம் பாரதி அவர்கள் மறைவுக்கு யாழ். இந்திய துணைத் தூதரகம் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண இந்திய தூதரகம் வெளியிட்ட இரங்கல் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, தமிழ் பத்திரிகைத்துறையில் மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றிய திரு. பாரதி, தினக்குரல் ஞாயிறு பதிப்பின் ஆசிரியராகவும், யாழ்ப்பாணத்தில் வீரகேசரி பத்திரிகையின் பிராந்திய ஆசிரியராகவும் சேவையாற்றியவர். அவரது பத்திரிகை பணிகளில் வெளிப்பட்ட நேர்மை, பொறுப்புணர்வு, மற்றும் சமூகத்திற்கான அர்ப்பணிப்பு என்றும் மகத்தான பாராட்டுக்குரியது என குறிப்பிடப்பட்டுள்ளது.

# ஊடகவியலாளர் பாரதியின் மறைவு தமிழ் ஊடக உலகிற்கு பேரிழப்பு என்கிறார் முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா!



அச்சு ஊடகத் துறையில் ஆழமான தடங்களை பதித்த சிரேஸ்ட ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகம் அவர்களின் மறைவு, தமிழ் ஊடகத் துறைக்கு பாரிய வெற்றிடத்தை உருவாக்கி இருப்பதாக ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, "அமைதியான அணுகுமுறைகளையும் ஆழமான கருத்தியலையும் கொண்டிருந்த அமரர் பாரதி அவர்கள், ஊடக அறத்தின் வழிநின்று அனைத்து தரப்பினருடனும் உறவுகளை பேணியவர்.

எமது கருத்துக்களில் இருக்கின்ற நியாயங்களை புரிந்து கொண்டு ஒத்துழைப்புக்களை வழங்கியவர்.

அன்னாரின் இழப்பு, தமிழ் ஊடகத்துறையையும் தாண்டி தமிழ் பேசும் மக்களுக்கே பேரிழப்பாக அமைந்திருக்கிறது.

அன்னாரின் இழப்பினால் துயருற்று இருக்கும் அனைவருக்கும் எமது ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 2025ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்துக்கு ஒதுக்கப்படவுள்ள நிதிக்கு முன்மொழியப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான மீளாய்வு!



2025ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்துக்கு வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படவுள்ள நிதிக்கு, வடக்கு மாகாணத்தால் முன்மொழியப்படவுள்ள திட்டங்கள் தொடர்பான மீளாய்வு வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் 7ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்றது.

ஒவ்வொரு அமைச்சுக்கள் அதன் கீழான திணைக்களங்களுக்கு ஒதுக்கப்படவுள்ள நிதி விவரங்கள் மற்றும் அந்த நிதியில் முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ள திட்டங்கள் தொடர்பில் ஆளுநருக்கு பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகத்தின் திட்டமிடல் - பணிப்பாளர் கே.சிவசந்திரன் தெரியப்படுத்தினார்.

முன்வைக்கப்பட்ட திட்டங்களை ஒக்ரோபர் மாதத்துக்குள் நிறைவேற்றி முடிக்கவேண்டியது அந்தத் திணைக்களத் தலைவர்களின் பொறுப்பு என ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார். மேலும் சில திட்டங்கள் யாழ்ப்பாணத்தை மையப்படுத்தி முன்மொழியப்பட்டிருந்த நிலையில், அதை மீளாய்வு செய்து, வன்னிப் பிராந்தியத்துக்கு மாற்றுமாறும் ஆளுநர் யோசனை முன்வைத்தார்.

குறிப்பாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் யாழ்ப்பாணத்தில் சில வீதிகளை தரமுயர்த்தும் செயற்றிட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் அதைவிடுத்து வன்னியிலுள்ள விவசாயிகள் அதிகம் பயன்படுத்தும் வீதிகளை புனரமைக்க நிதி ஒதுக்குமாறும் பணித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன், ஆளுநரின் செயலாளர் மு.நந்தகோபாலன், பிரதிப் பிரதம செயலாளர் - நிதி எஸ்.குகதாஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 300,000 ரூபா நிவாரண உதவிகள் கிழக்கு மாகாண மக்களுக்கு வழங்கல்



கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள திருக்கோவில், விநாயகபுரம் ஆகிய கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு 300,000 ரூபா பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருட்கள் 9ம் திகதி ஞாயிறறுக்கிழமையன்று சந்நிதியான் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டது.





சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் அவர்கள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று இந்த உதவிகளை வழங்கி வைத்தார்.

# யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று சென்.பிலிப்நேரிஸ் விளையாட்டு கழகத்தினரின் லீக் சுற்றுப்போட்டிகளுக்கான கோப்பை அறிமுக விழாவும் முதல் ஆட்டமும்!



யாழ். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று சென்.பிலிப்நேரிஸ் விளையாட்டு கழகத்தினரின் லீக் சுற்றுப்போட்டிகளுக்கான கோப்பை அறிமுக விழாவும் முதல் ஆட்டமும் சிறப்பாக நடைபெற்றன.

சென். பிலிப்நேரிஸ் விளையாட்டு கழகத்தின் லீக் சுற்றுப்போட்டிகளுக்கான கோப்பை அறிமுக விழாவும் முதல் ஆட்டமும் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று இடம்பெற்றது.

யாழ். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று சென்.பிலிப்நேரிஸ் விளையாட்டு கழகத்தினரின் 21 வயதிற்கு உட்பட்ட வீரர்கள் நடாத்தும் CPL U21 Cricket League தொடரின் கோப்பை அறிமுக விழாவும் சுற்றின் முதல் ஆட்டமும் அன்று மாலை 03.30 மணிக்கு கழக மைதானத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் செம்பியன்பற்று பிலிப்புநேரியர் ஆலய பங்குத்தந்தை அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன் கழக உறுப்பினர்கள், பிரதேச மக்கள், விளையாட்டு வீரர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.





# 108 பானைகளில் பொங்கல் பொங்கி சிறப்பாக இடம் பெற்ற மன்னார் மாவட்ட பொங்கல் விழா

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (09-02-2025)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஒழுங்கமைப்பில் வேட்டையா முறிப்பு அருள்மிகு ஆதி விநாயகர் ஆலயம் இணைந்து ஏற்பாடு செய்த மாவட்ட பொங்கல் விழா நிகழ்வு 9ம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் வேட்டையா முறிப்பு விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மாவட்ட இந்து சமய கலாசார உத்தியோகத்தர் அ.தனுஜன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகசபாபதி கனகேஸ்வரன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டி.சி.அரவிந்தராஜ், மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப், நானாட்டான் பிரதேசச் செயலாளர் கே.சிவசம்பு, ஆகியோர் உள்ளடங்களாக கௌரவ விருந்தினர்களாக மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய பிரதம குரு கருணாநந்த குருக்கள் உள்ளடங்களாக பலர் கலந்து கொண்டனர்.

காலை 9.30 மணியளவில் பொங்கல் பண்பாட்டு பேரணி ஆரம்பமானது. அதனைத்தொடர்ந்து மங்கள வாத்திய இசையுடன் விருந்தினர்கள் வரவேற்கப் பட்டனர்.

தொடர்ந்து சம்பிரதாய முறையில் 108 பானைகளில் பொங்கல் பொங்கி கும்மி நடனம் இடம்பெற்றது. அதனைத்தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுகள், மற்றும் நிகழ்வுகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# மன்னார் மக்களுக்கு சீன அரசினால் நிவாரண பொருட்கள் வழங்கி வைப்பு



- எஸ்.ஆர்.லெம்பேட் (10-02-2025)

சீனாவின் "சகோதர பாசம்" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அண்மையில் நிவாரண பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

குறித்த நிகழ்வானது மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள துள்ளு குடியிருப்பு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

கட்டுக்காரன் குடியிருப்பு மற்றும் துள்ளுக்குடியிறுப்பு பகுதிகளில் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட பின் தங்கிய குடும்பங்களுக்கு குறித்த உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பிரதிப் பிரதானி சூ யன் வெய் பொதுமக்களுக்கு நிவாரண பொருட்களை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வின்போது 350 குடும்பங்களுக்கு தலா 6490 ரூபா பெறுமதியான பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.


குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன், மன்னார் பிரதேசச் செயலா-ளர் எம்.பிரதீப்மற்றும் சீன தூ தரகத்தின் உயரதிகாரிகள் துறைசார் அதிகாரிகள் என கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# தையிட்டியில் ஒன்று திரண்ட கட்சிகள்.



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

கடந்த திங்கட்கிழமை கொழும்பில் உள்ள இலங்கைக்கான ஐநா பொறுப்பதிகாரியும் ஐநாவின் ஏனைய உறுப்புகளுக்கு பொறுப்பான அதிகாரிகளும் சிவில் சமூகப் பிரதிநிதிகளை சந்தித்தார்கள். திருநெல்வேலியில் அமைந்துள்ள திண்ணை விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற இந்த சந்திப்பில், ஐநாவின் இலங்கைக்கான பொறுப்பதிகாரி கருத்துத் தெரிவிக்கையில், உலகத்தின் கவனம் மத்திய கிழக்கின் மீதும் கிழக்கு ஐரோப்பாவின் மீதும் குறிப்பாக காசா உக்ரைன் போன்றவற்றிலும் குவிந்திருக்கும் ஒரு பின்னணியில், ஈழத் தமிழர்களின் விவகாரத்தின் மீதான ஐநாவின் கவனக் குவிப்பு குறைவாக இருக்கும் என்ற பொருள்படக் கதைத்துள்ளார்.

அது ஒரு பூகோள யதார்த்தம். எரியும் பிரச்சினைகள் புதிதாக தோன்றியிருக்கும் ஒரு பின்னணியில், ஈழத் தமிழர்கள் விவகாரம் என்பது உலக சமூகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கான வாய்ப்புகள் குறைகின்றன. கடந்த 15 ஆண்டுகளிலும் நிலைமை அவ்வாறுதான் படிப்படியாக மாறி வருகிறது. இந்த விடயத்தில் ஈழத் தமிழர்கள் உலகத்தின் கவனத்தை ஈர்க்கத்தக்க விதத்தில் நமது பிரச்சினைகளை கொதி நிலையில் வைத்திருக்கவில்லையென்றால் ஐநாவின் கவனக்குவிப்பு மட்டுமல்ல ஏனைய உலகப் பேரரசுகளின் கவனக் குவிப்பும் குறைந்துவிடும்.

அப்படியென்றால் ஈழத் தமிழர்கள் தமது போராட்டத்தை கொதிநிலையில் வைத்திருக்க வேண்டும் என்று பொருள்.

ஈழத் தமிழர்கள் தமது அரசியல் அபிலாசைகளுக்காக போராடுகிறார்கள். ஆனால் தெட்டம் தெட்டமாக, ஆங்காங்கே சிறிய அளவில் போராட்டங்கள் நடந்து வருகின்றன. அவற்றில் பெரும்பாலானவை கவனயீர்ப்பு போராட்டங்கள்தான். குறிப்பாக காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான போராடும் சங்கங்கள் இடைக்கிடை போராடுகின்றன. கிழக்கில் மேச்சல் துறைக்காக போராடும் பண்ணையாளர்கள் அவ்வப்போது ஊடகங்களின் தலைப்புச் செய்தியாக மாறுவார்கள். இப்பொழுது தையிட்டி.

வெடுக்குமாரி மலை, குருந்தூர் மலே போன்றவை ஏற்கனவே அவ்வாறு ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாக வந்தன. இப்பொழுது இல்லை. இப்படித்தான் இருக்கிறது ஈழத் தமிழர்களின் போராட்டக் களம். தொடர்ச்சியாக அரசாங்கத்தின் கவனத்தையும் வெளி உலகத்தின் கவனத்தையும் தவிர்க்கப்பட முடியாதபடி கவர்ந்து வைத்திருக்கத்தக்க விதத்தில் உக்கிரமான எழுச்சியான போராட்டங்கள் அநேகமாக இல்லை.

இவ்வாறு தமிழ் மக்களின் போராட்டங்கள் சிறு திரள் போராட்டங்கள் அல்லது பெருமளவுக்கு கவன ஈர்ப்புப் போராட்டங்களாகவும் இடைக்கிடை, ஆங்காங்கே இடம்பெறுகின்ற தொடர்ச்சியில்லாத, ஒருங்கிணைக்கப்படாத போராட்டங்களாகவுந்தான்க ாணப்படுகின்றன.

குறிப்பாக, தையிட்டி போராட்டம் என்பது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியால் முன்னெடுக்கப்படும் ஒன்றாகும். ஒவ்வொரு பௌர்ணமி நாளும் அந்தக் கட்சியானது அந்த விகாரையின் வாசலில் நின்று போராடுகிறது. கடந்த 20 மாதங்களாக அப்போராட்டங்களில் விரல்விட்டு எண்ணக்கூடியவர்கள்தான் பெரும்பாலும் நிற்பார்கள். திரும்பத் திரும்ப ஒரே முகங்கள். ஏனைய தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகளையும் அங்கே கொண்டு வர முடிவதில்லை. அப்போராட்டம் தொடங்கிய புதிதில் அங்கஜன் ராமநாதன் போராட்டக்காரர்கள் மத்தியில் காணப்பட்டார். ஆனால் அதைத் தமிழ் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. பின்னர் அவர் பங்குபற்றுவதில்லை. சில நாட்களுக்கு முன் டக்ளஸ் தேவானந்தா அந்த போராட்டத்திற்கு ஆதரவாக கருத்து வெளியிட்டிருக்கிறார்.

கடந்த புதன்கிழமை நடந்த போராட்டத்தில் ஒப்பீட்டளவில் அதிக தொகை மக்கள் பங்குபற்றினார்கள் சிறீதரன் உட்பட தமிழரசுக் கட்சி, டெலோ போன்று ஏனைய கட்சிகளும் போராளிகள் நலன்புரி அமைப்புப் போன்ற அமைப்புகளைச் சேர்ந்தவர்களும் அங்கே காணப்பட்டார்கள்.

இந்த விவகாரத்தை சூடாக்கியது எதிர்மறை அர்த்தத்தில் அர்ஜுனாதான். கட்டி முடிக்கப்பட்ட விகாரையை இடிக்கக்கூடாது என்ற வாதத்தை அவர் முன்வைக்கிறார். வட மாகாண ஆளுநரும் அந்த நிலைப்பாட்டுக்குக் கிட்டவாக நிற்கிறார். இது தமிழ் மக்கள் மத்தியில் கோபத்தை ஏற்படுத்தியிருக்கிறது. அது காரணமாக கட்சி வேறுபாடுகளைக் கடந்து அரசியல் செயற்பாட்டாளர்கள் கடந்த புதன்கிழமை தையிட்டியில் கூடினார்கள்.

மு திருநாவுக்கரசு, பேராசிரியர் சிவத்தம்பி ஆகிய இருவரும் பகிடியாகச் செல்வார்கள், "எதிரிதான் தமிழ்த் தேசியத்தின் நண்பன்" என்று. எப்படியென்றால், ஆக்கிரமிப்பும் அடக்கு முறையும்தான் தமிழ் மக்களை போராடத் தூண்டுகின்றன என்ற பொருளில். எதிரியின் அடக்குமுறை அதிகரிக்கும் பொழுது தமிழ் கட்சிகள் வேறுபாடுகளை மறந்து கொதித்தெழுந்து ஒன்றுதிரள்வது உண்டு. ஆக்கிரமிப்பும் அடக்கு முறையும் குறையும் பொழுது அல்லது மறைமுகமானவைகளாக மாறும்போது தமிழ் மக்கள் உக்கிரமாகப் போராடுவதில்லை. அதாவது எதிர்த் தரப்பு தூண்டும் போதுதான் தமிழ்த் தரப்பு போராட எழுகிறதா? ஒன்றுபடுகிறதா?

தையிட்டி விவகாரத்திலும் அரசாங்கம் விகாரையை இடிக்கத் தயாரில்லை என்பதும் அந்த விகாரையை இடிக்கக் கூடாது என்று நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுனா கூறுவதும்தான் அந்த விடயத்தின் மீதான கவனக் குவிப்பைச் செறிவாக்கின.

அதாவது தமிழ்த் தரப்பின் போராட்டம் எனப்படுவது நான் திரும்பத் திரும்ப கூறுவது போல பெருமளவுக்கு "ரியாக்டிவ்" ஆனதாகத்தான் காணப்படுகிறது. வெளித் தரப்புகளின் நகர்வுகளுக்குப் பதில் வினையாற்றும் அரசியல். மாறாக "ப்ரோ ஆக்டிவ்" ஆனதாக இருப்பது ஒப்பீட்டளவில் குறைவு. அதாவது தமிழ்த் தரப்பு முன்னெடுக்கும் செயலூக்கம்மிக்க நடவடிக்கைகளின்மூலம் வெளித்தரப்புகளை தமிழ்த் தரப்பை நோக்கி ஈர்த்து வைத்திருப்பது அல்லது வெளித் தரப்புகளை தமிழ்த் தரப்புக்கு எதிராகவோ அல்லது சாதகமாகவோ பதில் வினையாற்றச் செய்வது குறைவு.

கடந்த 15 ஆண்டுகால தமிழ் மக்களின் போராட்ட வடிவம் அவ்வப்போது "ப்ரோஆக்டிவ்" ஆகவும் பெருமளவுக்கு "ரியாக்ட்டிவ்" ஆனதாகவுமே இருந்து வருகிறது.

ஒரு நாடற்ற அரசற்ற மக்கள் கூட்டம் ப்ரோ ஆக்டிவாக போராடுவது என்று சொன்னால் அதற்கு உரிய கட்டமைப்புகள் வேண்டும். தயாரிப்புகள் வேண்டும் மார்க்சிஸ்ருக்கள் மிகத் தெளிவாகக் கூறுவார்கள், புரட்சிகரமான ஸ்தா-பனம் இல்லாமல் புரட்சி இல்லை. புரட்சிகரமான சித்தாந்தம் இல்லாமல் புரட்சிகரமான ஸ்தாபனம் இல்லை என்று. அதாவது பெரிய இலட்சியங்கள் இருந்தால் மட்டும் போதாது. அந்த இலட்சியங்களை அடைவதற்கான வழிமுறைகளை, கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும். கட்டமைப்புகளுக்கு ஊடாகத்தான் தமிழ் மக்களை நிறுவனமயப்படுத்தலாம்.

ஆனால் எந்த ஒரு தமிழ்த் தேசியக் கட்சியிடமும் அது தொடர்பான பொருத்தமான தரிசனங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. உள்ளதில் பெரிய கட்சியாகிய தமிழரசுக் கட்சி தானே ஒரு ஸ்தாபனமாக, இறுக்கமான கட்சியாக இல்லை.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கடந்த நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகளோடு ஒப்பீட்டளவில் பலவீனம் அடைந்து விட்டது. சங்குக் கூட்டணி அதைவிடப் பலவீனம்.

இதுதான் தமிழ் தேசியப் பரப்பின் நிலை. இந்த கட்சிகளை ஒருங்கிணைக்கவல்ல சிவில் சமூகங்களும் இப்பொழுது துடிப்பாக இல்லை. அதற்குக் காரணம் ஜனாதிபதி தேர்தலில் ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்திய பின்னரான நிலைமைகள்தான். பொதுத் தமிழ் வேட்பாளரை நிறுத்திய தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு எனப்படுவது சிவில் சமூகங்களும் கட்சிகளும் இணைந்து உருவாக்கிய ஒரு பரிசோதனை முயற்சி. ஆனால் அந்தப் பரிசோதனையின் விளைவாக சிவில் சமூகங்கள் நாடாளுமன்ற தேர்தலுக்குப் பின்னரான ஒருங்கிணைப்பு முயற்சிகளில் வெளிப்படையாக இறங்கத் தயாரில்லை.

ஆனால் இது ஒரு தற்காலிகப் பின்னடைவு தான். சிவில் சமூகங்கள் மீண்டும் முன் கை எடுக்க வில்லையென்றால் கட்சிகளை யாருமே ஒருங்கிணைக்க முடியாது. ஏனென்றால் தாங்களாக ஒன்றிணையும் அளவுக்கு கட்சிகள் பக்குவமாக இல்லை. தாங்களாக ஒன்றிணைய முடியாதபடி கட்சிகள் பிளவுண்டு காணப்படுகின்றன. கட்சிகளுக்குள்ளேயே பிளவுகள். ஐக்கியத்தை உருவாக்க ஒன்றில் கட்சிகளுக்குள் இருந்து ஜனவசியம் மிக்க பரந்த மனப்பான்மை கொண்ட தலைவர்கள் வரவேண்டும். இல்லையென்றால் கட்சிகளுக்கு வெளியில் இருந்து யாராவது முயற்சிக்க வேண்டும்.

அந்த முயற்சிகள் பெரும்பாலும் மூன்று வகைப்படும். முதலாவது வகை, கட்சிகளைக் கூப்பிட்டு ஒரு மேசையில் அமர்த்தி இதைச் செய் என்று கூறுவது. விடுதலைப் புலிகள் இயக்கம் அதைத்தான் செய்தது. அதைச் செய்வதற்கு அந்த இயக்கத்திடம் வல்லமை இருந்தது. ஆனால் சிவில் சமூகங்களிடம் அப்படியான பலம் கிடையாது.

இரண்டாவது, ஒற்றுமை முயற்சிகளுக்கு அனுசரணை புரிவது. கடந்த 15 ஆண்டுகளாக சிவில் சமூகங்கள் அதைத்தான் செய்து வருகின்றன. அப்படிச் செய்வதற்குரிய ஆன்ம பலம் சிவில் சமூகங்களிடம் உண்டு. அதற்கும் அப்பால் நிதிப் பலம் அல்லது அரசியல் பலம் சிவில் சமூகங்களிடம் கிடையாது. ஜனாதிபதித் தேர்தலின் போது கற்றுக் கொண்ட பாடம் அது.

மூன்றாவது, கட்சிகளை ஒன்றிணைப்பதற்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது. சந்திப்புகளுக்கு ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது. இடைத் தொடர்பாளர்களாகச் செயற்படுவது.

இந்த மூன்று விதமான வழிகளிலும்தான் குடிமக்கள் அமைப்புகளோ அல்லது மத நிறுவனங்களோ அல்லது சமூகப் பெரியார்களோ கட்சிகளை ஒருங்கிணைக்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்ட பொழுது விடுதலைப் புலிகள் இயக்கம் இதில் முதலாவது வழிமுறையைக் கையாண்டது. ஜனாதிபதித் தேர்தலின் போது சிவில் சமூகங்கள் இதில் இரண்டாவது அல்லது மூன்றாவது வழிமுறையை கையாண்டன.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான பேரணி, பல்கலைக்கழக மாணவர்களின் ஒருங்கிணைப்பு முயற்சிகள் போன்றவற்றிலும் மூன்றாவது வழிவகை கையாளப்பட்டது.

ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னரான தொகுக்கப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில், சிவில் சமூகங்கள் பெருமளவுக்கு முன்கை எடுக்காத ஒரு நிலைமைதான் காணப்படுகின்றது. கஜேந்திரகுமாரின் ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு ஊக்கமாக ஒரு சிவில் சமூகம் காணப்படுகின்றது. ஆனால் அவர்கள் வெளிப்படையாக அதைச் செய்யவில்லை. அதை அவர்கள் வெளிப்படையாகச் செய்ய முடியாத அளவுக்கு அரசியல், சிவில் சமூகச் சூழல் காணப்படுகிறது.

எனவே இப்பொழுது இரண்டு முடிவுகளுக்கு வரலாம். ஒன்று சிவில் சமூகங்கள் மீண்டும் தங்களைப் பலப்படுத்திக் கொண்டு கட்சிகளை ஒருங்கிணைப்பதற்கு புதிய உபாயங்களை வகுப்பது. இரண்டாவது கட்சிகளை அப்படியே அவற்றின் போக்கில் விட்டுவிட்டு ஆர்வம் உடையவர்களும் அர்ப்பணிப்புக்குத் தயாராக இருப்பவர்களும் ஒரு மக்கள் இயக்கத்தைக் கட்டி எழுப்புவது. அந்த மக்கள் இயக்கம் தன்னைப் படிப்படியாகப் பலப்படுத்திக் கொண்டு, அதன்பின் கட்சிகளைக் கையாள்வது. இந்த இரண்டில் ஒரு முடிவை எடுக்கலாம். இதுதான் தமிழ் பொது வேட்பாளருக்கு பின்னரான தமிழ் அரசியல் சூழல். கடந்த புதன்கிழமை தையிட்டியில் கட்சிகள் ஒப்பீட்டளவில் ஒன்றாக நின்றமை வரவேற்கத்தக்கது. இங்கிருந்தும் தொடங்கலாம்.

# தமிழ் ஊடகத்துறை வரலாற்றில் தடம்பதித்த இராஜநாயகம் பாரதி!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா**



தமிழ் ஊடகத்துறையில் தனக்கென ஓர் இடத்தை பிடித்துள்ள இராஜநாயகம் பாரதி, நெருக்கடியான காலத்தில் தனது சிறப்பான ஊடகப் பணியை ஆற்றியிருந்தமை இந்த தேசம் ஒரு போதும் மறவாது.

நேரிய பார்வையில் அமைதியான பேச்சும், அதிராத சுபாவமும் பாரதியின் சிறப்பு அடையாளங்களாகும். ஆழமான பார்வைகளால் அனைத்தையும் அறிந்து வைத்திருந்த ஊடகப் பேரொளியாக விளங்கியவர்.

போர் முனைப்படைந்த காலகட்டத்தில், தமிழ் ஊடகத்துறையில் பாரிய பங்களிப்புச் செய்தவர்களில் ஒருவர் மறைந்த பாரதி இராசநாயகம் அவர்கள் ஆவார்.

முரசொலி, வீரகேசரி, தினக்குரல் என அவரது பத்திரிகையுலகப் பங்களிப்பு பரந்தது. இளம் எழுத்தாளர்கள் பலரின் படைப்புகளைத் தினக்குரலில் தொடர்ந்து வெளியிட்டு ஊக்குவித்த பெருமைக்குரியவர். அத்துடன் புதிய எழுத்தாளர்கள் பலரின் உருவாக்கத்துக்கு ஊக்குவித்து ஊடகக் களங்களை அமைத்தும் கொடுத்துள்ளார்.

**திருநெல்வேலி மைந்தன்:**

யாழ்ப்பாணம் திருநெல்வேலியை பிறப்பிடமாகக் கொண்ட பாரதி 1980 களில் ஈழமுரசு பத்திரிகையின் ஆசிரிய பீடத்தில் ஆரம்பித்தில் பணியாற்றினார்.

அதன் பின்னர் முரசொலி பத்திரிகை ஆசிரிய பீடத்திலும் பணியாற்றினார். 1987 இல் பாரதி முரசொலி ஆசிரியர் பீடத்தில் பணிபுரிந்த காலகட்டத்தில்,

இலங்கை இந்திய ஒப்பந்தம் கையொப்பமாகிய பின்னர் குடாநாட்டில் இருந்து கிழக்கு மாகாணத்துக்கு ஊடகப்பணி காரணமாக சக ஊடகவியலாளர்களுடன் சென்றார். அப்போது ஏற்பட்ட விபத்தில் தனது வலது கையில் பாதிப்புக்கு உள்ளானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




தமிழ் தேசிய ஊடகவியலாளர்களில் முக்கியமானமொருவராகத் தன்னை பின்னாளில் நிலைநிறுத்திக் கொண்ட பாரதி, 1990களின் பிற்பகுதியில் கொழும்பில், வீரகேசரி பத்திரிக்கையின் ஆசிரிய பீடத்தில் உதவியாசிரியராகப் பணியாற்றினார்.

மறைந்த ஊடகர் பாரதி ஒரு பணியின் போது தனது வலது கையை இழந்ததன் மூலம் பெரும் விலையை செலுத்த வேண்டியிருந்தாலும், தனது இடது கையால் எழுதப்பயிற்சி செய்து அதில் வெற்றி கண்டு, தொடர்ந்துபல காலம் ஊடகராக பணியாற்றி வந்தார். வடக்கில் மாத்திரமன்றி, அனைத்து தடைகளையும் துணிச்சலுடன் கடந்து கொழும்பிலும், ஒரு பத்திரிகையாளராக தொடர்ந்து பிரகாசித்தார்.

**தினக்குரல் பாரதி:**

1997ஆம் ஆண்டு தினக்குரல் பத்திரிகை தோற்றம் பெறவே அதில் தன்னை இணைத்துக் கொண்ட பாரதி ஞாயிறு தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக 2021 ஆம் ஆண்டு வரை பணிபுரிந்ததுடன் தினக்குரல் இணையத்தள ஆசிரியராகவும் இருந்தார்.

தினக்குரலில் மூத்த ஆசிரியர்களில் ஒருவராக அவரது பதவிக்காலம் மேலும் பிரகாசித்தது. அத்துடன் இலங்கை தமிழ் ஊடக கூட்டணியின் தலைவராகவும் செயல்பட்டார்.

இலங்கையின் ஊடக சுதந்திரம் மற்றும் தமிழ் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு தொடர்பான விவகாரங்களில் அவர் முக்கியமான பங்கையும் வகித்தார்.

2020களின் இறுதியில் மீண்டும் தனது மண்ணுக்குத் திரும்பிய பாரதி ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றியதுடன் தற்போது வீரகேசரியின் வடபிராந்திய பதிப்பின் ஆசிரியராகப் பணிபுரிந்த வேளையிலேயே காலமானார்.

ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் ஆர். பாரதி, அபிமன்யு, பார்த்திபன் ஆகிய பெயர்களில் பல்வேறு கட்டுரைகளை எழுதிவந்ததுடன் சர்வதேச ஊடகங்களுக்கும் அரசியல் கருத்துகளையும் செவ்விகளையும் வழங்கி வந்தார்.

தாயகத்தில் பல மாவட்டங்களிலும் நடத்தப்பட்ட ஊடக பயிற்சிப் பட்டறைகளிலும் பணியாற்றி இளம் மாணவர்களுக்கு ஊக்கம் அளித்து பயிற்சிகளை வழங்கியுள்ளார்.

ஊடகர் பாரதியின் பணியை கௌரவிக்கும் வகையில் பெப்ருவரி 2012 வெளியான மல்லிகை இதழ், இவரைப்பற்றிய சிறப்பிதழாக வெளியிடப்பட்டது.

தாயகத்தில் கடந்த சில வாரங்களாக நோய் வாய்ப்பட்ட நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அவர் கடந்த வாரம் பெப்ரவரி ஒன்பதாம் திகதி தனது வீட்டில் காலமானார்.

அவரது மறைவு இலங்கை ஊடக சகோதரத்துவத்திற்கும் தமிழ் ஊடகங்களுக்கும் ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். தமிழ் ஊடகத்துறையில் நிரப்ப முடியாத வெற்றிடமாய் பாரதியின் நினைவு கனத்துக் கிடக்கின்றது.

# மாணவர்களை வலுவூட்டும் பசுமை அறிவொளி நிகழ்ச்சி பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நல்லூரில் நடைபெற்றது

இலங்கை செய்திகள்
Sri Lanka News




இப்பசுமை அறிவொளி நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை (09.02.2025) நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில், "மாணவர்களுக்குச் சமூக விழுமியங்களைப் போதிப்பதில் பெற்றோரின் பங்கு" என்ற கருப்பொருளில் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது. இதில் ஆசிரியப் பார்வையில் வடக்கு மாகாண ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் கௌரி முகுந்தனும், உளவளப் பார்வையில் உளவளத்துணையாளர் ஜீவசர்மிலா வேந்தகுமாரும் வளவாளர்களாகக் கலந்துகொண்டு சிறப்புரைகளை ஆற்றியிருந்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் அவர்களின் பெற்றோர்களுடன் கலந்து கொண்டிருந்தார்கள். நிகழ்ச்சியின் இறுதியில் மாணவர்கள் அனைவருக்கும் சூழல் விழிப்புணர்வு நோக்கில் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்டிருந்த அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்பட்டன. இதற்கான நிதி அனுசரணையை இலங்கையில் பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்ற கனடாவைத் தளமாகக் கொண்ட ரொறன்ரோவின் மனிதநேயக் குரல் அமைப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் மாணவர்களுக்குச் சூழல்அறிவைப் புகட்டிச் சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் சூழல் பாதுகாப்பில் அவர்களைப் பங்குபற்றுநர்களாக்கும் நோக்குடனும், அவர்களின் பன்முக ஆளுமையை விருத்தி செய்யும் நோக்குடனும் பசுமை அறிவொளி என்னும் நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. மாணவர்களை வலுவூட்டுகின்ற

# இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கிளிநொச்சிக்கு விஜயம்

(11-2-2025)

இலங்கைக்கான விஜயத்தை மேற் கொண்டுள்ள ஜப்பானிய தூதுவர் அகிஜோ இசோமட்டா (Akio Isomata) தூதரக அதிகாரிகள், 11ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்றையதினம் கிளிநொச்சி பளை மற்றும் முகமாலை பகுதிக்குச்சென்று கண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டதுடன், கண்ணிவெடி அகற்றும் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினர்.



அன்று காலை பளை மற்றும் முகமாலைப்பகுதிக்குச் சென்று கண்ணிவெடி அகற்றும் நிறுவவனப் பிரதி நிதிகளுடன் கலந்துரையாடியதுடன் கண்ணிவெடி அகற்றும் பணிகளையும் பார்வையிட்டுள்ளார்.



அந்தப் பகுதியில் வெடிபொருட்கள் மிக ஆபத்தான நிலையில் காணப்படுவதாகவும் இந்தப் பகுதியில் மீள்குடியேற்றத்திற்குப்பின்னர் வெடிபொருட்களில் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளதுடன், பலர் காயமடைந்துள்ளதாகவும் கண்ணிவெடி அகற்றும் நிறுவனப்பிரதிநிதிகள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில், பளை மற்றும் முகமாலைப் பகுதியில் ஜப்பான் நிதிப்பங்களிப்புடன் டாஸ், கலோரெஸ்ட் மற்றும் சாப் நிறுவனத்தினால் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை கூறிப்பிடத் தக்கது.

கனடிய செய்திகள் Canadian News

# கனடாவின் மத்திய லிபரல் கட்சியின் அங்கத்தவர்கள் தங்கள் அடுத்த தலைவரை ஒட்டாவாவில் மார்ச் 9 அன்று தேர்ந்தெடுக்கவுள்ளனர்



கனடாவின் லிபரல் கட்சி தனது புதிய தலைவரை ஒட்டாவாவில் மார்ச் 9, 2025 அன்று அறிவிக்கும் என எதிபார்க்கப்படுகின்றது. இதற்கான ஏற்பாடுகளை கட்சியின் உயர் மட்டக்குழு செய்து வருகின்றது என்பதும் ஊடக நிறுவனங்களுக்கு அறியத்தரப்பட்டுள்ளது.

"இது கனடாவின் மக்களில் பலர் தாராளவாதியாக இருக்கும் ஒரு உற்சாகமான நேரம்" என்று சச்சிட் மெஹ்ரா கூறினார். "மார்ச் 9 அன்று, எங்கள் கட்சியின் அடுத்த தலைவரையும் பிரதமரையும் அறிவிக்க நாடு முழுவதும் இருந்து தாராளவாதிகளை எங்கள் நாட்டின் தலைநகருக்கு வரவேற்போம். ஒன்றாக, நாங்கள் எங்கள் இயக்கத்தை வளர்த்துக் கொள்வோம், அடுத்த மத்திய அரசிற்கான தேர்தலுக்கான பாதையின் வேகத்தை வளர்ப்போம் - எனவே அனைத்து கனேடியர்களுக்கும் சிறந்த எதிர்காலத்தை நாங்கள் வடிவமைக்க முடியும்." இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

லிபரல் கட்சி இந்த தேர்தல் ஆண்டை வலுவாக தொடங்குகிறது. 2025ம் ஆண்டில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள எமது தலைமைக்கான தேர்தலில் வாக்களிக்க கிட்டத்தட்ட 400,000 பதிவுசெய்யப்பட்ட கட்சி உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளனர், கட்சி அதன் வரலாற்றில் அடிமட்ட நிதி திரட்டலுக்காக ஜனவரி மாதத்தை அடைந்தது, கடந்த மாதம் மட்டும் 100 க்கும் மேற்பட்ட கனேடியர்கள் அடுத்ததாக கட்சிக்கு போட்டியிடுவதை எட்டியுள்ளனர்.

மார்ச் 9 நிகழ்வில் விருந்தினர் பேச்சாளர்கள் இடம்பெறுவார்கள் மற்றும் 2025 லிபரல் கட்சியின் புதிய தலைமைக்கான போட்டியின் முடிவுகளை அறிவிக்கும்.

எப்போது: ஞாயிறு, மார்ச் 9
எங்கே: நிகழ்வுக்கு முன்னர் அங்கீகாரம் பெற்ற ஊடகங்களுக்கான சான்றுகள் அனுப்பப்படும்.
ஊடகப் பிரதிநிதிகளின் வருகை எதிர்பார்க்கப்படுகின்றது. பிப்ரவரி 21 வெள்ளிக்கிழமைக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்: https://chefferie2025leadership.liberal.ca/media.../
ஊடக திட்டமிடல் குறித்த கேள்விகளை media@liberal.ca க்கு அனுப்பலாம்.

மேலும் விவரங்கள் மற்றும் சமீபத்திய புதுப்பிப்புகளுக்கு, தயவுசெய்து https://chefferie2025leadership.liberal.ca/ ஐப் பார்வையிடவும்.

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்: media@liberal.ca
(613) 627-2384

# டொனால்ட் டிரம்பின் பொருளாதாரப் போரிற்கு எதிராகப் போரடுகையில் கனடா "எந்த அளவிலான பாதிப்புக்களையும் ஏற்கத் தயாராக இருக்க வேண்டும்"

## ஒட்டாவாவில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் முன்னாள் கனடியப் பிரதமர்களில் ஒருவரான ஸ்டீபன் ஹார்பர் தெரிவிப்பு




கடந்த 11ம் திகதி செவ்வாய்கிழமை ஒட்டாவாவில் தனது சமீபத்திய அரசியல் வரலாற்றுப் புத்தகமான "கனடாவின் கொடிகள்" வெளியீட்டு விழாவில் பேசிய முன்னாள் பிரதமர்களில் ஒருவரான ஸ்டீபன் ஹார்பர் அவர்கள் தற்போதைய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ உட்பட கனேடிய தேசியவாதத்தில் ஏற்பட்ட எழுச்சியையும் போராட்ட உணர்வையும் வரவேற்றுப் பேசினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் அச்சுறுத்தல்களை எந்த விலையைக் கொடுத்து என்றாலும் இந்த நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க உறுதியுடன் எதிர்கொள்ள வேண்டும் என்று முன்னாள் பிரதமர் ஸ்டீபன் ஹார்பர் கூறினார்.

டொனால்ட் டிரம்ப் கனடாவின் அலுமினியம் மற்றும் எஃகுக்கு 25 சதவீத வரி விதித்தார்.

தற்போது ஒரு வணிக மற்றும் முதலீட்டு ஆலோசனை நிறுவனத்தை நடத்தி வரும் கனடாவின் கூட்டாட்சி கன்சர்வேடிவ் கட்சியின் இணை நிறுவனர் ஹார்பர், "தற்போதைய சூழ்நிலையைப் பற்றி நாம் என்ன செய்கிறோம்" என்பது குறித்து ஆலோசனை தேடும் வணிகர்களிடம், டிரம்பின் அச்சுறுத்தல்களில் "இங்கே உண்மையான ஆபத்து உள்ளது, உண்மையான வாய்ப்பும் உள்ளது" என்று சமீபத்தில் கூறியதாகவும், கனடியர்கள் "எனது கருத்தைப் பகிர்ந்து கொள்வார்கள்" என்று நம்புவதாகவும் கூறினார்.

"நான் இன்னும் பிரதமராக இருந்திருந்தால், நாட்டை வறுமையில் ஆழ்த்தவும், இணைக்கப்படாமல் இருக்கவும் நான் தயாராக இருப்பேன், அதுதான் நாம் எதிர்கொள்ளும் விருப்பமாக இருந்தால்," என்று ஹார்பர் அழைப்பாளர்களுக்கு மட்டுமேயான பார்வையாளர்களிடம் கூறினார்.

"இப்போது, டிரம்ப் உறுதியாக இருந்தால், அவர் பரந்த கட்டமைப்பு மற்றும் பொருளாதார சேதத்தை ஏற்படுத்த முடியும் என்று நான் நினைக்கிறேன், ஆனால் நான் அதை ஏற்றுக்கொள்ள மாட்டேன்," என்று ஹார்பர் கூறினார். "நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்க எந்த அளவிலான சேதத்தையும் நான் ஏற்றுக்கொள்வேன்."

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் இரும்பு மற்றும் அலுமினிய கட்டணங்கள் இரு நாடுகளுக்கும் தீங்கு விளைவிக்கும் என்பதை ஒட்டாவா அரசாங்கம் நம்ப வைக்கும் என்று பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ கூறுகிறார்.

"அதில் முக்கியமானது என்னவென்றால், நமது பொருளாதாரத்தை எவ்வாறு மறுசீரமைப்போம் என்பதற்கான ஒரு திட்டத்தை வைத்திருப்பது, இதனால் நாம் மீண்டும் அந்த செழிப்பை மீட்டெடுப்போம், சேதத்தைத் தீர்ப்பது மட்டுமல்ல," என்று அவர் மேலும் கூறினார்.

கனடாவின் நவீன மேப்பிள் இலைக் கொடியின் பரிணாமத்தை புத்தகமாகவும் விளக்கக்காட்சியாகவும் கோடிட்டுக் காட்டிய ஹார்பர், "நமது வரலாறு, நமது அடையாளம் மற்றும் நமது கலாச்சாரங்கள் பாதுகாக்கத்தக்கவை" என்பதை வலியுறுத்தினார்.

மார்ச் 12 முதல் அமலுக்கு வரும் வகையில், கனடா உட்பட, உலகளாவிய எஃகு மற்றும் அலுமினிய இறக்குமதிகள் மீது 25 சதவீத வரிகளை விதிக்கும் நிர்வாக உத்தரவில் டிரம்ப் கையெழுத்திட்ட மறுநாளே, ஹார்ப்பரின் கருத்துக்கள் உற்சாகமான கைதட்டல்களைப் பெற்றன என்றே கூறவேண்டும். ட்ரூடோ இந்த வரிகளை "நியாயமற்றது" என்று அழைக்கிறார், மேலும் அது நடந்தால் கனடா பதிலளிக்கும் என்று சபதம் செய்கிறார். டிரம்பின் மற்றொரு பெரிய அச்சுறுத்தல் - அனைத்து கனேடிய பொருட்களுக்கும் 25 சதவீத வரி, எரிசக்தி மீது 10 சதவீத கூடுதல் வரி - இன்னும் இந்த நாட்டில் தொங்கிக் கொண்டிருக்கிறது,

கட்டண அச்சுறுத்தல்கள் குறித்து ஹார்பர் நேரடியாகக் கருத்து தெரிவிக்கவில்லை, அல்லது கனடா பதிலடி கொடுக்க வேண்டுமா அல்லது எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்தும் கருத்து தெரிவிக்கவில்லை,

ஹார்பர் ஒரு கூட்டு அறிக்கையில் கையெழுத்திட்ட ஐந்து முன்னாள் பிரதமர்களில் ஒருவர். டிரம்பின் "அச்சுறுத்தல்கள் மற்றும் அவமானங்களை" எதிர்கொண்டு கனடியர்கள் காட்டிய "தேசிய உணர்வை" "பாராட்ட" செவ்வாய்க்கிழமை அவரது நூல் வெளியிடப்பட்டது.

இந்த ஆண்டு தேசிய "கொடி தினமான" அன்று, "எங்கள் சக கனடியர்கள் இதுவரை இல்லாத அளவுக்கு கொடியைக் காட்டுமாறு நாங்கள் அழைக்கிறோம்." ஜோ கிளார்க், கிம் கேம்பல், ஜீன் கிரெட்டியன், பால் மார்ட்டின் மற்றும் ஹார்பர் உள்ளிட்ட முன்னாள் பிரதமர்கள், "நாங்கள் ஐந்து பேரும் வெவ்வேறு கட்சிகளைச் சேர்ந்தவர்கள். கடந்த காலத்தில் எங்களுக்குள் பல போராட்டங்கள் நடந்துள்ளன. ஆனால் நாம் அனைவரும் ஒரு விஷயத்தில் உடன்படுகிறோம்: உண்மையான வடக்கு, வலுவான மற்றும் சுதந்திரமான, உலகின் சிறந்த நாடான கனடா, கொண்டாடுவதற்கும் போராடுவதற்கும் மதிப்புள்ளது" என்று ஹார்பர் செவ்வாயன்று ராயல் கனடியன் புவியியல் சங்கத்தின் தலைமையகத்தில் தனது புத்தக வெளியீட்டு விழாவின் போது கூறினார்.

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

மீண்டும் தேர்வு செய்யுங்கள்

விஜய் தணிகாசலம்

ஸ்காபரோ றூஜ் பார்க் PC வேட்பாளர்

RE-ELECT
FEB
27
2025





ONTARIO PC

விஜயின் அணியில் இணைந்து ஆதரிக்க அழையுங்கள்

vijaythani.ca info@vijaythani.ca 416-354-6320 221 Morrish Rd

Authorized by the CFO for the Vijay Thanigasalam Campaign



ONTARIO PC

மீண்டும் தெரிவு செய்யுங்கள்

அரிஸ் பாபிகியன்

ஸ்கார்பாரோ-அஜின்கோர்டுக்கான பிசி வேட்பாளர்

"முடிவுகளை வழங்கக் கூடிய உங்களுக்கான குரல்"

- ஷெப்பர்ட் சுரங்கப் புகையிரதப் பாதை கிழக்கு நீட்டிப்பை முன்னேற்றுதல்
- புதிய பிர்ச்மவுண்ட் மருத்துவமனையை உருவாக்க 1 பில்லியன் டாலர் முதலீடு
- மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு நபரையும் ஒரு குடும்ப மருத்துவரிடம் இணைக்க 1.8 பில்லியன் டாலருக்கும் அதிகமாக முதலீடு செய்தலவர்
- தமிழ் சமூக மையம் அமைப்பதற்கான நிதியைப் பெற உதவியவர்
- பிரிட்லெட்டவுன் சமூகம் மற்றும் சுகாதார மையத்தை உருவாக்க உறுதியான நிதி ஒதுக்கியவர்
- க்ரைம்-ஹேவன் ஸ்கார்பாரோ டெல்டா ஹாஸ்டலை மூடுவதற்கு வாதிடப்பட்டது



எங்களுக்கு உங்கள் உதவி தேவை!

ஆரம்பத்தில் தன்னார்வத் தொண்டு, நன்கொடை மற்றும் வாக்களிப்பதன் மூலம் அரிஸ் பாபிகியன் அவர்களுக்கு தங்கள் ஆதரவை வழங்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து அழைக்கவும்: (416) 775-9510

அரிஸ் பாபிகியன் அவர்களுக்கு உங்கள் வாக்குகளை அளியுங்கள்!

அரிஸ் பாபிகியன் பிரச்சாரத்திற்காக CFO ஆல் அங்கீகரிக்கப்பட்டது.

# ONTARIO PC

**DOUG FORD AND RAYMOND CHO ARE FIGHTING FOR A STRONGER ONTARIO**
வலுவான ஒன்டாரியோவைப் பாதுகாக்க போராடுவோம்

**We need a strong mandate from the people for our plan to protect Ontario.**
ஒன்டாரியோவைப் பாதுகாக்க எமக்கு மக்களின் உறுதியான ஆணை வேண்டும்.

- Building Our Economy - எமது பொருளாதாரத்தை வலுப்படுத்துவோம்
- Protecting Workers - தொழிலாளர்களைப் பாதுகாப்போம்
- Keeping Us Competitive - போட்டிமிகுத் தன்மையை பேணுவோம்
- Cleaning Up Our Streets - தெருக்களை சுத்தம் செய்வோம்
- Delivering Better Care - சிறந்த சுகாதார சேவையை வழங்குவோம்

**MOVING SCARBOROUGH FORWARD - STRONGER & BETTER**
ஸ்காபரோவை மேலும் வலுவாக, சிறப்பாக முன்னேற்றுவோம்!

- *2 new Subway Lines* - இரண்டு புதிய *Subway* பாதைகள் ✓
- *A new Birchmount Hospital* - புதிய *Birchmount* மருத்துவமனை ✓
- *New UTSC Medical School* - புதிய மருத்துவக் கல்லூரி ✓

DELIVERED

NEW

***Sheppard East Subway Extension - Construction Completion A Year Sooner***
*Sheppard East Subway* விரிவாக்கம் - ஒரு வருடத்திற்குள் பூர்த்தி

***NEW GO Line serving Scarborough***
ஸ்காபரோவிற்கு புதிய *GO Line* சேவை

***Hwy 401 Eastbound Rebuild & Upgrade***
நெடுஞ்சாலை *401* கிழக்கு புனர்நிர்மாணம், மேம்படுத்தல்

VOTE

**ADVANCE POLL**
**Thu, Feb 20 - Sat, Feb 22**
**10 AM - 8 PM**
முன்கூட்டிய வாக்களிப்பு
பெப்ரவரி 20 - 22
காலை 10 மணி முதல்
இரவு 8 மணி வரை




**RE-ELECT**
மீண்டும் தெரிவோம்

# RAYMOND CHO

PC CANDIDATE FOR
**SCARBOROUGH NORTH**
PC வேட்பாளர் - ஸ்காபரோ வடக்கு

**NEED A RIDE • REQUEST A LAWN SIGN**
**MAKE A DONATION • SIGN UP AS VOLUNTEER**

@RaymondChoPC
@RaymondChoPC

647-256-8880 www.voteforcho.ca vote@voteforcho.ca

4500 Sheppard Avenue East, Unit 111, Scarborough

Authorized by the CFO of the Raymond Cho Campaign







- ✔ First Tamil elected to political office in North America with over 19 years of experience
  வட அமெரிக்காவில் பொதுசேவைக்கு முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டு 19 வருடங்களாக தொடர்ந்து சேவை புரிந்தவர்.

- ✔ Advocated for a York University Campus in Markham by securing an allocation of $127 million.
  யோர்க் பல்கலைக்கழக உயர் கல்வி வளாகத்தை மார்கத்துக்கு கொண்டுவருவதற்கு, குரல் எழுப்பி $127 மில்லியன் நிதியை அரசிடம் இருந்து சேர்த்துக்கொடுப்பதற்கு பாடுபட்டவர்.

- ✔ Championed the new Aaniin Community Centre and Library
  Aaniin சன சமூகநிலையம், நூலகம் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றியவர்.

- ✔ Responsible for naming many streets in Markham in honour of the Tamil identity, community and culture.
  தமிழர்களின் அடையாளங்களையும், வரலாற்றையும், முகங்களையும் அங்கீகரிக்கும் வகையில் கனடாவில் பல வீதிகளுக்கு, பூங்காக்களுள்க்கும் தமிழ் பெயர்களை சூடியவர்.

- ✔ First to initiate the official recognition of Thai Pongal & Tamil Heritage Month
  மார்க்கம், கனடாவில் முதன்முதலில் தைப்பொங்கலும், தமிழ்மரபுரிமை மாதமும் உத்தியோகபூர்வமாக பிரகணபடுத்துவற்கான முயற்சிகளில் ஈடுபட்டு இவரின் பதவிக்காலத்திலேயே அதை நிறைவேற்றியவர்.

- ✔ Unanimously passed a resolution to investigate genocide in Sri Lanka at the City of Markham
  முதன்முதலில் தமிழர்கள் மீதான இனப்டுகொலை முடிவுக்கு கொண்டுவருவதற்கான விசாரணை வேண்டும் என்ற தீர்மானத்தை மார்க்கம் மாநகரசபையில் நிறைவேற்ற முன் நின்று உழைத்தவர்.

- ✔ Initiated a Friendship Agreement between the City of Markham and Mullaitivu
  இவரது பதவிக்காலத்தில் மார்க்கம் மாநகர சபைக்கும் வடமாகாணத்துக்கும் (முல்லைத்தீவு) இடையே நட்பு ரீதியான ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டது.

- ✔ Doug Ford provides strong leadership and a proven track record  to fight the tariffs that will impact our economy, with large job losses and increased costs of living.
  எங்கள் பொருளாதாரத்தை பாதிக்கும் அமெரிக்க வரிகளை (25% American Tariffs) எதிர்த்து போராடி, மேலும் அதிக வேலை இழப்புகளையும், வாழ்க்கை செலவின் உயர்வுகளையும் தடுப்பதற்கு Doug Ford-இன் வலுவான தலைமைத்துவமும், அவரின் கடந்த பங்களிப்பும் வழிவகுக்கும்.

## *Vote Early! Feb 20-22 (Aaniin Community Centre & Milliken Mills Community Centre)*

markhamthornhill.ontariopc.ca | 905 209 6851 | logankanapathi

Authorized by the CFO of the Logan Kanapathi Campaign



# முதியவர்கள் நீண்ட காலம் தமது இல்லத்தில் வாழக்கூடிய வகையில் வீட்டுப் பராமரிப்பு திட்டத்தை ஒன்ராறியோ என்.டி.பி. மீண்டும் அறிமுகப்படுத்துகிறது

## எங்கள் திட்டம்:

- → வீட்டு பராமரிப்புக்கான முதலீடுகளை அதிகரிக்கும்
- → குடும்ப பராமரிப்பாளர்களுக்கு நேரடி நிதி உதவி வழங்கும்
- → கடினமாக உழைக்கும் பொதுத்துறை ஊழியர்களுக்கு பணவீக்கத்திற்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படுவதை உறுதி செய்யும்

**பெப்ரவரி 27, உங்கள் பக்கம் இருக்கும் ஒரு அரசாங்கத்திற்கு ஒன்ராறியோ என்.டி.பி.க்கு வாக்களியுங்கள்**



**Thadsha Navaneethan**
Scarborough North



**Doly Begum**
Scarborough Southwest



**Sonali Chakraborti**
Scarborough Centre



**Christian Keay**
Scarborough—Guildwood



**Francesca Policarpio**
Scarborough—Agincourt



**Hibah Sidat**
Scarborough—Rouge Park

AUTHORIZED BY THE CFO FOR THE ONTARIO NDP

ONTARIO NDP NPD

# உலகில் மிகவும் அதிகமாக கண் தானம் வழங்குகின்ற நாடு எது? என்ற கேள்வி எழுகின்றபொழுது இந்தியப் துணைக்கண்டத்தில் அமைந்துள்ள நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற இலங்கை என்ற நாட்டையே நீங்கள் காண்பீர்கள்.

## 2025 உலகத் தலைவர்கள் உச்சி மாநாட்டில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு




உலகில் மிகவும் அதிகமாக கண் தானம் வழங்குகின்ற நாடு எது? என்ற கேள்வி எழுகின்றபொழுது இந்தியப் துணைக்கண்டத்தில் அமைந்துள்ள நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற இலங்கை என்ற நாட்டையே நீங்கள் காண்பீர்கள். அத்தகைய பொதுநலம் கருதுகின்ற இரக்கமுள்ள இதயம்படைத்த பிரஜைகள் வசிக்கின்ற நாட்டைப் பிரதிநிதித்தும் செய்து உங்கள் முன் உரையாற்றக் கிடைத்ததையிட்டு எனது நாட்டின் பிரஜைகளின் பெயரால் நான் பெருமிதம் அடைகிறேன் என 2025 உலகத் தலைவர்கள் உச்சி மாநாட்டில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி அநுர குமார பெருமிதத்துடன் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயிட் அல் நஹியனின் அழைப்பையேற்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு கடந்த 10ம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திற்குப் புறப்படுச் சென்றார். இந்த சுற்றுப்பயணத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க டுபாயில் நடைபெறும் 2025 உலகத் தலைவர்கள் உச்சி மாநாட்டிலும் உரை நிகழ்த்தவும் ஏற்பாடாகியிருந்தது.

அந்த ஏற்பாட்டின்படி ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மேற்படி மாநாட்டில் சிறப்பான ஒரு உரையாற்றினார். அந்த உரையானது பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு உடனுக்குடன் அனைத்து பிரமுகர்களும் கேட்கும் படியாக வசதி செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி அநுர குமார பின்வரும் காத்திரமான விடயங்களை அனைத்துலகின் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்த்தர்கள் ஆகியோரோடு பகிர்ந்து கொண்டார்.

“எதிர்கால நோக்கிலான பிரவேசங்கள், தொழில்நுட்ப புத்தாக்கம் உள்ளிட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்தும் கருத்தாடலை ஏற்படுத்த உலகத் தலைவர்களை ஒரே மேடையில் அமர்த்துவதே உலகத் தலைவர்கள் மாநாட்டில் முக்கிய நோக்கமாகும். இந்த மாநாட்டில் மனித சமூகம் தற்காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், எதிர்கால முன்னேற்றங்கள், புதிய வாய்ப்புகள் தொடர்பில் நாடுகளுக்கிடையில் கருத்து பரிமாறிக்கொள்ளப்படவுள்ளது. இதில் 150 நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி 4000ற்கும் அதிகமானவர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

மனித வரலாற்றின் தீர்மானகரமான திருப்புமுனையில் இருந்துகொண்டு முன்னொருபோதும் இருந்திராத உலகளாவிய ஒத்துழைப்பினை வேண்டி நிற்கின்ற தருணத்தில் நடாத்தப்படுகின்ற தனித்துவமான மாநாட்டில் உரை நிகழ்த்தக் கிடைத்தமை மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

எனது நாடு வியத்தகு வரலாற்றினையும் எதிர்காலம் பற்றிய சுபமான கனவினைக் காண்கின்ற நிகழ்காலத்தையும் அகல் விரிவான அரசியல் மற்றும் சமூக அறிவினாலும் கட்டி வளர்க்கப்பட்ட பிரஜைகளைக் கொண்ட அழகான தீவாகும். உலகின் எந்தவொரு நாட்டிலும் இடம்பெறுகின்ற சம்பவம் பற்றிய ஒத்துணர்வு எனது நாட்டு மக்களிடம் நிலவுகின்றது. அவர்கள் மரபுகளை நேசிப்பதைப்போன்றே மாற்றப்படவேண்டிய இடங்களை மிகவும் விவேகமான வகையில் மாற்றிக்கொள்ளும் அளவிற்கு விரிவான சமூக அறிவு நிரம்பியவர்களாவர்.

அதைப்போலவே உங்கள் கையில் இருக்கின்ற கையடக்கத் தொலைபேசியில் இத்தருணத்தில் இணையத்தளத்தை பரிசீலனைசெய்து பார்த்தால் “உலகில் மிகவும் அதிகமாக கண் தானம் வழங்குகின்ற நாடு எது?” இந்தியப் துணைக்கண்டத்தின் ஓரத்தில் அமைந்துள்ள நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற நாட்டையே நீங்கள் காண்பீர்கள். அதுவே இலங்கை.

அத்தகைய பொதுநலம் கருதுகின்ற இரக்கமுள்ள இதயம்படைத்த பிரஜைகள் வசிக்கின்ற நாட்டைப் பிரதிநிதித்தும் செய்து உங்கள் முன் உரையாற்றக் கிடைத்ததையிட்டு எனது நாட்டின் பிரஜைகளின் பெயரால் நான் பெருமிதம் அடைகிறேன்.

மானிட வர்க்கம் பற்றிய முக்கியமான பிரிவுகளில் எதிர்கால உபாய மார்க்கங்களையும் திட்டங்களையும் அபிவிருத்தி செய்தல் மீது கவனம் செலுத்தி நடாத்தப்படுகின்ற இந்த மாநாடு எதிர்கால உலகின் நல்வழியுரிமைக்கு உறுதுணையாக அமையுமென நான் நம்புகிறேன்.

நிகழ்காலத்தில் நாங்கள் நாடுகள் என்ற வகையிலும் பிராந்திய ரீதியாகவும் சர்வதேச மட்டத்திலும் எதிர்நோக்குகின்ற சிக்கல்கள் அளப்பரியவை அதைப்போலவே சிக்கல் நிறைந்தவையாகும்.

இந்த பிரச்சினைகளை பொருட்படுத்தாத ஒருசிலர் தமது சுயநலப் பயணத்தில் ஈடுபட்டுள்ளார்கள். எனினும் இன்றைய நாளின் தனிப்பட்ட பிரச்சினைகள் நாளைய தினத்தில் முழு உலகினதும் கதவுகளைத் தட்டுகின்ற பிரச்சினைகளாக மாறும் வேளையில் அவர்களின் சுயநலப் பயணம் முற்றுப்பெறும்.

அதனால் தேச எல்லைகளைக் கடந்து பயணிக்கின்ற சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக நாங்கள் உலகளாவிய பிரஜைகள் என்றவகையில் ஒன்றிணைய வேண்டுமென்பது மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்படுகின்றது.

அதனால் இந்த சவால்களை எதிர்கொள்வதற்காக கூட்டான உலகளாவிய செயல்வழிமுறையும் ஒருங்கிணைந்த முன்னணியொன்றும் அவசியமாகின்றது.

ஆளுகையின் பொறுப்புக்கூறல் மற்றும் வினைத்திறனை அதிகரித்தல் எதிர்கால உலகிற்கு அத்தியாவசியமாகின்றது. அது பிரஜைகளை தனித்தனியாக கூட்டுமுயற்சியொன்று வரை கொண்டுவருவதற்காக பழக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

அரச நிறுவனக் கட்டமைப்பும் உத்தியோகத்தர் குழாமும் தமது செயற்பாங்குகள் பற்றி பொறுப்பு வகிப்பதன் மற்றும் பொறுப்புக்கூறவேண்டியதன் அவசியம் எதிர்கால உலகம் மீது தீர்மானகரமானதாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

சமூக நீதி மற்றும் சட்டத்தின் ஆட்சியானது தரமிக்க தேசமொன்றைப் போன்றே விளைவுவளமிக்க உலகமொன்றுக்கு மிகவும் முக்கியமானதாக அமைகின்றது. உடன்படிக்கைகளையும் சட்டங்களையும் முறைசார்ந்தவகையில் அமுலாக்குவதும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் உறுதிநிலையற்ற சமுதாயங்களுக்கு முறைப்படி ஒத்துழைப்பினை வழங்குவதும் உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்காக சுதந்திர ஊடகங்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களுக்கு வாய்ப்புக்களை வழங்குவதும் மிகமுக்கியமானதாக அமைகின்றது.

1948 மனித உரிமைகள் நிகழ்ச்சிநிரலில் இருந்திராத டிஜிட்டல் அணுகலுக்கான உரிமைகள் சுற்றாடலுக்கான உரிமைகள் புதிய உரிமைகள் மற்றும் அரசியல் முறைமைகள் தோன்றியமை மனித உரிமைகள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட அனைத்துலகப் பிரகடனமொன்றின் அவசியத்தை வேண்டிநிற்கின்றது. அது தொடர்பில் கரிசனை கொண்டு இடையீடுசெய்ய வேண்டியதன் அவசியத்தை இத்தருணத்தில் ஞாபகப்படுத்துகிறேன்.

நிலைபெறுதகு பெறுமதிகளை அடிப்படையாகக்கொண்ட உலக சமுதாயமொன்றை கட்டியெழுப்புகையில் உலகின் பல்வேறு கலாச்சார மரபுகளின் நன்மதிப்பினைப் பேணிவரவேண்டியதும் முக்கியமானதாக அமைகின்றது.

மிகவும் வறிய நாடுகளில் நூற்றுக்கு 60 வீதத்திற்கு கிட்டியவை கடன் நெருக்கடியில் அல்லது கடன் நெருக்கடியின் உயர்மட்ட அபாயநேர்வில் இருக்கின்ற நிலைமையில் எதிர்காலம் மற்றும் உலகளாவிய பொருளாதாரம் பற்றிய பாரதூரமான பெருமூச்சு விடப்படுகின்றது. உலகளாவிய நிதியளிப்பு நிபந்தனைகள் அதிகரிக்கின்றமை எதிர்காலத்தில் செலுத்தப்படவுள்ள பெருந்தொகையான கடனைச் செலுத்துதல் மற்றும் இறையாண்மைக் கடன் நெருக்கடிக்கு முகங்கொடுக்க நிகழ்கால சர்வதேச நிதிக்கட்டமைப்பு பலவீனமானவகையில் தயாராகியமையால் உலகளாவிய நோக்கு மிகவும் சிக்கலானதாக மாறியுள்ளது. நவீன உலகிற்கு நியாயமானவகையில் சீராக்கிக்கொள்ளக்கூடிய நிதிசார் திருத்தங்களின்பால் நிலைமாற்றமடைவது மிகவும் முக்கியமான விடயமாக அமைகின்றது.

காலநிலை மாற்றங்கள் உயிர்ப்பன்வகைமை அற்றுப்போதல் மற்றும் கடுமையான ஊழல் போன்ற கட்டுப்பாடற்ற கைத்தொழில் வளர்ச்சியின் படுமோசமான பாதகவிளைவுகளை நோக்கி இந்த கிரகம் பயணித்துக்கொண்டிருக்கிறது. அது புவியை நோக்கி பல ஒளியாண்டு வேகத்தில் வருகின்ற கொடூரமான விண்கற்களை விட பயங்கரமானதாகும். பெரும்பாலும் ஒருசில அபிவிருத்தியடைந்த நாடுகள் காபன் டயொக்சயிட் உமிழ்வின் முக்கால்வாசிக்கு பங்களிப்புச் செய்துள்ளபோதிலும் அவை காலநிலை மாற்றங்களின் தாக்கத்திற்கு மிகவும் குறைவாகவே இலக்காகின்றன.

அபிவிருத்தியின் மகுடத்திற்கான தூரம் நீண்டதாக இருந்தபோதிலும் இயற்கை அழகுநிறைந்த குறைந்த வருமானம் பெறுகின்ற பல நாடுகளின் வனப்பு வேறு தரப்பினர்களின் கழிவுப்பொருட்களால் அழிவடைந்து வருகின்றது. அத்தகைய நாடுகளும் தீவுகளும் கொண்டுள்ள அழகான கடற்கரைப் பரப்புகள் அந்த அனர்த்தங்களுக்கு இரையாகி உள்ளன. வாழ்நாளில் என்றாவது ஒருநாள் நீங்கள் எமது நாட்டுக்கு சுற்றுலா மேற்கொண்டால் நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்பு பற்றி நீங்கள் வியப்படைவீர்கள். அதைப் போலவே உங்களை மட்டற்ற மகிழ்ச்சியில் பூரிப்படையச் செய்விக்கின்ற விருந்துபசாரத்தை எமது மக்கள் உங்களுக்கு வழங்குவார்கள். விருந்தோம்பலை நாங்கள் இயல்பாகவே உங்களுக்கு வெகுமதியாக வழங்கினாலும் எமது நாட்டின் கரையோரப் பரப்பினை அழகாக பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு தேசமென்றவகையில் நாங்கள் விடாமுயற்சியுடன் அர்ப்பணிப்புச் செய்துவருகிறோம்.

டிஜிட்டல் புரட்சி ஏற்கெனவே மனிதர் வாழ்கின்றவிதம் வேலை செய்கின்ற விதம் மற்றும் தொடர்பாடலில் ஈடுபடுகின்ற விதம் என்பவற்றை மாற்றியுள்ளது. பில்லியன் கணக்கான மக்கள் மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியமாகவும் விளைவாற்றல்மிக்க வாழ்க்கையைக் கழிப்பதற்காகவும் உதவுகின்ற ஆற்றலைக் கொண்டுள்ள அந்த தொழில்நுட்பமே உலகம் முழுவதிலுமுள்ள பிரஜைகளுக்கும் அரசாங்கங்களுக்கும் புதிய சவால்களை உருவாக்குகின்றதென்பதையும் எம்மால் மறந்துவிட முடியாது.

மிகவும் எளிமையாக கணினி வைரஸ் ஒன்று பற்றி சிந்தியுங்கள். அது துப்பாக்கிக் குழாய் மூலமாக சுடுவதோ அல்லது ஆகாய விமானத்திலிருந்து அணுக்குண்டு வீசுவதோ அல்லது ஏவுகணை எறிகின்ற கருவிமூலமாக தாக்குதலை நடாத்துவதோ கிடையாது. எனினும் கடந்த காலத்தில் அணுவாயுத தாக்குதலைப் பார்க்கிலும் பாரிய அச்சுறுத்தல் சைபர் தாக்குதல் ஊடாக இடம்பெற்றுள்ளது. ஆயுதங்களைக்கொண்ட மரபுரீதியான யுத்தங்களின்போது சிவிலியன்கள் இலக்காகக்கொள்ளப்படுதல் போன்றவற்றுக்கு எதிராக சர்வதேச சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சைபர் யுத்தங்களுக்கு அத்தகைய சட்டங்கள் அவசியமல்லவா?

(தொடர்ச்சி 19 பக்கம்)

# பாசப் பெட்டகம்

மகிமை கொண்ட மனித வாழ்வை
மாண்புடன் கொண்டவர் நீர்
மண்ணில் இன்று நீர் இல்லை எனினும்
மறக்குமோ மங்காத உம் பெருமை!

கந்தையா பாய்க்கியம் தம்பதியினரின்
முதல் முத்தாய் வந்துதித்து,
1936ம் ஆண்டின் ஆடி மாதம் இருபத்தெட்டாம் நாளன்று
மூளாயின் முற்றத்தில் முகவரி கொண்டீர்
விசாகபூசணம் என்ற அழகு நாமம் அணிந்தவர் நீர்
பதினொரு சக உதிரங்கள் கொண்டவர் நீர்
முருகையா என்ற ஆளுமையை மணந்து
ஐந்து பிள்ளைச் செல்வங்கள் பெற்றவர் நீர்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள் கண்டு பூரித்து
என் தலைமுறை இவை என எண்ணிக்
கொண்டாடி மகிழ்ந்தவர் நீர்

கல்விக்கும், கலைக்கும் நீர் ஒரு அட்சய பாத்திரமே!
கல்வி கற்றுத் தேர்ந்தோர் அதைப் பிறருக்கு
அள்ளிக் கொடுக்க மனம் வேண்டும், திறன் வேண்டும்
ஆனால் அதைத் தவம் என்றே செய்தவர் நீர்
ஆசிரிய ஆலோசகர் என்ற தலைமைப் பொறுப்பேற்று
தரம் குன்றாக் கல்வியை மாணவர் பெற்றிட
முழு மூச்சாய் உழைத்தவர் நீர்
"முதல் கோணல் முற்றிலும் கோணல்" என்று சிந்தையில் கண்டு
சிறார்கள் கல்வியில் சிரத்தை கொண்டு
உம்மை அவர்களுக்காய் தந்தவர் நீர்
கலைகள் பல ஆர்வமுடன் கற்று
,ளைய தலைமுறைக்கும் அதைக்
கற்றுத் தந்து மகிழ்ந்தவர் நீர்
உம் திறமையையும், பொறுப்பையும்
அடையாளம் கண்டு உனக்கு
தங்கப் பதக்கமுடன் பல விருதுகள்
தந்து கௌரவித்தனர் பலர்
எண்ணற்ற பாராட்டுக்களும், விருதுகளும்
வரிசையாகப் பெற்றுக் கொண்டாலும்
சாதாரண பெண்ணாக தலை நிமிர்ந்து
நடந்திட்டீர் தரணியிலே!

அழகுச் சிலை நீர் பதினாறில் மட்டுமல்ல
இயலாமை தொட்ட வயதிலும்
கட்சிதமாய் உடை அணிந்து, மங்கலமாய்க் காட்சி தருவீர்!
புன்னகை உந்தன் பொன்னகையோ - அதில்
மிளிர்ந்திடும் ஒளிக்கீறல் உன் வாழ்வின் தத்துவமோ!
உடல் பலம் குன்றினாலும் உம்
மனப் பலம் இமயத்தை வென்று நிற்கும்.

பண்பின் இலக்கணம் நீர்
அன்பின் இலக்கியம் நீர்
உண்மைக்கு ஒளி விளக்கு நீர்
கருணைக்கோ அந்தக் கடவுள் நீர்!
பூக்களோடு பூத்திருப்பீர் அதன் மென்மையைக் கொண்டிருப்பீர்
இசையோடு இணைந்திருப்பீர் அதன் இனிமையும் நீயாவீர்
செல்லப் பிராணிகளை உம்மோடு சேர்த்தணைப்பீர்
சிந்தையில் என்றும் இரக்கம் நிரப்பிடுவீர்

உம் மகன் கரம் பிடித்து மருமகளாய் வந்தவள் நான்
என்னை மகள் என்று கொண்டாடி மகிழ்ந்தவர் நீர்
குற்றம், குறை என்னிடம் கண்டதில்லை
போற்றிப் புகழ்ந்து, புன்னகை தந்து
ஊக்குவித்து உடன் இருப்பீர்
அத்தகைய என் அன்னை இன்று இல்லை என ஏங்குகிறேன்
இருந்தும் நீர் கற்றுத் தந்த மனப் பலம் கொண்டு
என் கண்ணீரைத் துடைக்கின்றேன்.

பாவ, புண்ணியம் உலகில் உண்டு ஆனால்
பாவத்தின் வழி நீர் நடந்ததில்லை
வாழும் காலத்திலோ
பிறருக்கு அறிவுரை சொன்னதில்லை
மற்றவர் கையை என்றும் எதிர் பார்த்ததுமில்லை
கையுயர்த்தி பிறருக்கு உம்மைக் காண்பிக்கவில்லை
ஆனாலும் வரலாற்றில் நீர் இருப்பீர்
புண்ணியமே நீர் சேர்த்து வைத்தீர்
பொன்னுலகம் உம்மை வரவேற்க
பூக்கள் நிறைத்து அனுப்பி வைத்தோம்
பூ மகளே
ஓம் சாந்தி!!!

அன்பு மருமகள்
ஜெனிற்றா செபஸ்ரியாம்பிள்ளை



# பாரதியின் மறைவு தமிழ் ஊடகதுறைக்கு பேரிழப்பு என இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அனுதாபம்



மூத்த பத்திரிகையாளர் இராசநாயகம் பாரதியின் மறைவு தமிழ் ஊடகத்துறைக்கு பேரிழப்பாகும். தமிழ் தேசியத்தின்பால் தீவிர ஈடுபாடு கொண்டு செயற்பட்ட போராளியாகவே பாரதி திகழ்ந்திருந்தார். தமிழ் கூறும் நல்லுலகத்தின் பெரும் இடைவெளியை பாரதியின் இழப்பு ஏற்படுத்தியிருக்கின்றது என்று தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் அனுதாபம் தெரிவித்துள்ளது.

ஒன்றியம் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஞாயிறு தினக்குரல், தினக்குரல் இணையம் ஆகியவற்றின் முன்னாள் பிரதம ஆசிரியரும், வீரகேசரி வடபிராந்திய பதிப்பின் ஆசிரியருமான மூத்த பத்திரிகையாளர் இராசநாயகம் பாரதியின் திடீர் மறைவு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றது. தமிழ் ஊடகத்துறையின் வளர்ச்சிக்காகவும் தமிழ் பேசும் ஊடகவிலயாளர்களின் உரிமைக்காகவும் தமிழ் தேசியத்தின் குரலாகவும் செயற்பட்டு வந்த பாரதியின் மறைவானது தமிழ் ஊடகத்துறை தளத்தில் பேரிடைவெளியை ஏற்படுத்தியிருக்கின்றது.

1980களில் ஊடகத்துறைக்குள் காலடி எடுத்து வைத்த பாரதி கடந்த 35 வருட காலங்களுக்கும்மேலாக பத்திரிகைதுறையில் பணியாற்றியுள்ளார். யுத்தகாலத்தில் பெரும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் தமிழ் தேசியத்தின் பால் நின்று செயற்பட்ட போராளியாகவே அவர் அடையாளப்படுத்தப்படுகின்றார்.

தமிழ் ஊடகத்துறையானது பெரும் அச்சுறுத்தல்களை எதிர்நோக்கிய காலத்தில் ஊடகத்துறையின் சுதந்திரத்துக்காக அவர் துணிந்து செயற்பட்டிருந்தார். தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான பாரதி ஒன்றியத்தின் தலைவராகவும் செயலாளராகவும் பல ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். ஒன்றியத்தின் வளர்ச்சியில் அக்கறை காண்பித்து வந்த பாரதி தமிழ் ஊடகவியலாளர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் தீவிரமாக செயற்பட்டவராவார்.

இறுதி யுத்தகாலத்தில் ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தலை எதிர்நோக்கியபோது ஏனைய ஊடக அமைப்புக்களுடன் இணைந்து ஒன்றியமும் செயற்படுவதற்கான நடவடிக்கைகளை அவர் எடுத்திருந்தார். ஐந்து ஊடக அமைப்புக்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு பூரண ஒத்துழைப்புக்களையும் அவர் வழங்கியிருந்தார். சகோதர ஊடக அமைப்பின் பிரதிநிதிகளுடனும் அவர் நல்லுறவை பேணியதுடன் தமிழ் ஊடகவியலாளரின் நலன்கள் தொடர்பில் தீவிர அக்கறையினை செலுத்தி வந்தவராவார்.

தமிழ் ஊடகத்துறை பரப்பில் இளம் பத்திரிகையாளர்களை பயிற்றுவிப்பதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை அவர் எடுத்திருந்தார். யாழ். பல்கலைக்கழக ஊடக கற்கை நிறுவகத்தில் அவர் விரிவுரையாளராகவும் பணியாற்றியிருந்தார். பல்வேறு ஊடக கற்கை நிறுவனங்களிலும் அவர் கற்பித்திருந்தார்.

இவ்வாறு தமிழ் ஊடகத்துறையின் வளர்ச்சிக்காகவும் சுதந்திரத்துக்காகவும் தமிழ் தேசியத்துக்காவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்திருந்த பாரதியின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். அவரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.



கனடிய செய்திகள் Canadian News

# கனடாவின் 13 மாகாண முதல்வர்களோடு நடத்திய உரையாடலுக்குப் பின்னரும் கூட "கனடா இணைக்கப்படாது" என்று சொல்ல விருப்பப்படாத ஜனாதிபதி டிரம்ப்பின் சிரேஸ்ட அதிகாரிகள்

கனடாவின் 13 மாகாண முதல்வர்கள் 12ம் திகதி புதன்கிழமை அன்று வாசிங்டன் நகரில் நடத்திய கலந்துரையாடலில் ஜனாதிபதி டிரம்ப்பின் சிரேஸ்ட அதிகாரிகள் சிலர் கலந்து கொண்டனர். அவர்கள் ஜனாதிபதியின் சார்பாக பேச்சுவார்த்தைகளில் பங்கெடுத்தனர்.

எனினும் சில மணிநேர உரையாடலுக்குப் பின்னரும் கூட "கனடா இணைக்கப்படாது" என்று சொல்ல விருப்பப்படாத மேற்படி ஜனாதிபதி டிரம்ப்பின் சிரேஸ்ட அதிகாரிகள் பற்றி மேற்படி 13 கனடிய மாகாணங்சகளின் முதல்வர்களும் அதிருப்தியும் ஏமாற்றமும் அடைந்தார் என்று எமக்குக் கிடைத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி டிரம்ப்பின் சிரேஸ்ட அதிகாரிகள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் கனடாவின் 13 பிரதமர்களை புதன்கிழமை சந்தித்து, கனடாவை 51வது மாநி-லமாக மாற்றுவதையும், ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் வார்த்தைகளை தீவிரமாக எடுத்துக் கொள்ள இயலாது என்றும் கூறியதாகவும் எனினும் அதற்கு அமெரிக்க அதிகாரிகள் சாதகமான பதிலைத் தெரிவிக்கவில்லை என்றும் அறியப்படுகின்றது.

கனடாவின் 13 மாகாண முதல்வர்களும் வாஷிங்டனுக்கு குறுகிய அறிவிப்பில் சென்று வெள்ளை மாளிகையில் அதிகாரிகளுடன் பேசினார், கனேடிய எ.்.கு மற்றும் அலுமினியத்தில் 25 சதவீத கட்டணங்களை விதிப்பதில் இருந்து நிர்வாகத்தை தடைசெய்யும் வண்ணம் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர் டேவிட் எபி, இரண்டு வெள்ளை மாளிகையின் அதிகாரிகளை சந்தித்தார், துணைத் தலைவர் ஜேம்ஸ் பிளேர் மற்றும் ஜனாதிபதி பணியாளர் அலுவலக செர்ஜியோ கோரின் இயக்குநர், ஒன்றாறியோ பிரதமர் டக் .்.போர்டு அவர் அங்கு என்று கூறிய போதிலும், அவர்கள் யாரைச் சந்தித்தார்கள் என்பதை பகிர்ந்து கொள்ள டிரம்பின் வார்த்தைகளை உண்மையான வார்த்தைகளாக நிச்சயம் எடுக்க வேண்டும் என்று பிளேயரும் கனடிய மாகாண முதல்வர்களிடம் தெரிவித்தார். குறிப்பாக எல்லை பாதுகாப்பு பற்றி பேசும்போது.

"இது ஒரு நல்ல உரையாடல், இது ஆக்கபூர்வமானது என்று நான் நினைத்தேன், கலந்துரையாடல் நடைபெற்ற போது I சில வெளிப்படையான தருணங்கள் இருந்தன, ஜனாதிபதியை அவருடைய வார்த்தையில் அழைத்துச் செல்லும்படி அவர்கள் எங்களை வலியுறுத்தினர், எனவே நாங்கள் நிச்சயமாக அதைச் செய்வோம்" என்று பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர் டேவிட் எபிகூறினார்.





"51 வது மாநிலக் கருத்தைப் பற்றி நாங்கள் வெளிப்படையான உரையாடல்களைக் கொண்டிருந்தோம், அது ஒரு அடிப்படையான தளம் அல்லாதது என்று நாங்கள் அடிக்கோடிட்டுக் காட்டினோம், அது அனைத்து முதல்வர்களின் ஒத்ததும் வெளிப்படையான கருத்தாகவும் ஒத்துப்போகிறது" என்று ஈபி கூறினார்.

மேலும் மாகாண முதல்வர்கள் 13 பேரின் ஜனாதிபதி செய்தியை டிரம்பிற்கு அனுப்ப பிளேயரும் கோரும் உறுதியளித்ததாக பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண முதல்வர் டேவிட் எபி கூறினார்.

2024 ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதிலிருந்து, கனடா அமெரிக்காவின் 51 வது மாநிலமாக மாற வேண்டும் என்று டிரம்ப் பலமுறை கூறியுள்ளார்.

கனடா கட்டணங்களைத் தவிர்க்க விரும்பினால், அவர்கள் அமெரிக்காவில் சேர வேண்டும் என்று மார்-எ-லாகோவில் ஒரு விருந்தில் டிரம்ப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுடன் கேலி செய்ததாக முதலில் தெரிவிக்கப்பட்டது.

டிரம்ப் தனது பதவியேற்புக்கு முன்னதாக இந்த யோசனையை மீண்டும் அமுல் செய்வதாக பேசத் தொடங்கினார், கனடாவை அமெரிக்காவொடு இணைக்க வேண்டும் என்று தொடர்ந்து வாதிட்டு வருகிறார், இது கனேடிய பொதுமக்களிடையே நன்கு பரவியுள்ளது என்றும் அவர் கூறுகிறார்.

கனடாவின் வாகனத் தொழிலில் 100 சதவீதம் வரை பாரிய கட்டணங்களை டிரம்ப் அச்சுறுத்தியுள்ளார், கனடா அமெரிக்காவிலிருந்து தொழில்துறையை "திருடி-யது" என்றும் வாதிட்டார்.

மூத்த வெள்ளை மாளிகை அதிகாரிகளுடன் கடைசி நிமிட சந்திப்பைப் பெறுவது ஒரு சாதனை என்றும், குறிப்பாக ஜனாதிபதி டிரம்ப் ரஷ்யாவின் ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் உக்ரேனிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திய நாளில் இந்த சந்திப்புக்கு அனுமதி கிட்டியது பெரிய விடயம் என்றும் கனடிய மாகாண முதல்வர்கள் சிலர் தெரிவித்தனர்.

"பொதுவாகவே மக்கள் இது போன்ற கடைசி நிமிட சந்திப்புக்களை அமெரிக்காவிடமிருந்து பெறமாட்டார்கள், எனவே நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இது நம்மிடம் உள்ள உறவையும், கனடா மற்றும் கனடாவைப் பற்றிய அமெரிக்காவின் மரியாதையையும் காட்டுகிறது" என்றும் தனது அமைச்சரவை செயலாளர்கள் பதவியேற்றவுடன் டிரம்ப் நிர்வாகத்துடன் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என்றும் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்டு கூறினார்.

(17 பக்கத் தொடர்ச்சி)

-----------------------------------

## உலகில் மிகவும் அதிகமாக கண் தானம் வழங்குகின்ற நாடு எது? என்ற கேள்வி எழுகின்றபொழுது ,ந்தியப் துணைக்கண்டத்தில் அமைந்துள்ள நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற இலங்கை என்ற நாட்டையே நீங்கள் காண்பீர்கள்

-----------------------------------

அதேவேளையில் எதிர்வரும் இரண்டு தசாப்தங்களில் சனத்தொகை அதிகரிப்பு, நகரமயமாக்கல் மற்றும் நுண்ணங்கிகளின் எதிர்ப்பு காரணமாக பல்வேறு சுகாதாரச் சவால்கள் தொடர்ச்சியாக நிலவவும் விரிவடையவும் இடமுண்டு.

மனிதர்கள் என்றவகையில் நாங்கள் தவிர்க்கமுடியாத வகையில் இடைத்தொடர்புகளை பேணி வருகிறோம். ஒருவருடத்திற்கு மேற்பட்ட காலமாக வைரஸ் ஒன்றினால் கிரகமொன்றின் பெரும்பாலான மனிதர்களின் முகங்களை முகக்கவசம் மூலமாக மூடிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அது உலகின் பலம்பொருந்திய நாட்டிலிருந்து மிகவும் வறிய நாடு வரை கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தியது.

2024 இல் தொற்றுநோய்களின் அதிகரிப்பினை அல்லது மீள்வருகையினை காணக்கிடைத்தது. தொற்றா நோய்கள் மத்தியில் புற்றுநோய் உயிர்கள்மீது வழமைக்கு மாறான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. இத்தருணத்திலும் வாழ்வா? சாவா? என அங்கலாய்த்துக் கொண்டிருக்கின்ற மில்லியன் கணக்கான புற்றுநோயாளிகள் இருக்கிறார்கள். இதய நோய்கள் தேச எல்லைகளைப் பொருட்படுத்தாமல் உயிர்களை அச்சுறுத்தி வருவதோடு அது பயங்கரமான ஓர் அனர்த்தமாக மாறியுள்ளது. 2030 ஆம் ஆண்டளவில் உலகம் முழுவதிலும் மனநோய்க்கான பொருளாதாரக் கிரயம் 16 ரில்லியன் டொலர்களை விஞ்சியதாக அமையுமென சுகாதார நிபுணர்கள் எதிர்வு கூறுகிறார்கள்.

காலநிலை நெருக்கடி காரணமாக 2050 அளவில் மேலும் 14.5 மில்லியன் இறப்புகள் பதிவாகுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.

டிஜிட்டல் சுகாதாரம், புதிய தொழில்நுட்பம் மற்றும் நவீன சுகாதார உபகரணங்கள், சுற்றாடல் சுகாதாரமும் நிலைபெறுதகுதன்மையும், பொருளாதார அபாயநேர்வுமிக்க நாடுகளுக்கான சுகாதாரரீதியான நிதிசார் ஒத்துழைப்பு பற்றிய அடிப்படைக் கவனம் செலுத்தப்படவேண்டியது மிகவும் முக்கியமானதாக அமைகின்றது.

கௌரவ விருந்தினர்களே!

நீங்கள் சிலவேளை மத்திய கிழக்கினை பிரதிநிதித்துவம் செய்யக்கூடும். சிலவேளை அபிரிக்கா சிலவேளை ஆசியா அல்லது சிலவேளை ஐரோப்பா அல்லது மேற்குலகினை நீங்கள் பிரதிநிதித்துவம் செய்யக்கூடும். எனினும் நாங்கள் அனைவரும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைப் போன்றே எமது இதயங்களின் "லப் டப்" ஓசையும் ஒன்றாக ஒன்றுசேர்ந்து உலகத்தைக் கட்டியெழுப்புவோம் என்கின்ற மன்றாட்டையே செய்கின்றது.

"நாங்கள் சகோதரர்கள் என்றவகையில் ஒன்றாக வாழப் பழகிக்கொள்ளவேண்டும்." என மார்ட்டின் லூதர் கிங் கூறியுள்ளார்அவ்வாறு இல்லாவிட்டால் இடம்பெறப் போவதையும் அவர் கூறியிருக்கிறார்.

நாங்கள் எமது நாட்டு மக்களுக்கு ஒரு நோக்கத்தை சேர்த்தோம். அது "வளமான நாடு - அழகான வாழ்க்கை" என்பதை உருவாக்கிட ஒன்றுசேர்வோம் என்பதாகும் வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில் அவர்கள் அதனை அங்கீகரித்தார்கள்.

"நாங்கள் ஒன்றுசேர்ந்து அழகான வாழ்க்கையை அழகான உலகத்தை உருவாக்கிடுவோம்" என இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநாட்டில் நான் உங்களுக்கு அழைப்பு விடுக்கிறேன்.

அனைவருக்கும் நன்றி" என்று தெரிவித்து உரையை நிறைவு செய்தார்.


**அதிஷ்டம் காத்திருக்கிறது வெல்லுங்கள் 1,50,000 ரூபாய்கள்**

**எழுத்தாளர் 'குரு அரவிந்தன் வாசகர் வட்டம்' நடத்தும்**

**உலகளாவிய 3வது திறனாய்வுப் போட்டி - 2025**



தமிழ் இலக்கிய உலகில் புகழ் பெற்ற எழுத்தாளர் குரு அரவிந்தன் அவர்களின் தமிழ் இலக்கிய சேவையைப் பாராட்டும் முகமாகவும், வாசிப்பு, எழுத்துப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கமாகவும் இடம்பெறும் குரு அரவிந்தன் எழுதிய நாவல், சிறுகதை தொடர்பான திறனாய்வுப் போட்டி.

**15 பரிசுகள், மொத்தம் 1,50,000 ரூபாய்கள், இலங்கை ரூபாயில் வழங்கப்படும்.**



**முதலாம் பரிசு இலங்கை ரூபாய்கள் - 30,000.**

**இரண்டாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 25,000.**

**மூன்றாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 20,000.**

**நாலாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 15,000.**

**ஐந்தாவது பரிசு இலங்கை ரூபாய்கள் - 10,000.**

**10 பாராட்டுப்பரிசுகள் இலங்கை ரூபா தலா - 5000.**

**குரு அரவிந்தனின் படைப்புகளுக்கான திறனாய்வுப் போட்டி**. குறைந்தது 2 **புதினங்கள்** அல்லது 4 **சிறுகதைகள்** பற்றி உங்களின் கருத்துரைகளைத் தமிழில் அல்லது ஆங்கிலத்தில் 5 பக்கங்களுக்குள் அல்லது 1600 சொற்களுக்கு மேற்படாமல் யூனிக்கோட் மற்றும் வேர்ட் (Unicode and Word) அச்சுப்பிரதியாக அனுப்பவும். மாணவர்களாயின் தனியாகக் குறிப்பிடவும். வயது வரம்பு இல்லை. ஒருவர் ஒரு கட்டுரை மட்டுமே அனுப்பலாம். பரிசுபெற்ற கட்டுரைகளைத் திருத்தி நூலாகவெளியிடும் உரிமை வாசகர் வட்டத்திற்கு உரியது.

மின்னஞ்சல் வழியாக ஆங்கிலத்தில் உங்களின் முழுப்பெயர், தெளிவான அஞ்சல் முகவரி, மின்னஞ்சல் முகவரி, செல்போன் எண் விவரங்களோடு அனுப்பவேண்டும். உங்கள் திறனாய்வு எமக்குக் கிடைக்க வேண்டிய **கடைசி நாள்: 31. 03. 2025**

போட்டி முடிவுகள் 30 ஆம் திகதி ஏப்ரல் மாதம் 2025 இணையத்தில் வெளியிடப்படும்.

மின்னஞ்சல்: : kurufanclub@gmail.com

இணையம்: : https://kurunovelstory.blogspot.com/, http://tamilaram.blogspot.com/ https://canadiantamilsliterature.blogspot.com/

இந்த அறிவிப்பினை நண்பர்களுடன் பகிர்ந்து உதவுங்கள். நன்றி!

**செயலாளர், குரு அரவிந்தன் வாசகர் வட்டம். kurufanclub@gmail.com**

# ஷெப்பர்ட் கிழக்கு சுரங்கப்பாதை, மீண்டும் தேர்ந்தெடுக்கப்படவுள்ள ஒன்றாரியோ கொன்சர்வேர்ட்டிவ் கட்சி அரசாங்கத்தால் பூர்த்தி செய்யப்படும் என்பது உறுதி

கனடிய செய்திகள் Canadian News

## ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதி கொன்சர்வேர்ட்டிவ் கட்சி வேட்பாளர் அரிஸ் பாபிகியன் தெரிவிப்பு




பிப்ரவரி 7, 2025


ஸ்கார்பரோ - அஜின்கோர்ட் பெப்ரவரி 7ம் திகதி ஸ்கார்பரோவில், PC கட்சித் தலைவர் டக் ஃபோர்டு அறிவித்தார், "மீண்டும் தேர்ந்தெடுக்கப்படவுள்ள கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் அரசாங்கம் ஷெப்பர்ட் கிழக்கு சுரங்கப்பாதை நீட்டிப்பில் கட்டுமானத்தை விரைவுபடுத்தும்". இது எனது சகோதரர் ராபின் நாட்களுக்கு முந்தையது, TTC இன் நான்காவது பாதையையும் ஸ்கார்பரோ சுரங்கப்பாதை நீட்டிப்பையும் திட்டமிடப்பட்டதை விட ஒரு வருடம் முன்னதாக இணைக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

மீண்டும் கட்டியெழுப்பவும் மேம்படுத்தும்," என்று அவர் மேலும் கூறினார்.

ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதி கொன்சர்வேர்ட்டிவ் கட்சி வேட்பாளர் அரிஸ் பாபிகியன் தனது நன்றியைத் தெரிவித்தார்: "ஸ்கார்பரோ - அஜின்கோர்ட் குடியிருப்பாளர்கள் சார்பாக, இந்தக் கனவை நனவாக்கிய எமது கட்சியின் தலைவர் டக் ஃபோர்டுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஷெப்பர்ட் கிழக்கு சுரங்கப்பாதை நீட்டிப்பைக் கட்டுவதற்கான அர்ப்பணிப்பு எங்கள் குடியிருப்பாளர்களுக்கும் ஸ்கார்பரோவிற்கும் ஒரு வரலாற்று மைல்கல்லாகும்." என்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "எங்கள் சமூக சங்கங்களுக்கும், குறிப்பாக இந்தக் கனவை ஒருபோதும் கைவிடாமல், நான் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற என்னுடன் கைகோர்த்து உழைத்த அஜின்கோர்ட் கிராம சமூக சங்கத்திற்கும் (AVCA) நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்."

2018 ஆம் ஆண்டில் ஸ்கார்பரோ - அஜின்கோர்ட்டில் வசிப்பவர்களுக்கு அவர் அளித்த மூன்று முக்கிய வாக்குறுதிகளை இது நிறைவேற்றுவதால், இந்த அறிவிப்பால் பாபிகியன் மகிழ்ச்சியடைகிறார். பிரிட்ல்டவுன் சமூகம் மற்றும் சுகாதார மையத்திற்கு $1 பில்லியன் ஒதுக்கீடு மற்றும் ஸ்கார்பரோ சுரங்கப்பாதை பாதை







இவ்வாறு தெரிவித்தார் ஸ்காபுறோ அஜின்கோர்ட் தொகுதி கொன்சர்வேர்ட்டிவ் கட்சி வேட்பாளர் அரிஸ் பாபிகியன்.

ஸ்கார்பரோ - அஜின்கோர்ட்டில் வசிப்பவர்கள் சார்பாக அரிஸ் பாபிகியனின் அர்ப்பணிப்பு மற்றும் ஆதரவை ஃபோர்டு பாராட்டியது, "ஜசதுரப்பாதை நீட்டிப்பைஸ எல்லா நேரத்திலும் ஊக்குவித்ததற்கு அரிஸுக்கு நன்றி" என்று கூறினார்.

ஷெப்பர்ட் சுரங்கப்பாதை பாதை அறிவிப்புக்கு கூடுதலாக, விக்டோரியா பார்க்கிலிருந்து அவென்யூ சாலை முதல் நீல்சன் சாலை வரையிலான நெடுஞ்சாலை 401 இன் கிழக்கு நோக்கிய பாதைகளை மீண்டும் கட்டியெழுப்பவும் மேம்படுத்தவும் உறுதியளித்தது, மேலும் கென்னடி சாலை சந்திப்புப் பகுதியில் கூடுதல் பாதையும் சேர்க்கப்பட்டது. "கடைசியாக, மீண்டும் தேர்ந்தெடுக்கப்படவுள்ள கொன்சர்வேர்ட்டிவ் அரசாங்கம், அவென்யூ சாலையிலிருந்து வார்டன் அவென்யூ வரையிலான நெடுஞ்சாலை 401 இன் கிழக்கு நோக்கிய எக்ஸ்பிரஸ் பாதைகளை



கட்டுமானத்துடன் கூடிய பிர்ச்மவுண்ட் மருத்துவமனை தளத்தில் புதிய நீட்டிப்புக்கு கூடுதலாக, ஷெப்பர்ட் கிழக்கு நீட்டிப்பு அறிவிப்பு கடந்த ஏழு ஆண்டுகளில் ஸ்கார்பரோ - அஜின்கோர்ட்டில் வசிப்பவர்களுக்கு வழங்கப்பட்ட மூன்றாவது பெரிய உள்கட்டமைப்பு திட்டமாகும். இதற்கு நேர்மாறாக, முன்னாள் லிபரல் அரசாங்கம் 15 ஆண்டுகளாக எங்கள் குடியிருப்பாளர்களின் தேவைகளைப் புறக்கணித்த நிலையில் எம்மை கவனிக்கத் தவறிவிட்டது என்று தெரிவித்த அரிஸ் பாபிகியன் அவர்கள்.

இதோ நாங்கள் - வாக்குறுதி அளிக்கப்பட்டது, வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது!

பிப்ரவரி 27 ஆம் தேதி, பழமைவாதத்திற்கு வாக்களியுங்கள். அரிஸ் பாபிகியன் ஆகிய எனக்கும் எமது கட்சிக்கும் வாக்களியுங்கள் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.




**FOR IMMEDIATE RELEASE**

**Sheppard East Subway Extension to be Built by a Re-Elected PC Government**

**Feb. 7, 2025**

**Scarborough – Agincourt**– Today in Scarborough, PC Party Leader Doug Ford announced, "A re-elected PC government will speed up construction on the Sheppard East Subway Extension.... This goes all the way back to my brother Rob's days, to get shovels in the ground connecting the TTC's line four with the Scarborough Subway Extension a year sooner than planned

Ford praised the dedication and advocacy of Aris Babikian on behalf of the residents of Scarborough-Agincourt, stating, "Thank you Aris for promoting that [the subway extension] all the time."

In addition to the Sheppard Subway Line announcement, Ford committed to rebuilding and upgrading the eastbound lanes of Highway 401 from Victoria Park to Avenue Road to Neilson Road, with an added lane at the Kennedy Road interchange. "Lastly, a re-elected PC government will rebuild and upgrade Highway 401's eastbound express lanes from Avenue Road to Warden Avenue," he added.

PC Candidate Aris Babikian expressed his gratitude: "On behalf of the residents of Scarborough-Agincourt, I would like to extend my heartfelt thanks to Doug Ford for making this dream, a reality. The commitment to build the Sheppard East Subway Extension is a historic milestone for our residents and Scarborough." He continued, "I would also like to thank our community associations, especially the Agincourt Village Community Association (AVCA), who never gave up on this dream and worked hand in hand with me to deliver on the promise I made when I was elected."

Babikian is thrilled with this announcement, as it delivers on three core promises he made to the residents of Scarborough-Agincourt in 2018. In addition to the new extension at the Birchmount Hospital site, with a $1 billion allocation for the Bridletowne Community and Health Hub, and the construction of the Scarborough Subway Line, the Sheppard East Extension announcement is the third major infrastructure project delivered to the residents of Scarborough-Agincourt in the last seven years. By contrast, the former Liberal government ignored the needs of our residents for 15 years and took us for granted.

Here we are – promise made, promise kept!

On February 27th, Vote Conservative. Vote Aris Babikian!



இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 150 பேருக்கான நிவாரணப் பொருட்கள் இலங்கைக்கான சீனத் தூதரகத்தால் வழங்கப்பட்டன





வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 150 பேருக்கான நிவாரணப்பொருட்களை இலங்கைக்கான சீனத் தூதரகத்தின் பிரதிப் பிரதானி சூ யன்வெய் (Zhu Yanwei) அவர்கள் வழங்கி வைத்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட செயலாளர் எஸ்.முரளிதரன் உள்ளிட்ட சீன தூதரகத்தின் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# கெகலிய ரம்புக்கல பெற்ற நட்ட ஈட்டை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தை அபிவிருத்தி செய்திருக்கலாம் – கிளிநொச்சியில் அமைச்சர் விமல் ரட்நாயக்க தெரிவிப்பு!

கெகலிய ரம்புக்கல பெற்ற நட்ட ஈட்டை யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டத்தை அபிவிருத்தி செய்திருக்கலாம் என அமைச்சர் விமல் ரட்நாயக்க தெரிவித்தார்.

கிளிநொச்சிக்கு 10ம் திகதி திங்கட்கிழமை அன்று விஜயம் மேற்கொண்டிருந்த அமைச்சர் விமல் ரட்நாயக்க பிற்பகல் கிளிநொச்சி புகையிரத நிலையத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் நிறை குறைகளை பார்வையிட்டு கலந்துரையாடினார்.



கிளீன் சிறிலங்கா திட்டத்தை முன்னெடுக்கும் வகையில் குறித்த புகையிரத நிலையத்தை பார்வையிட்ட அமைச்சர், பயணிக-ளுடனும் கலந்துரையாடினார்.

இதன் போது ஊடகங்களுக்கு அமைச்சர் மேற்கொண்டவாறு தெரிவித்தார். பல கோடிகளை கெல-ிய பெற்றார்.



ஆனால் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 5 லட்சம், 7 லட்சம், இறுதியாக 10 லட்சம் என மட்டுமே வழங்கப்பட்டது.

அவருக்கு வழங்கப்பட்ட நட்டயீட்டினை மாவட்டத்துக்கே வழங்கியிருக்கலாம் என அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகள் நாடு முழுவதும் காணப்படுகிறன. அது போல கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ஊதியம் போதாது. அவர்களின் சம்பளமும் அதிகரிக்கப்பட வேண்டும்.

அந்த பிரச்சினைக்கு மக்களுடனும் கலந்துரையாடி தீர்வு எட்டப்பட வேண்டும். அதனை விரைவில் செய்வோம்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் மின்பிறப்பாக்கி இயங்காத விடயம் தொடர்பில் எமது மாவட்ட அமைப்பாளர் பார்வையிட்டு, சுகாதார அமைச்சுக்கு தகவல் வழங்கி விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

# காங்கேசன்துறை – நாகபட்டினம் இடையிலான கப்பல் போக்குவரத்து சேவை மீண்டும் ஆரம்பம்!

காங்கேசன்துறை - நாகப்பட்டினம் இடையிலான பயணிகள் போக்குவரத்து கப்பல் சேவையானது எதிர்வரும்



12.02.2025 அன்று மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக சிவகங்கை கப்பல் சேவை நிறுவனத்தின் தலைவர் சுந்தரராஜ் பொன்னுசாமி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 12.02.2025 அன்று காலை 7.30 மணியளவில் நாகப்பட்டினத்தில் இருந்து பயணத்தை ஆரம்பிக்கும் கப்பலானது காங்கேசன்துறையை வந்தடைந்த பின்னர் மீண்டும் பி.ப 1.30 மண-ியளவில் காங்கேசன்துறையில் இருந்து பயணத்தை ஆரம்பித்து நாகபட்டினத்தை சென்றடையும்.

இந்த கப்பல் சேவையானது செவ்வாய் கிழமை தவிர்ந்து வாரத்திற்கு 6 நாட்கள் ஈடுபடும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.


SUBHAM

09.02.2025

Press Release

We are happy to inform you that our services will resume from February 12, 2025. Moving forward, we will be operating 6 days a week, except Tuesday.

You can book your ticket at www.sailsubham.com

Thank you for your continued support, and we look forward to serving you again!

For Subham Ferry

Sundararaj Ponnusamy

Chairman

SUBHAM FERRY

# யா/வட்டு இந்துவின் இளம் விவசாய விஞ்ஞானிகள் கௌரவிப்பு

மேற்படி நிகழ்வானது பாடசாலை முதல்வர் திரு. கு.லங்காபிரதீபன் தலைமையில் DR. ரட்ணம் நித்தியானந்தன் அவர்களின் அனுசரனையுடன் யா/வட்டு இந்துக்கல்லூரியில் 05.02.2025 புதன்கிழமை 12.00 மணிக்கு நடைபெற்றது. இதில் அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட இளம் விவசாய விஞ்ஞானப்போட்டியில் தங்கப்பதக்கத்தைப் பெற்ற ஐந்து மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதில் பிரதம விருந்தினராக கலாநிதி ரட்ணம் நித்தியானந்தன் (Ratnam Founder U.K) அவர்களும் சிறப்பு விருந்தினர்களாக, S.ரமேஸ் (Agricuture Instructor ,Office of the Deputy Director of Agriculture ) P.அருந்தவம் (In service Advisor Zonal Education Office Valikamam) A.கோகுலராஜன் (Manager Jaffna Field Study Centre) ஆகியோரும் கலந்துகொண்டனர். அத்தோடு பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்.



இந் நிகழ்வினை தலைமை தாங்கி நடாத்திய பாடசாலை அதிபர் அவர்கள் அந்நிகழ்விற்கு அனுசரனை வழங்கிய DR. நித்தியானந்தன் அவர்களுக்கு நன்றி கூறியதோடு வெற்றி பெற்ற மாணவர்களையும் வழிப்படுத்திய ஆசிரியரையும் தேவையான வழிகாட்டல்களை வழங்கிய சிறப்பு விருந்தினர்களையும் நன்றியுடன் பாராட்டினார். அத்துடன் இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்கள் உரையாற்றும் போது இன்று மாணவர்கள் பல சவால்களின் மத்தியில் தமது கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது எனவும் இம் மாணவர்கள் அவற்றையும் தாண்டி சாதனையைப் புரிந்துள்ளார்கள் எனவும் பாராட்டியதோடு அவர்களை வழிப்படுத்திய ஆசிரியையும் ஒத்துழைப்பு நல்கிய பெற்றோர்களையும் பாராட்டினர். சிறப்பு விருந்தினர்கள் உரையாற்றும் போது யாழ் மாவட்டத்தில் அதிகூடிய மாணவர்கள் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட பாடசாலை யா/வட்டு இந்துக்கல்லூரியாகும் எனவும் அதற்கு ஆச-ிரியரதும் மாணவர்களதும் அயராத உழைப்பே காரணம் எனவும் கூறி இனிவரும் காலங்களிலும் இவர்கள் பல வெற்றிகளைப் பெற வேண்டும் எனவும் வாழ்த்தினர்.




# பொலிஸார் மொழி உரிமையை மீறுகின்றார்கள் என வேலன் சுவாமிகள் கண்டனம்!

"வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி" போராட்ட வழக்கு 14ம் திகதி வெள்ளிக்கிழமை கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

குறித்த வழக்கானது பாராளுமன்ற உறுப்பினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் மற்றும் சிவில் அமைப்பின் பிரதிநிதிகளுக்கு எதிராக கிளிநொச்சி பொலிசாரால் கடந்த வருடம் தொடுக்கப்பட்டது.

இந்நிலையில் ஸ்ரீலங்கா பொலிசார் சிங்கள மொழியில் இவ்வழக்கு அறிவித்தலை தனக்கு வழங்கியுள்ளமை மூலம் மொழியுரிமை முற்றாக மறுக்கப்பட்டுள்ளதாகவும், அதனை வன்மையாகக் கண்டிப்பதாகவும் பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளர் வேலன் சுவாமிகள் தெரிவித்தார்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் "விதையனைத்தும் விருட்சமே" செயற்றிட்டத்தின் ஊடாக கற்றல் உபகரணங்கள் வழங்கப்பெற்றன!

புு. கஜிந்தன்

9ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று "விதையனைத்தும் விருட்சமே" செயற்றிட்டம் ஊடாக யாழ்பபாணம். மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் தெரிவுசெய்யப்பட்ட 31 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.





இதற்கான நிதியினை அமெரிக்காவின் நியூயோர்க்கில் அமைத்துள்ள இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தின் சீடர்கள், வன்னிப்பட்டறை உதவிக்கரம் ஊடாக வழங்கப்படது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் ஆரம்பம்!

யாழ்ப்பாணம் தையட்டியில் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர் போராட்டமானது செவ்வாய்க்கிழமை 11ம் திகதி அன்றையதினம் ஆரம்பமாகியுள்ளது.

குறித்த விகாரையானது பொது மக்களின் காணிகளை அபகரித்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட நிலையில் காணியின் உரிமையாளர்கள் மற்றும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரால் தொடர் போராட்டமானது ஒவ்வொரு பௌர்ணமி தினத்திற்கு முதல் நாளும், பௌர்ணமி தினத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.



அந்த வகையில் இந்த போராட்டமானது அன்றையதினம் ஆரம்பமாகியுள்ளது. அன்றையதினம் ஆரம்பமாகிய இந்த போராட்டமானது 12ம் திகதி புதன்கிழமை பாரியளவில் முன்னெடுக்கப்படவுள்ளது.



இந்தப் போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் மற்றும் காணியின் உரிமையாளர்கள் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டுள்ளனர்.

# யாழ்ப்பாணம் மூளாயில் நடைபெற்ற அமரர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் உருவச்சிலை திறப்பும் அமிர்தலிங்கம் – மங்கையற்கரசி நினைவில்லம் அங்குரார்ப்பணமும்!



முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கத்தின் உருவச்சிலை திறப்பும் அமிர்தலிங்கம் - மங்கையற்கரசி நினைவில்லம் அங்குரார்ப்பண நிகழ்வும் 12ம் திகதி புதன்கிழமையன்று மூளாயில் உள்ள அன்னராரது இல்லத்தில் நடைபெற்றது.

அமிர்தலிங்கம் நினைவு அறக்கட்டளையினர் ஏற்பாட்டில், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண ஆளுனர் நா.வேதநாயகன், யாழ்ப்பாணத்திற்கான இந்திய துணைத் தூதர் சாய் முரளி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அத்துடன், வட மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே சிவஞானம் உட்பட அரசியல்வாதிகள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வரவேற்புரையினை அன்னரது புதல்வர் Dr.அமிர்தலிங்கம் பகீரதன் நிகழ்த்தினார். அமிர்தலிங்கம் அவரது வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள அன்னாரது உருவச் சிலையனை வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் அவர்கள் திறந்து வைத்தார்.

அமிர்தலிங்கம் - மங்கையற்கரசி நினைவு இல்லத்தினை இந்திய துணைத் தூதர் சாய் முரளி திரை நீக்கம் செய்த வைத்தார். இந்த நினைவில்லத்தில் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அமுதலிங்கம் அவர்கள் பயன்படுத்திய பொருட்கள் அவரது அரசியல் வரலாற்று பயணத்தினை நினைவுபடுத்தும் புகைப்படங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.







# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு விழா

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

- எஸ்.ஆர்.லெம்பேட் (11-02-2025)

சமூக சேவைகள் திணைக்களம்,மாவட்ட மாற்றுத்திறனாளிகள் இணையம் மற்றும் மன்னார் மாவட்டச் செயலகம் இணைந்து ஏற்பாடு செய்த மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு விழா 11ம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் நகர பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

மன்னார் உதவி மாவட்ட செயலாளர் டிலிசன் பயஸ் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எம்.சிறிஸ்கந்த குமார் கலந்து கொண்டார்.

மேலும் கௌரவ விருந்தினர்களாக முசலி உதவி பிரதேச செயலாளர் உள்ளடங்களாக அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர். இதன் போது ஆண், பெண் இரு பாலருக்கும் பல்வேறு போட்டிகள் இடம் பெற்றது.

இதன் போது போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு அதிதிகளினால் பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.





கனடிய செய்திகள் Canadian News

# கைலாசா ரொறன்ரோ ஆன்மீக அமைப்பின் நடத்தும் மகாசிவராத்திரி விழாவை கொண்டாடுங்கள்: அர்ப்பணிப்பு மற்றும் ஆன்மிகம் எழுச்சி உள்ள இரவு இது

புதன்கிழமை, பிப்ரவரி 25, 2025 அன்று 1960 எல்ஸ்மீர் ரோடு, ஸ்கார்பரோ, M1H 2V9 என்னும் விலாசத்தில் அமைந்துள்ள "கைலாசா ரொறன்ரோ" ஆன்மீக அமைப்பின் மகாசிவராத்திரி ஸ்நான் புனித விழாவை கொண்டாட பக்தர்கள் அனைவரும் பங்கேற்கும் வண்ணம் அனைவரையும் அழைக்கின்றோம்.

மகாசிவராத்திரி விழா என்பத வருடத்திற்கான மிகவும் புனிதமான இரவு என்று கருதப்படுகிறது, இது பக்தர்களுக்கு அவர்களின் ஆன்மிக பொருளுடன் மற்றும் தெய்வத்துடன் இணைவதற்கான தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. இந்த புனிதமான திருவிழா, பரமசிவன் முன்னிலையில் நடந்தால், ஷிவா மற்றும் சக்தி ஆகிய இருவரின் ஒன்றிணைவைக் குறிக்கிறது. இது பக்தர்களுக்கு விரதம் இருப்பதற்கும், தியானம் செய்யுவதற்கும் மற்றும் மந்திரங்களை ஓதுவதற்கும் அர்ப்பணிப்புடன், பரமசிவனுக்கு நேர்த்தியுடன் நிகழும் காலம் ஆகும்.

இந்த சக்திவாய்ந்த இரவு அதன் மாற்றாத சக்தி மிக்க தன்மைக்கு அறியப்படுகிறது, இது ஆன்மிக எழுச்சிக்கு சிறந்த காலமாகும். மகாசிவராத்திரியின் நேரத்தில் சக்தி அதிகரிக்கும் போது, பக்தர்கள் ஆழ்ந்த தெளிவு, மனமும் உடலும் தூய்மைப்படுத்தல் மற்றும் அவர்களின் உள்ளார்ந்த தெய்வத்துடன் ஆழ்ந்த இணைப்பு அடைவதைக் அனுபவிக்க முடியும்.

இந்த புனிதமான தருணத்தை கடைபிடிப்பதால், பக்தர்கள் ஆன்மிக ஆசீர்வாதங்களைக் பெற்றுக்கொள்கிறார்கள்:

- உள் அமைதி: ஆழ்ந்த அமைதி மற்றும் சாந்தி உணர்வு அடைவது.
- ஆன்மிக வளர்ச்சி: தெய்வத்துடன் உங்கள் தொடர்பை வலுப்படுத்தி, ஆன்மிக விழிப்புணர்வை மேம்படுத்துவது.
- சுத்திகரிப்பு: எதிர்மறை சக்திகளை நீக்கி, கர்மிக கோளாறுகளை பரிசுத்தப்படுத்துதல்.
- ஆசைகளை நிறைவேற்றல்: உண்மையான அர்ப்பணிப்புடன் உங்கள் ஆசைகளை மெய்ப்படுத்துவது.
- குருவின் அருளை: ஆன்மிக பாதையில் வழிகாட்டியுடன் உங்கள் குருவின் உறவினை வலுப்படுத்துவது.

இந்த புனிதமான தருணத்தை பரமசிவன் மீது அன்பு, நன்றி மற்றும் அர்ப்பணிப்புடன் அணுகி, இந்த தெய்வீக ஆசீர்வாதங்களின் முழு சக்தியையும் வெளியிடுங்கள். இந்த மாற்று உளர்த்தும் இரவினை கொண்டாடி, பரமசிவனுடன் உங்கள் தொடர்பை ஆழமாக்குங்கள். மேலதிக விபரங்களுக்கு: (416) 439-2089

# புதிய சுதந்திரன் இணைய வழி பத்திரிகையின் வெளியீட்டாளர் அகிலன் முத்துக்குமாரசாமிக்கு எதிராக சட்டத்தரணி சுமந்திரன் தொடுத்த வழக்கு ஏப்ரல் 29 அன்று விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது



"புதிய சுதந்திரன்" இணையப் பத்திரிகையின் வெளியீட்டாளர் திரு. அகிலன் முத்துக்குமாரசாமிக்கு எதிராக சட்டத்தரணி சுமந்திரனால் தாக்கல் செய்த வழக்கு விசாரணையை எதிர்வரும் ஏப்ரல் 29 ஆம் திகதி முன்னெடுப்பதற்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் 12ம் திகதி புதன்கிழமை முடிவு செய்தது.

தமிழரசுக் கட்சி தொடர்பான வழக்கு 12ம் திகதி நீதிபதி பயாஸ் ரஸாக் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டது.

இந்த வழக்கின் எதிராளிகளில் ஒருவரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தொடர்பில் அகிலன் முத்துக்குமாரசாமி புதிய சுதந்திரன் பத்திரிகையில் பிரசுரம் செய்த செய்திக் கட்டுரையானது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையாகும் என வழக்கின் எதிராளிகளில் ஒருவரான சுமந்திரன் குற்றம் சுமத்தியுள்ள நிலையில், அந்த விடயம் குறித்து விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றம் அன்று திகதி நிர்ணயம் செய்திருந்தது.

இந்த விடயத்துக்காக வழக்கின் எதிராளியாக குறிப்பிடப்பட்டுள்ள திரு. அகிலன் முத்துக்குமாரசாமி சத்திரசிகிச்சை ஒன்றினை கனடாவில் மேற்கொண்டமையால் நீதிமன்ற விசாரணைக்கு சமுகம் தரவில்லை. ஆயினும், அவர் சார்பில் சட்டத்தரணி பிரசன்னமாகி இருந்தார்.

எனினும், அவர் வெளிநாட்டில் இருக்கிறார் எனவும், அவர் பயணம் செய்வதற்கேற்ற நிலையில் உடல்நிலை இல்லை என்று தெரிவிக்கும் மருத்துவச் சான்றிதழை அவரது சட்டத்தரணி நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில் அவருக்கு 12ம் திகதி நீதிமன்றத்தில் பிரசன்னமாக இல்லாமல் இருக்க அனுமதிப்பது என நீதிமன்றம் முடிவு செய்து ஏப்ரல் 29 ஆம் திகதிக்கு அந்த வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

# Minister Vijay Thanigasalam appreciates the long standing services, rendered by Minister Raymond Cho

## அமைச்சர் ரேமண்ட் சோ அவர்களின் அனுபவத்தையும் ஆற்றலையும் குறித்து பாராட்டிய அமைச்சர் விஜய் தணிகாசலம்



கடந்த வாரம் அமைச்சர் ரேமண்ட் சோ அவர்களின் ஸ்காபுறோ வடக்கு தொகுதிக்கான அவரது தேர்தல் பிரச்சார அலுவலகம் திறந்து வைக்கப்பெற்றது. அதில் கலந்து கொள்ள வாய்ப்பு இல்லாவிடினும் ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதி வேட்பாளரும் அமைச்சருமான விஜேய் தணிகாசலம் தனது உதவியாளர் ஒருவர் ஊடாக வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி அந்தச் செய்தியை தமிழிலும் ஆங்கிலத்திலும் வாசித்து அமைச்சர் ரேமண்ட் சோ அவர்களிடம் ஒப்படைத்தார்.

மேற்படி செய்தியில் விஜேய் தணிகாசலம் அவர்கள் ரேமண்ட் சோ அவர்களை பின்வருமாறு வாழ்த்திப் போற்றியுள்ளார்.

ரேமண்ட் சோஅவர்கள் ஸ்காபரோவின் உண்மையின் அடையாளமாக திகழ்கிறார். அவர் நகர சபை உறுப்பினராக இருந்த போதும், ஒன்றாரியோ மாநில சட்ட மன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் பணியாற்றிய வருகின்றபோது.



எமது தமிழ்ச் சமூகத்தின் நலனுக்காக தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

ஸ்காபரோவில் தலைவர்கள் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ரேமண்ட் சோ அவரம்கள் சிறந்த எடுத்துக் காட்டாக திகழ்கிறார். அவருடன் சேர்ந்து சமூகத்திற்காக சில முக்கியமான வெற்றிகளை எட்டியதில் நானும் பெருமையடைகிறேன். முதன்முறையாக ஸ்காபரோவில் மருத்துவக் கல்லூரியைக் கொண்டு வருவதிலும் புதிய பேர்ச்மவுண்ட் மருத்துவமனையைக் கட்டுவதிலும், செஞ்சனரி மருத்துவமனையின் அவசர சிகிச்சைப் பிரிவை விரிவாக்கம் செய்வதிலும் மற்றும் ஸ்காபரோ சப்வே விஸ்தரிப்புத் திட்டங்களிலும் ரேமண்ட் சோ, ஆர்வத்துடனும் உறுதியுடனும் செயல்பட்டுள்ளார். ரேமண்ட் சோ அவர்கள் ஒருபோதும் ஓய்வதில்லை. அவரின் அசாதாரண ஊக்க்ததுடன் ஸ்காபரோ மக்களுக்காக உழைக்கத் தயாராக இருக்கிறார். அனைவரும் இணைந்து ரேமண்ட் சோ அவர்களையும், தலைவர் டக் போர்ட் அவர்களையும் இம்மாதம் நடைபெறவுள்ள ஒன்றாரியோ மாகாண தேர்தலில் வெற்றியடையச் செய்வோம்".

இவ்வாறு அமைச்சரும் வேட்பாளருமான விஜய் தணிகாசலம் ரேமண்ட் சோ அவர்களை மனந்திறந்து வாழ்த்தியுள்ளார்.

# காதலர் தினம்

காதலர் தினம்
பலருக்கு கொண்டாட்டம்
எனக்கு?
மாசி பதினான்கில்
அவளை அதிகம் நினைத்து
அலை அடிக்கிறது மனதில்
அன்பளிப்புக்களும்
சிவப்பு றோஜாக்களும் கூடிய
மனங்களின் பரிமாற்றம்
என்னுள் மட்டும்
ஏக்கங்கள்
என்ன இல்லை என் காதலில்?
எல்லாம் இருக்கிறது
அவளைத்தவிர
ஏனில்லை அவள் மட்டும்?
காதலைப் போலவே
அவளும்
உண்மையானவள்
என்ன இல்லை எங்கள் காதலில்?
எல்லாம் இருந்தன
காத்திருத்தலைத் தவிர
நேற்றுவரை
காதலியாய் இருந்தவள்
இன்று மனைவி
எனக்கல்ல
யாருக்கோ!

ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்
(416) 844-7453

# இவ்வார ராசிபலன்

## 14-02-2025 வெள்ளி தொடக்கம் 20-02-2025 வியாழன் வரையும்




**மேஷம்:** ஏற்றுமதி தொழிலால் லாபம் தரும் வாரம். தாய்வழி உறவில் நன்மை உண்டாகும். பக்குவமான பேச்சு பயன் தரும். பதவி உயர்வு ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் அதிகமாகும். வெளியூர் பயணம் வெற்றியைத் தரும். நல்லோர் நட்பு கிட்டும். தெய்வீகப் பற்று கூடும். வியாபாரம் செழிக்கும். வீண் செலவு குறையும். உத்தியோக இடமாற்றம் உண்டு. பயணம் தடைப்படும். திடீர் செலவு உண்டாகும். பணியில் நிம்மதி குறையும். புதிய நட்பை தவிர்க்கவும். புத்திரர் வழியில் கவலை ஏற்படும். போட்டிகள் நீடிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். அதிருப்தி அதிகரிக்கும். பால் தானம் செய்வதால் பாவம் போகும். இலக்கிய ஆர்வம் கூடும். இனிப்பான செய்திகள் வரும். ஏற்றமான தருணம் அமையும். மாற்றமான வாய்ப்புக்கள் கிட்டும். மற்றவர் ஆலோசனை தவிர்க்கவும். விளையாட்டுச் சிந்தனைகள் மேலோங்கும். கல்வியில் தடை ஏற்பட்டு விலகும். புதிய பொருள் சேரும். காலணிகள் காணாமல் போகும். தாய், தந்தை உதவி உண்டு. வெகுமதி தேடி வரும். வீண் வம்பு ஓடி ஒழியம். வாழ்க்கை வசதி பெருகும். காரிய வெற்றி கிட்டும். போதிய வரவு பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். பயணத்தில் எச்சரிக்கை தேவை. நல்ல வாய்ப்புக்கள் நாடி வரும். நல்லவர் நட்பு கூடி வரும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். வில்லங்கம் விலகும். தொல்லைகள் அகலும். போட்டிகள் மறையும். தீர்த்த யாத்திரை செல்லும் வாய்ப்பு வரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 6,9,4,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,C




**ரிஷபம்:** உற்சாகத்தோடு செயல்படும் வாரம். சகோதர ஒத்துழைப்பு கிடைக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குதூகலம் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும். வாகன யோகம் உண்டு. தொழில் உற்பத்தி அதிகரிக்கும். நிதி நிறுவனம் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வேண்டிய உதவி கிட்டும். விவசாய நிலம் சேரும். வெற்றிக்காண வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். செயல்களில் துணிவு கூடும். செய்த்தொழில் நன்மை தரும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். பொறாமைகள் விலகும். வேலை பளு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வருமானம் திருப்தி தரும். பூமியால் லாபம் உண்டு. நற்செய்தி நாடி வரும். தொழில் வாய்ப்பு கூடி வரும். தடைகள் விலகும். புதிய பொறுப்புக்கள் வரும். அரசியலில் பொறுமை தேவை. பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். செயலில் வேகம் கூடும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். பெரிய திருப்பம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 9,5,2,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,X




**மிதுனம்:** புதிய தொழில் வாய்ப்புக்கள் வரும் வாரம். மாற்று இன நட்பு பெருகும். வேற்று மதத்தினரால் உதவி உண்டு. தோற்றப்பொலிவு கூடும். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். சுபக்காரியம் கூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். பழைய நட்பு தொல்லை தரும். இல்லத்தில் நல்லவை நடக்கும். வெகுமதி தேடி வரும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் எண்ணம் ஈடேறும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உறவினர் பாராட்டு கிட்டும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு நன்மை தரும். வழக்குகள் சாதகமாகும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். ஆரோக்கிய அபிவிருத்தி உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வியாபாரம் லாபம் தரும். வாழ்த்துச் செய்திகள் வந்து சேரும். சொத்துச் சேர்க்கையுண்டு. ஏஜென்சி தொழில் ஏற்றம் தரும். எண்ணங்கள் மாற்றம் தரும். உழைப்பு உயர்வு தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரண சேர்க்கையுண்டு. மன சந்தோஷம் கூடும். அந்தஸ்து உயரும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். முன்கோபத்தை குறைக்கவும். புதிய முயற்சியில் சற்று கவனம் தேவை. மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் குறையும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டம். நிம்மதி பெருகும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**கடகம்:** தன வரவுகள் அதிகரிக்கும் வாரம். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசுவழி ஆதாயம் உண்டு. நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனை குறையும். கவலைகள் ஒழியும். புதிய எண்ணம் உருவாகும். தகுதிகள் உயரும். வறுமைகள் ஒழியும். புகழ்ச்சி அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. சகோதரியால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. காரியத்தடை விலகும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். குதூகலமான எண்ணம் மேலோங்கும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திருமண வாய்ப்பு கூடி வரும். ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவு அதிகரிக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப் போக்கு விலகும். பூமியால் லாபம் உண்டு. பாதகமான சூழ்நிலை விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. வருமானம் பெருகும். புத்திரர் வழியில் நன்மை உண்டு.



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'
"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 2,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,V




**சிம்மம்:** சோம்பல் அதிகரிக்கும் வாரம். திடீர் பயணம் ஏற்படும். எதிர்ப்புக்கள் விலகும். தேவைகள் நிறைவேறும். குடும்ப அன்யோன்யம் கூடும். அற்புதமான வாய்ப்பு கிட்டும். பெண்களின் ஆலோசனை பலன் தரும். அணிகலன் சேரும். ஆரோக்கியம் அதிகரிக்கும். மாற்று யேசானை பலன் தரும். வேலைவாய்ப்புக் கூடும். விருப்பங்கள் நிறைவேறும். வியாபாரம் செழிக்கும். நிம்மதியாக இருப்பீர்கள். உத்தியோக உயர்வு உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். விவசாயம் பலன் அளிக்கும். தொழில் மேன்மைகள் உண்டு. வழக்குகள் சாதகமாகும். காதல் கசக்கும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். வி.ஐ.பியின் தொடர்பு கிடைக்கும். கணவன் அன்பு அதிகரிக்கும். உடல்சோர்வு ஏற்படும். அலைச்சல் அதிகமாகும். பணப்பிரச்சனைத் தீரும். வியாபாரம் சிறக்கும். இடமாற்றம் நன்மை தரும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். புதிய எண்ணம் நிறைவேறும். சிறப்புக்கள் சேரும். வெறுப்புக்கள் அகலும். தொழில் போட்டிகள் உருவாகி மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். சுயநலம் கூடும். ஸ்திர சொத்து சேரும். முயற்சியில் வெற்றி உண்டு. வியாபாரத்தில் விருத்தி ஏற்படும். பணிவான பேச்சுக்கள் தேவை. நல்லோர்களின் நட்பு கிட்டும். விடாமுயற்சி அவசியம். சுபச்செலவு அதிகரிக்கும். உறவினரால் பண விரயம் உண்டு. உடல் உபாதைகள் நீங்கும். நன்மைகள் பெருகும். பதவியில் பாராட்டுக்கள் வந்து சேரும். பயணம் அனுகூலம் தரும். சிரமங்கள் குறையும். பெருமைகள் உயரும். நிர்வாக அலைச்சல் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 4,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,T





**கன்னி:** பதவி உயர்வு கிடைக்கும் வாரம். பொருளாதாரம் உயரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிட்டும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. மனோ பயம் ஏற்படும். முதுகில் வலி வந்து போகும். திடீர் பயணம் உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். உடன்பிறப்பால் உதவி உண்டு. நண்பர்களால் செலவு அதிகரிக்கும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கணவன், மனைவி உறவு சீராகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தனவரவில் தடங்கல் ஏற்படும். தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. பெண்கள் பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். தொழில் வாய்ப்புக்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் முடிவிற்கு வரும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடன்பிறப்புக்களால் நன்மையுண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். பழையக்கடன் வசூலாகும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். மங்கலச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை கூடும். மனைவியால் மதிப்பு உயரும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 2,9,6,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**துலாம்:** சுப விரயம் ஏற்படும் வாரம். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். பழையக்கடன் வசூலாகும். மாற்று இன நட்பு பெருகும். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். பெண்களின் ஆலோசனை பூர்த்தியாகும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆனந்தம் குடிகொள்ளும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். கடல் கடந்த பயணம் உண்டாகும். கண்ணாடித்தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பாதிப்புக்கள் அகலும். உற்சாகம் களைகட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். பணிவும், துணிவும் கூடும். கஷ்ட காலம் மறையும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். வாகன மாற்றம் உண்டாகும். ஆன்மீகச் சிந்தனை அதிகமாகும். பணியில் கண்டிப்பு தேவை. தனவரவுகள் பெருகும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பக்கத்து வீட்டு பகை மாறும். மேன்மைகள் தொடரும். சுயதொழில் வாய்ப்பு அமையும். சாதனை படைக்கும் வாரம். குடும்ப பாசம் அதிகரிக்கும். உடல் வலி தோன்றி மறையும். விபரீத போக்கு மறையும். பேச்சில் கம்பீரம் இருக்கும். மாற்றங்களை சந்திப்பீர்கள். திட்டங்கள் எளிதாகும். பாராட்டுக்கள் உயரும். பயணம் அனுகூலம் தரும். பொறாமைகள் அதிகரிக்கும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. ஏற்றங்கள் அமையும். கௌரவம் அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். வெற்றி வீடு தேடி வரும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பிராணிகளால் தொல்லை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பண்ணாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,3,5,7
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,K




**விருச்சிகம்:** சுபசெய்தி வரும் வாரம். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரம். குடும்பத்தில் மேன்மை உண்டு. பூர்வீகச் சொத்து கிடைக்கும். திருப்தி அதிகமாகும். தந்தையின் உடல்நலம் கவனம் தேவை. வியாபாரம் திருப்தி தரும். விரக்திகள் விலகும். பாதகமான சூழ்நிலை விலகும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். வேலை பளு அதிகமாகும். உற்சாகம் களைகட்டும். யோகமான காலம். ஆடை, அணிகலன்கள் சேரும். இரும்புத் தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும்.

(தொடர்ச்சி 26 பக்கம்)

# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும்
1133



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையாஉ கோவில் தெல்லிப்பளை

*" விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்*
*விநாயகனே வேட்கை தணிவிப்பான் விநாயகனெ*
*விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்*
*கண்ணிற் பணிமின் கனிந்து. "*

தமிழுலகம் பெற்ற தலைசிறந்த வித்துவானாகிய கணேசையர் அவர்கள், 1878 ஆம் ஆண்டு புன்னாலைக்கட்டுவனில் அந்தணர் சின்னையாவிற்கும், சின்னம்மாவிற்கும் கணேசர் அருளாலே பிறந்தார். இக்காரணத்தினால் இவர் கணேசன் எனப் பெயர் பெற்றார். கருவிலேயே திருவுடையவராக விளங்கிய இவர், வித்துவசிரோன்மணி சி. பொன்னம்பலப்பிள்ளையிடத்தும், சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடத்தும் கற்றும் தெளிந்தார்.

இவரது வித்துவத்தைன்மையைப் பாராட்டி, மகாவித்துவான், வித்தவசிரோன்மணி, பேராசிரியர், தொல்காப்பியக் கடல் போன்ற பல பட்டங்கள் இவரை அலங்காரம் பெறச்செய்தது. ஆனால் இத்தகைய பட்டங்களுக்கு ஆட்படாது மருதடி விநாயகனின் பாதநிழலுக்கு ஆட்படுவதே பெருமை சேர்க்கும் என்பதில் நாட்டங் கொண்டவராக விளங்கினார். இக்காரணத்தினால் தனது துணைவியாரின் பிறந்த ஊராகிய வர்த்தலைவிளானில் குடிபுகுந்து மருதடிப்பிள்ளையாரிடத்து அகலாத அன்புடையவராக அவன் தாள் பணிந்து, அவன் புகழ்பாடி வாழ்ந்துவந்தார். இவர்களுக்குப் புத்திரபாக்கியம் கிடைக்குமுன்னரே இவரது துணைவியார் உயிர்நீத்தார். இதன் பின்னர் அகத்துறவு மேற்கொண்டு, அல்லும்பகலும் மருதடியானைச் சிந்தையில் எண்ணுவாராயினர்.

அகத்துறவு மேற்கொண்டெரழுகிய வித்துவான் கணேசையர் அவர்கள், எக்காரியம் செய்யத் தொடங்கு முன் மருதடியானிடம் ஒப்புதல் பெற்றே ஆரம்பிக்கும் வழக்கத்தைத் தன் வாழ்நாளில் மேற்கொண்டவராக விளங்கியிருக்கின்றார். மருதடிப்பிள்ளையாரின் அபிஷேகத்திற்குரிய நீரை தொலைவில் இருந்தே கொண்டு வருவது வழக்கமாகக் காணப்பட்டது. இச்சிரமத்தினைப் போக்க ஆலயத்திற்கெனச் சொந்தமாக ஒரு கிணறு தேவை என்பதை கணேசையர் அவர்கள் உணர்ந்தார்.

கடந்த காலங்களிலே ஆலயத்திற்கெனக் கிணறொன்றினைத் தோண்டும் பணியில் ஈடுபட்ட அன்பர்கள் அப்பணியைச் செவ்வனே நிறைவேற்ற முடியாமல் கைவிட்டனர். இந்நிலையில் 1934 ஆம் ஆண்டு, கணேசையர் அவர்கள் மனந்தளராது, மருதடியானை மனதிருத்தி கிணறு ஒன்றினைத் தோண்டும் பணியில் ஈடுபட்டார். கிணறு ஆழமாகத் தோண்டப்பெற்றபோதும் தண்ணீர் காணாமையால் அனைவரும் துயர் எய்தினர். கணேசயர் மனந் தளர்ந்து மருதடியானை நோக்கி, அடியேன் நீர் எடுத்து உன்னை அபிஷேகம் செய்ய எதற்காகத் தடையாக, மௌனமாக அமர்ந்திருக்கின்றாய்? இது முறையோ எனக் கண்கலங்கி மருதயொனை நோக்கி,

*" ஆடடாதே எங்கள் அரனார் திருமகனே*
*கோட்டாலே குத்தியிந்தக் கூபத்தை - நாட்டிடுவாய்*
*மாமருதி வீசா மதமத முகத்தோனே*
*காமுறுவேற் குள்ளங் கனிந்து "*

என மனமுருகி வேண்டினார். அப்பொழுது கணேசையர் வெட்டுவித்த கிணற்றிலே நீர் சுரந்தது. அன்பர்கள் இக்காட்சியைக் கண்டு பக்திப்பரவசத்திலே ஆழ்ந்தனர். கணேசையர் கண்ணீர் மல்கியவாறு மருதடிப்பிள்ளையாரை வணங்கிநின்றார். மருதடியான் புரிந்த அற்புதத்தை எண்ணி மகிழ்ந்தவாறு அவ்வாலயத்திலேயே தஞ்சமடைந்தார். மருதடியானோடு கலந்துறைந்தார். மருதடிப்பிள்ளையார் ஆலயத்திலே தவநிலை மேற்கொண்டு வாழ்ந்து வந்த இவர், மருதடியான் சந்நிதியிலேயே தன்னை நாடி வந்த வித்துவ, பண்டித, ஆசிரிய அறிஞர்களை அமரவைத்து அறிவுச் செல்வத்தை அனவருக்கும் வழங்கிவந்தார். இவரால் தோற்றுவிக்கப்பெற்ற அறிஞர்கள் தமிழ் சைவ உலகைப் பொலிய வைத்தனர்.

வித்துவான் கணேசையரின் கல்வித்திறன், ஆராய்ச்சி வன்மை, இறைபக்தி என்பவற்றைப் போற்றி கௌரவிக்கத் தமிழ் அறிஞர்கள் விரும்பினர். 1938 ஆம் ஆண்டு ஐப்பசித்திங்கள் ஐந்தாம் நாள் அவரது அறுபதாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு விழா எடுத்தனர். பேரறிஞர்களின் அன்பான வேண்டுகோளை மறுக்கமுடியாது இவ்விழாவிலே கணேசையர் அவர்கள் கலந்து கொண்டார். அங்கு இவருக்கு 2000 வெண் பொற்காசுகொண்ட பொற்கிழி வழங்கப்பட்டது.

இவ்பொற்காசினைக் கொண்டு மருதடியானுக்கு பொற்கிரீடமும், உபவீதமும் செய்வித்து அதனைச் சாத்தி இன்புற்றார். மேலும் அன்பர்களின் உதவிகொண்டு மருதடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு 1952 ஆம் ஆண்டு தூபியும், சுற்றுமதிலும் கட்டுவித்து சிறப்பளித்தததோடு முதன் முதற் கும்பாபிஷேகத்தையும் செய்வித்துப் பெருமை சேர்த்தார். இத் தொண்டுகள் கணேசையர் அவர்கள் மருதடிப்பிள்ளையார்மீது கொண்ட பற்றையும், அவரது துறவுள்ளத்தையும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. மருடிப்பிள்ளையாரினால் ஆட்கொள்ளப்பட்ட வித்துவான் கணேசையர் அவர்கள் வருத்தலைவிளான் விநாயகர்மீது, வருத்தலைவிளான் மருதடி விநாயகர் இருபாவிருபது, மருதடி விநாயகர் அந்தாதி, மருதடி விநாயகர் கலிவெண்பா, மருதடி விநாயகர் கலி நிலைத்துறை, மருதடி விநாயகர் ஊஞ்சல், மருதடி விநாயகர் இரட்டை மணிமாலை முதலியன பாடியுள்ளார். வயது முதிர முதிர மருதடியான்மீது கொண்ட பற்று அவரை உறுதியாகப் பற்றிக்கொண்டது.

*வளரும்...*

## Markham-Thornhill Ontario PC Candidate Logan Kanapathi's campaign office Opening Ceremony was very graceful.

## Markham-Thornhill மாகாண தொகுதிக்கான ஒன்றாரியோ புறோகிறசிவ் கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் வேட்பாளர் லோகன் கணபதி அவர்களின் தேர்தல் பிரச்சார அலுவலக திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது










கடந்த ஒன்றாரியோ அரசாங்கம் முதல்வர் டக் போர்ட் தலைமையில் இயங்கிய பொழுத இரண்டு அமைச்சுக்களின் பாராளுமன்றச் செயலாளராகப் பணியாற்றிய பெருமைக்குரிய லோகன் கணபதி அவர்களின் தேர்தல் பிரச்சார அலுவலகம் கடந்த 8ம் திகதி சனிக்கிழமையன்று மதியம் இடம்பெற்றது. ஆதரவாளர்கள். கட்சியின் உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூகத் தலைவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவை வழங்கினார்கள்.

லோகன் கணபதி அவர்கள் அங்கு தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது பின்வருமாறு தெரிவித்தார்.

"எமது கடந்த அரசாங்கத்திற்கும் பல சவால்கள் இருந்தன. பல அபிவிருத்தித் திட்டங்களை நாம் ஆரம்பித்து முடிக்கும் தறுவாயில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்களின் நெருக்குவாரம் கனடாவிற்கும் ஒன்றாரியோ போன்ற பெரிய மாகாணங்களுக்கும் எதிராக பிரயோகிக்கப்படுமோ என்ற அச்சம் எமது முதல்வர் டக் போர்ட் போன்ற தலைவர்களையும் பாதித்தது.

இவ்வாறான நிலையில் உடனடியாக தேர்தலை நடத்த எமது முதல்வர் மாகாணத்தின் ஆளுனரிடம் வேண்டுகோள் விடுத்தார். இந்த தேர்தலில் எமது கட்சி மீண்டும் ஆட்சியில் அமர்ந்தால் மாத்திரமே நாம் ஆரம்பித்த பல அபிவிருத்தித் திட்டங்களை பூர்த்தி செய்யலாம். குறிப்பாக ஒன்றாரியோ மாகாணத்தின் போக்குவரத்துப் பிரச்சனை பூதாகாரமாக பெருகி வருகின்ற வேளையில் 401 நெடுஞ்சாலைக்கு கீழ்ப்பகுதியில் ஒரு சுரங்கப் பாதை அமைத்து அதன் மூலம் 401 நெடுஞ்சாலையின் போக்குவரத்து வாகன நெரிசலைக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறான பல தேவைகள் மற்றும் திட்டங்களை அமுல் செய்ய எமது கொன்சர் வேர்ட்டிவ் கட்சியின் அரசாங்கம் மீண்டும் எமது முதல்வர் டக்போர்ட் தலைமையில் அமைய வேண்டும்" என்று வேண்டுகோள் விடுத்தார்.

இங்கு காணப்படும் படங்கள் தேர்தல் அலுவலகத் திறப்பு விழாவில் எடுக்கப்பட்டவையாகும்.

# இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். திருப்புமுனை ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவிற்கு வரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். விரயங்கள் அதிகமாகும். பாக்கியவான்களை சந்திப்பீர்கள். கன்னிப்பெண்களுக்கு சுபச்செய்தி வரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். பழையக்கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வாகனத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். சாதனையான எண்ணம் உதயமாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,9,2,4
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,Q




**தனுசு:** மாற்றங்கள் நிகழும் மகத்தான வாரம். வெகுமானம் கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். வேலையாட்களிடம் கவனம் தேவை. வெளிநாட்டுப் பயணம் உருவாகும். மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டுக் கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். வெற்றிச்செய்தி வரும். கலைத்தொழில் திருப்பத்தை ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. மனோ பயம் அகலும். வினோதமான எண்ணங்கள் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். தர்ம சிந்தனைகள் மேலோங்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உயர்கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு படிப்பில் உற்சாகம் கூடும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பாராட்டுக்கள் அதிகமாகும். கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். நண்பர்கள் உதவி கிடைக்கும். திருமண வாய்ப்பு வரும். பொறியியல் துறை லாபம் தரும். செயல் திறமை அதிகரிக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். இல்லத்தில் அமைதி கூடும். கற்பனை ஆற்றல் பெருகும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். கனவுகள் பலிதமாகும். முகப்பொலிவு கூடும். முயற்சி பலன் தரும். வாழ்க்கை வசதி பெருகும். வாழ்வு நிலை உயரும். மனவேதனை குறையும். பணவிரயம் ஏற்படும். தேகப்பலம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,X




**மகரம்:** நலம் விளையும் வாரம். நன்மைகள் அதிகமாகும். நட்புகள் பெருகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச் செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் வெளிப்படும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கடன் பிரச்சனை உருவாகும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். உள்ளம் மகிழும். மனைவியால் அமைதி உண்டாகும். முக்கிய எண்ணம் நிறைவேறும். உடன் பிறந்தோரால் உதவி உண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. சுப காரிய செய்தி வரும். வேலைபளு அதிகரிக்கும். தொழில் மாற்றம் ஏற்படும். சந்தோஷம் அலைமோதும். சங்கடங்கள் நிவர்த்தியாகும். குடும்ப நிர்வாகம் சீராகும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். கல்விச்சலுகைகள் கிட்டும். தொழில் போட்டி மறையும். சோதனைகள் குறையும். குடும்ப வாழ்வில் வளம் பெருகும். பணிமாற்றம் ஏற்படும். பெருமைகள் தேடி வரும். வெற்றிகள் குவியும். அரசு வகை ஆதாயம் கிட்டும். பழிச்சொல் தேடி வரும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. காதலில் கண்ணியம் கூடும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். புத்தி சாதுர்யம் கூடும். புத்திரர் வழியில் சந்தோஷம் கூடும். தீய எண்ணம் விலகும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அரசு உதவிகள் கிட்டும். வில்லங்கம் விலகும். செயல்திறமை வெளிப்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பத்ரகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,T




**கும்பம்:** எச்சரிக்கையோடு செயல்பட வேண்டிய வாரம். எதிலும் நிதானம் தேவை. எடுத்தக் காரியம் தடைப்படும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. அந்தஸ்து கூடும். பூர்வீக சொத்து சேரும். உத்தியோக வாய்ப்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். விவசாயம் மேன்மை பெறும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். காரியம் கைக்கூடும். தொழில் லாபம் கிட்டும். மனதெளிவு கிட்டும். மனைவியின் அன்பு கிட்டும். உழைப்பு உயர்வு தரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். அனுகூலமான போக்கு நிலவி வரும். புத்தாடை, ஆபரணம் சேரும். வீண் வம்பு விலகும். நிதி நிலைமை சீராகும். நிலையான வாய்ப்பு அதிகமாகும். அரசு பணியில் மாற்றம் வரும். பெண்களின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்ப அன்யோன்யம் பெருகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் விலகும். கொடுக்கல், வாங்கலில் நன்மை உண்டாகும். கவலைகள் அடியோடு விலகும். விவசாயம் கை கொடுக்கும். தொலைதூர பயணம் லாபம் தரும். பணிச்சுமை குறையும். வியாபார மந்த நிலை அகலும். கடன் உதவி கிட்டும். சொந்த தொழில் அமையும். குடும்ப அமைதி கெடும். பெற்றோர்கள் நலனில் அக்கறை தேவை. பணியில் உயர்வு கிட்டும். சுபக்காரியம் கைகூடி வரும். அரசியல் சந்தர்ப்பம் அமையும். வேற்று மதத்தினரால் உதவிகள் உண்டு. தோற்றப்பொலிவு கூடும். மாற்று எண்ணம் உதயமாகும். அளவான பேச்சு நன்மை தரும். பயணம் நன்மை தரும். மங்களகரமான காலம்.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,T




**மீனம்:** சாதனை படைக்கும் வாரம். சோதனைகள் நீங்கும். சகோதர உறவு பலப்படும். சந்தோஷம் அதிகரிக்கும். பாதகம் விலகும். பணியார்வம் கூடும். பண நெருக்கடிகள் தீரும். வீண் செலவு கூடும். வில்லங்கம் தீரும். வியாபாரம் மேன்மை தரும். வெற்றிகள் தேடி வரும். வியப்பான செய்தி வரும். வீடு, மனை யோகம் வரும். வாகன மாற்றம் வரும். வாய்ப்புக்கள் தேடி வரும். புதிய தொழிலமையும். தனவரவு பெருகும். உற்சாகத்தோடு செயல்படுவீர்கள். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குடும்ப மகிழ்ச்சி பொங்கும். இனிக்கும் சம்பவம் அமையும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குதூகலப் பயணம் உண்டு. முடிவுகள் சாதகமாகும். விரக்தி நிலை மாறும். வேண்டாத நட்பு விலகும். வெற்றிக்கான வழி பிறக்கும். தொழில் வர்த்தகம் விரிவடையும். தோல்வி நிலை மாறும். திக்கற்ற நிலை மாறும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப்போக்கு தவிர்க்கவும். பொருள் நஷ்டம் ஏற்படும். வேலைபளு கூடும். அரசியல் ஆதாயம் உண்டு. குடும்ப சச்சரவு ஏற்படும். பணியில் கவனம் தேவை. சங்கடம் அதிகமாகும். வருமான வரி தொல்லை ஏற்படும். விரோதம் ஏற்படும். படிப்பில் ஆர்வம் கூடும். ஆரோக்யம் சீராகும். தெய்வீகப் பற்று கூடும். மனச்சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். நிதி நிலைமை சீராகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: மதுரை மீனாட்சி அம்மன், அதிர்ஷ்ட எண்: 8,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,X

# குடிநீரை சுத்திகரிப்பதற்காக இலங்கை நீர் வழங்கல் சபையினால் இறக்குமதி செய்யப்பட்ட தரத்தை மீறிய 25 கொள்கலன்கள் நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட நிலையில் குழாய் நீரால் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளதா?

## "குழாய் நீரைக் குடித்தால், கவனமாக இருங்கள்"

குடிநீரை சுத்திகரிப்பதற்காக வெளிநாடுகளில் இருந்து நீர் வழங்கல் சபையினால் இறக்குமதி செய்யப்பட்ட தரத்தை மீறிய உலோகம் அடங்கிய 25 கொள்கலன்கள் ஏற்கனவே நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளமையால் குழாய் நீரால் புற்றுநோய் ஏற்படும் அபாயம் உள்ளதாக, எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் எச்சரித்துள்ளார்.

குறித்த சுண்ணாம்புக் கல்லில் தேவைக்கு அதிகமாக குரோமியம் இருப்பது விஞ்ஞான ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர் டீ.வீ.சானக்க பெப்ரவரி 6 ஆம் திகத நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

"27 கொள்கலன்கள் இலங்கைக்கு வந்துள்ளன. குரோமியம். 550 லைம் வந்துள்ளன. இந்த லைம் இலங்கைக்கு வர முன்னர் ஒரு குழு அங்கு சென்று சோதனை செய்துள்ளது. சோதனை செய்திருக்கையில், அதன் பின்னர் இலங்கைக்கு வந்த பின்னர் இலங்கை ஆய்வகத்தில் சோதனை செய்யப்பட்டது. ஆய்வகத்தில் சோதனை செய்தபோது, இந்த சுண்ணாம்பு கல்லில் குரோமியம் உள்ளடக்கம் 14 என தெரியவந்துள்ளது. அதாவது இந்த சுண்ணாம்புகளில் குரோமியம் உள்ளடக்கம் உள்ளது, இது புற்றுநோயை உண்டாக்கும்."

தரத்தை மீறிய சுண்ணாம்புக் கற்கள் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்னர் வெளிநாடுகளில் ஆய்வுக்குட்படுத்தப்பட்ட போதிலும், அவை எவ்வாறு நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என எதிர்க்கட்சி உறுப்பினர் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

"என்ன செய்வது? எமக்கு இருக்கும் முதல் கேள்வி, இது இலங்கைக்கு எப்படி வந்தது? ஏனெனில் ஒரு குழு அந்த நாட்டுக்கு சென்று அங்குள்ள குரோமியம் உள்ளடக்கத்தை சரிபார்த்தால், 14 மில்லிகிராம் கொண்ட குரோமியம் எப்படி இலங்கைக்கு வந்தது? இதுதான் முதல் கேள்விய?"

நாட்டிற்குள் பிரவேசித்த தரத்தை மீறிய புற்றுநோயை உண்டாக்கும் உலோகம் அடங்கிய சுண்ணாம்புக் கல்லை அந்த நாட்டுக்கே அனுப்புவதே (மீள் ஏற்றுமதி) வழமையான நடைமுறை எனவும் ஆனால் அதன் தரத்தை மாற்றும் முயற்சி இந்த நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக்க மேலும் சுட்டிக்காட்டினார்.

"இரண்டாவது பிரச்சினை, இலங்கைக்கு வருகிறது, இலங்கைக்கு வந்த பின்னர், எங்கள் ஆய்வகத்தில் சோதனை செய்யும் போது 14 மி.கி வருகிறது. கிலோ ஒன்றுக்கு 14 வந்த பின்னர், என்ன செய்வது, அது தனியார் ஆய்வகத்திற்கு அனுப்பப்படுகிறது. சரி என்றால் 14 ஆக இருந்தால் உடனே மறு ஏற்றுமதி செய்ய வேண்டும்.

ஆனால் இது தனியார் ஆய்வகத்திற்கு அனுப்பப்படுகிறது. இந்த தனியார் ஆய்வகத்திற்கு சென்றபோது, அங்கும் 14 மி.கி. இருக்கிறது. அதன் பின்னர் வோடர் போர்ட் ஸ்டேன்டட்டை மாற்றுவதற்கு எஸ்.எல்.எஸ்.க்கு அனுப்புகிறது. இங்கு ஸ்டேன்டட்டை மாற்றவும் புதுப்பிக்கவும் அனுப்பப்படுகிறது. யாருடைய நலன்களுக்காக இவை நடக்கின்றன? "

மக்களின் உயிரைப் பணயம் வைத்து இவ்வாறான முயற்சி யாருடைய நலன்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டது என நாடாளுமன்ற உறுப்பினர் தற்போதைய அரசாங்கத்திடம் கடுமையாக கேள்வி எழுப்பினார்.

"இலங்கையர்களுக்கு புற்றுநோயை ஏற்படுத்த, இலங்கையர்களுக்கு சிறுநீரக நோய்களைக் ஏற்படுத்த, உலகில் ஒரு கிலோகிராமுக்கு 10 மில்லிகிராம் காணப்படுகிறது. இதை மாற்ற வேண்டுமென்ற நோக்கம் யாருக்கு இருந்தது எனக் கேட்க விரும்புகிறோம்."

குடிநீரை சுத்திகரிப்பதற்காக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட புற்றுநோயை உண்டாக்கும் உலோகம் அடங்கிய சுண்ணாம்புக் கற்கள் ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ள நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடர்பிலும் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி.சானக்க அம்பலப்படுத்தினார்.

"அதேபோல், இது மறுமலர்ச்சி அரசு எனின், தூய்மையான இலங்கை என்றால், இலங்கைக்கு விசத்துடனான குடிநீர், கௌரவ தலைவரே, இந்த 25 கொள்கலன்களும் இரத்மலானைக்கு சென்றுள்ளன. இரத்மலானை பிளான்ட்டில் சில உள்ளன. காலி பிளான்ட்டில் சில உள்ளன. அம்பத்தலே பிளான்ட்டில் சில உள்ள. இந்த தண்ணீரை குடிப்பவருக்கு புற்றுநோய் வரும் அபாயம் உள்ளது. இன்றிலிருந்து குழாய்த் தண்ணீரைக் குடித்தால் கவனமாக இருங்கள்."

டீ.வீ. சானக்க வெளிப்படுத்திய பாரதூரமான விடயம் குறித்து ஆராயப்பட வேண்டுமென, எதிர்க்கட்சி உறுப்பினரின் கேள்விக்கு பதிலளித்த முன்னாள் சபாநாயகர், நாடாளுமன்ற உறுப்பினர் அசோக சபுமல் ரன்வல தெரிவித்தார்.

"லைம் எனப்படுவது அதன் முக்கிய ஆதாரமாக காணப்படுவது சுண்ணாம்புக்கல். எவ்வாறாயினும், கௌரவ உறுப்பினர் டீ.வீ. சானக்க முன்வைத்த விடயத்தில், அந்த சுண்ணாம்பில் கன உலோகங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அப்படியானால், அது ஒரு தீவிரமான நிலை. அதைப் பற்றி நாம் ஆராய வேண்டும்"

வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ சுண்ணாம்புக் கல்லில் காணப்படும் கன உலோகத்தின் சதவீதம் 14 அல்ல 12 என வர்த்தகம், வாணிபம், உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

☑ COMMERCIAL ☑ RESIDENTIAL ☑ VACANT LAND

☑ INDUSTRIAL ☑ CONSTRUCTION

"Turning your dream home into reality, your way – with simplified purchases and tailored solutions every step of the way."



Contact Us

## OUR SERVICE

☑ Purchase
(Builder Purchase, MLS Purchase, Private Purchase)

☑ Equity line of Credit

☑ Refinance ☑ Renewal



# NESAN Subramaniam

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank
FIRST NATIONAL FINANCIAL LP
TD Canada Trust
Manulife
NATIONAL BANK
Desjardins
RFA BANK OF CANADA
MCAP
HOME TRUST
EQUITABLE BANK
radius financial
RMG mortgages

மொன்றியல் நகரில் உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
கோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1506 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 14, 2025

# கனடாவின் 13 மாகாண முதல்வர்கள் நடத்திய உரையாடலுக்குப் பின்னரும் கூட ”கனடா இணைக்கப்படாது” என்று சொல்ல விருப்பப்படாத ஜனாதிபதி டிரம்ப்பின் அதிகாரிகள்



கனடாவின் 13 மாகாண முதல்வர்கள் 12ம் திகதி புதன்கிழமை அன்று வாசிங்டன் நகரில் நடத்திய கலந்துரையாடலில் ஜனாதிபதி டிரம்ப்பின் சிரேஸ்ட அதிகாரிகள் சிலர் கலந்து கொண்டனர். அவர்கள் ஜனாதிபதியின் சார்பாக பேச்சுவார்த்தைகளில் பங்கெடுத்தனர்.

எனினும் சில மணிநேர உரையாடலுக்குப் பின்னரும் கூட ”கனடா இணைக்கப்படாது” என்று சொல்ல விருப்பப்படாத மேற்படி ஜனாதிபதி டிரம்ப்பின் சிரேஸ்ட அதிகாரிகள் பற்றி மேற்படி 13 கனடிய மாகாணங்சகளின் முதல்வர்களும் அதிருப்தியும் ஏமாற்றமும் அடைந்தார் என்று எமக்குக் கிடைத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி டிரம்ப்பின் சிரேஸ்ட அதிகாரிகள் மற்றும் நிர்வாக அதிகாரிகள் கனடாவின் 13 பிரதமர்களை புதன்கிழமை சந்தித்து, கனடாவை 51 வது மாநிலமாக மாற்றுவதையும், ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் வார்த்தைகளை தீவிரமாக எடுத்துக் கொள்ள இயலாது என்றும் கூறியதாகவும் எனினும் அதற்கு அமெரிக்க அதிகாரிகள் சாதகமான பதிலைத் தெரிவிக்கவில்லை என்றும் அறியப்படுகின்றது. (தொடர்ச்சி 19ம் பக்கம்)

# Markham-Thornhill Ontario PC Candidate Logan Kanapathi's campaign office Opening Ceremony

# Markham-Thornhill ஒன்றாரியோ புறோகிறசிவ் கொன்சர்வேர்ட்டிவ் வேட்பாளர் லோகன் கணபதி தேர்தல் பிரச்சார அலுவலக திறப்பு விழா



கடந்த ஒன்றாரியோ அரசாங்கம் முதல்வர் டக் போர்ட் தலைமையில் இயங்கிய பொழுத இரண்டு அமைச்சுக்களின் பாராளுமன்றச் செயலாளராகப் பணியாற்றிய பெருமைக்குரிய லோகன் கணபதி அவர்களின் தேர்தல் பிரச்சார அலுவலகம் கடந்த 8ம் திகதி சனிக்கிழமையன்று மதியம் இடம்பெற்றது.

ஆதரவாளர்கள். கட்சியின் உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள், ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் சமூகத் தலைவர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டு தங்கள் ஆதரவை வழங்கினார்கள்.

லோகன் கணபதி அவர்கள் அங்கு தனது ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது பின்வருமாறு தெரிவித்தார். ”எமது கடந்த அரசாங்கத்திற்கும் பல சவால்கள் இருந்தன. பல அபிவிருத்தித் திட்டங்களை நாம் ஆரம்பித்து முடிக்கும் தறுவாயில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அவர்களின் நெருக்குவாரம் கனடாவிற்கும் ஒன்றாரியோ போன்ற பெரிய மாகாணங்களுக்கும் எதிராக பிரயோகிக்கப்படுமோ என்ற அச்சம் எமது முதல்வர் டக் போர்ட் போன்ற தலைவர்களையும் பாதித்தது. (தொடர்ச்சி 25ம் பக்கம்)

# ”உலகில் அதிகமாக கண் தானம் வழங்குகின்ற நாடு எது?” என்ற கேள்வி எழுகின்றபொழுது நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற இலங்கை என்ற நாட்டையே நீங்கள் காண்பீர்கள். 2025 உலகத் தலைவர்கள் உச்சி மாநாட்டில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி அநுர குமார தெரிவிப்பு



“உலகில் மிகவும் அதிகமாக கண் தானம் வழங்குகின்ற நாடு எது? என்ற கேள்வி எழுகின்றபொழுது இந்தியப் துணைக்கண்டத்தில் அமைந்துள்ள நான் பிரதிநிதித்துவம் செய்கின்ற இலங்கை என்ற நாட்டையே நீங்கள் காண்பீர்கள்.அத்தகைய பொதுநலம் கருதுகின்ற இரக்கமுள்ள இதயம்படைத்த பிரஜைகள் வசிக்கின்ற நாட்டைப் பிரதிநிதித்தும் செய்து உங்கள் முன் உரையாற்றக் கிடைத்ததையிட்டு எனது நாட்டின் பிரஜைகளின் பெயரால் நான் பெருமிதம் அடைகிறேன் என 2025 உலகத் தலைவர்கள் உச்சி மாநாட்டில் உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி அநுர குமார பெருமிதத்துடன் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஜனாதிபதி மொஹமட் பின் சயிட் அல் நஹியனின் அழைப்பையேற்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு கடந்த 10ம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திற்குப் புறப்படுச் சென்றார். இந்த சுற்றுப்பயணத்தில் ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க டுபாயில் நடைபெறும் 2025 உலகத் தலைவர்கள் உச்சி மாநாட்டிலும் உரை நிகழ்த்தவும் ஏற்பாடாகியிருந்தது. (தொடர்ச்சி 17ம் பக்கம்)

# Minister Vijay Thanigasalam appreciates the Long Standing Services, rendered by Minister Raymond Cho

# அமைச்சர் றேமண்ட் சோ அவர்களின் அனுபத்தையும் ஆற்றலையும் குறித்து பாராட்டிய அமைச்சர் விஜய் தணிகாசலம்



கடந்த வாரம் அமைச்சர் றேமண்ட் சோ அவர்களின் ஸ்காபுறோ வடக்கு தொகுதிக்கான அவரது தேர்தல் பிரச்சார அலுவலகம் திறந்து வைக்கப்பெற்றது. அதில் கலந்து கொள்ள வாய்ப்பு இல்லாவிடினும் ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதி வேட்பாளரும் அமைச்சருமான விஜேய் தணிகாசலம் தனது உதவியாளர் ஒருவர் ஊடாக வாழ்த்துச் செய்தி ஒன்றை அனுப்பி அந்தச் செய்தியை தமிழிலும் ஆங்கிலத்திலும் வாசித்து அமைச்சர் றேமண்ட் சோ அவர்களிடம் ஒப்படைத்தார்.

மேற்படி செய்தியில் விஜேய் தணிகாசலம் அவர்கள் றேமண்ட் சோ அவர்களை பின்வருமாறு வாழ்த்திப் போற்றியுள்ளார்.

றேமண்ட் சோஅவர்கள் ஸ்காபரோவின் உண்மையின் அடையாளமாக திகழ்கிறார். அவர் நகர சபை உறுப்பினராக இருந்த போதும், ஒன்றாரியோ மாநில சட்ட மன்ற உறுப்பினராகவும், அமைச்சராகவும் பணியாற்றிய வருகின்றபோது. எமது தமிழ்ச் சமூகத்தின் நலனுக்காக தொடர்ந்து பணியாற்றி வருகிறார். (தொடர்ச்சி 23ம் பக்கம்)

# தீவிரப் பிரச்சாரப் பணிகளில் இறங்கியுள்ள ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் மாகாண அரசின் வேட்பாளர் விஜய் தணிகாசலம்




கடந்த டக் போர்ட் அரசாங்கத்தின் போக்குவரத்து அமைச்சு மற்றும் வீடமைப்பு அமைச்சு ஆகியவற்றின் இணையமைச்சராக விளங்கிய விஜேய் தணிகாசலம் அவர்கள் முன்னரை விட தற்போது தனது பிரச்சாரப் பணிகளில் தீவிரமாக உழைத்து வருகின்றார். தனது தேர்தல் பிரச்சார அலுவலகத் திறப்பு விழாவினைத் தொடர்ந்து தீவிரப் பிரச்சாரப் பணிகளில் இறங்கியுள்ள ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் மாகாண அரசின் வேட்பாளர் விஜய் தணிகாசலம் தினமும் நூற்றுக்கணக்கான வாக்காளப் பெருமக்களின் இல்லங்களுக்கு நேரடியாகவே தனது தொண்டர்களோடு சென்று மக்களின் ஆதரவைப் பெற்று வருகின்றார்.

அண்மையில் திறந்து வைக்கப்பெற்ற அவரது தேர்தல் பிரச்சார அலுவலகம் வழமைபோல. அவரது பெற்றோர்களான திரு. திருமதி தணிகாசலம் தம்பதியினால் திறந்து வைக்கப்பெற்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.